SEC SECURITIES AND EXCHANGE COMMISSION OF SRI LANKA



# சரியான சமநிலையினைப் பேணுதல்

ஆண்டறிக்கை 2019



# சரியான சமநிலையினைப் பேணுதல்

எமது முக்கியமான பங்களிப்பினை கருத்திற்கொண்டு, மூலதனச் சந்தையினை முறைமைப்படுத்தி அபிவிருத்தி செய்யும் எமது திடமான பணிப்பாணையினால் வழிநடத்தப்பட்டு ஓர் வளர்ந்து வரும் நிதியியல் சந்தையினூடாக நாம் பயணித்தோம். சந்தையின் நம்பகத்தன்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் முதலீட்டாளர் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் அதேவேளை, புத்தாக்கத்தினை ஊக்குவித்தல் மற்றும் சந்தையின் வளர்ச்சி ஆகியவற்றிற்கிடையே சரியான சமநிலையினைப் பேணுவதன் மூலம் முதலீட்டாளர்கள் மற்றும் முயற்சியாளர்களின் தேவைகளை நிறைவேற்றும் ஆற்றலுடைய சரியான சூழலமைப்பினை நாம் உருவாக்கினோம்.

## பணிநோக்கு

நியாயமான, திறமைமிக்க, ஒழுங்கான மற்றும் வெளிப்படையான மூலதனச் சந்தை ஒன்றை ஊக்குவிப்பதற்கு, விருத்தி செய்வதற்கு மற்றும் பராமரிப்பதற்கு

## தொலைநோக்கு

பயனுறுதிமிக்க, திறமைமிக்க மற்றும் உயிர்ப்பான மூலதனச் சந்தை முறைமைப்படுத்தலுக்கு பிராந்தியத்திலேயே சிறந்த முறைமைப்படுத்துபவராக வருவது

### எம்மைப் பற்றி

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு (இ.பி.ப.ஆ.) 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் நிறுவப்பட்டதுடன் இது 1991 ஆம் ஆண்டின் 26ஆம் இலக்கச் சட்டம், 2003 ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கச் சட்டம், 2009 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்கச் சட்டம் என்பவற்றினால் திருத்தியமைக்கப்பட்டது. இ.பி.ப.ஆ. நிதி அமைச்சின் ஆதிக்க வரம்பின் கீழ் வருகின்றது.

# உள்ளடக்கம்


தலைவரின் மீளாய்வு | 4-5

பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு | 6-12

விரிவான, செயல் சார்ந்த, நடைமுறையான மற்றும் அளவிடக்கூடிய மூலதனச் சந்தை மூலோபாயம் 2020 - 2025 | 13

முக்கிய முறைமைப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி மூலோபாயங்கள் | 14-15

ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் | 16-21

சிரேஷ்ட முகாமைத்துவம் | 22-23

முகாமையாளர்கள் | 24

பணியாட்டொகுதி அங்கத்தவர்கள் | 25-27

செயற்பாட்டு மீளாய்வு | 28-58

மேலதிகத் தகவல்கள் | 59-63

வருடத்தின் சிறப்பம்சங்கள் | 64-67

**நிதியியல் அறிக்கைகள்**

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை | 70-72

நிதி நிலைமைக் கூற்று | 73

நிதிச் செயற்திறன் கூற்று | 74

ஒதுக்கங்களில் ஏற்பட்ட மாற்றங்களின் கூற்று | 75

காசுப் பாய்ச்சல் கூற்று | 76-77

கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளும் | 78-92

தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்

கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை | 93-94

நிதி நிலைமைக் கூற்று | 95

நிதிச் செயற்திறன் கூற்று | 96

தேறிய சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றங்களின் கூற்று | 97

காசுப் பாய்ச்சல் கூற்று | 98

கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளும் | 99-100

கூட்டாண்மைத் தகவல்கள் **உள் பின்புற அட்டை**

# தலைவரின் மீளாய்வு



**"கடந்த வருடத்தில் பொறுப்பேற்ற கடமையின் பிரதான உந்துகை பின்வருவனவற்றை எதிர்கொள்ளும் இலக்கினை கொண்டதாயிருந்தது. முறைமைப்படுத்தல் இடைவெளி மற்றும் பாதுகாப்பு, பொருத்தமான இடர்நேர்கை குறைத்தல் வழிமுறைகளை கடைப்பிடித்தல், இடையீட்டாளர்களது மேற்பார்வையினை பலப்படுத்துதல் மற்றும் நிதியியல் கல்வியறிவினை மேம்படுத்தல் என்பனவாகும்."**

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் (இ.பி.ப.ஆ.) தலைவர் என்ற ரீதியில் எனது முதலாவது ஆண்டறிக்கையினை சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். மூலதனச் சந்தைகள் வணிகங்களுக்கு தங்களது நிதியளித்தல் தேவைப்பாடுகளை சந்திப்பதற்கு ஓர் முக்கிய நிதியளித்தல் மூலமாகவும் மற்றும் முதலீட்டாளர்களுக்கு செல்வத்தை உருவாக்கும் சிறந்த வாய்ப்புக்களாகவும் செயற்படுகின்றன. மூலதனச் சந்தை வகிக்கும் முக்கிய பங்களிப்பினை கருத்திற்கொண்டு, வணிகங்கள் மற்றும் முதலீட்டாளர்களது கேள்விகளை சந்திப்பதற்கு பொருத்தமான ஒழுங்குவிதிகள் காணப்படுவதனை உறுதிப்படுத்துமாறு இ.பி.ப.ஆ. வேண்டப்படுகின்றது. எனவே, எமது பொறுப்பாணையினை விநியோகிப்பதற்கான எமது கடப்பாட்டில் நாம் நிலைமாறாது இருக்கும் வேளை, நாம் திடமான முதலீட்டாளர் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல் மற்றும் ஓர் வளமான மூலதனச் சந்தையினை பேணுவதற்கு தேவைப்படும் நெகிழ்வுத்தன்மையினை வழங்குதல் என்பவற்றிற்கிடையே நாம் ஓர் சமநிலையினை மேற்கொள்ளவும் எண்ணியுள்ளோம்.

இம்மீளாய்வில், 2019 இல் எமது கடமையினை தீர்மானிக்கும் பிரதான பிரிவுகள் மற்றும் எதிர்வரும் வருடங்களில் எமது தொலைநோக்கினை வழங்குதல் ஆகிய இரண்டையும் பிரதிபலிப்பதற்கு நான் இந்த சந்தர்ப்பத்தினை எடுக்கின்றேன். கடந்த வருடத்தில் பொறுப்பேற்ற கடமையின் பிரதான உந்துகை பின்வருவனவற்றை எதிர்கொள்ளும் இலக்கினை கொண்டதாயிருந்தது. முறைமைப்படுத்தல் இடைவெளி மற்றும் பாதுகாப்பு, பொருத்தமான இடர்நேர்கை குறைத்தல் வழிமுறைகளை கடைப்பிடித்தல், இடையீட்டாளர்களது மேற்பார்வையினை பலப்படுத்துதல் மற்றும் நிதியியல் கல்வியறிவினை மேம்படுத்தல் என்பனவாகும். முதலாவதாக, 2019 இல் எமது முக்கிய சாதனைகளில் சிலவற்றை நான் எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

### வலுவான முறைமைப்படுத்தல் வரம்புறுகை

முறைமைப்படுத்தலானது மூலதனச் சந்தையின் நேர்மையினை உறுதிப்படுத்தவும் மற்றும் பலப்படுத்தவும் அவசியம் எனவும் மற்றும் அதன் அபிவிருத்திப் பாதையில் தடையாக காணப்படக்கூடாதெனவும் நாம் நம்புகின்றோம். இதற்கமைய, சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கு ஒத்த சிறந்த மற்றும் செயற்திறன் மிக்க முறைமைப்படுத்தல் வரம்புறுகையினை வழங்குவதற்கு புதிய பிணையங்கள் பரிவர்த்தனை சட்டத்தினை வெளிப்படுத்தல் ஓர் முன்னுரிமையாகக் கருதப்பட்டது. புதிய சட்டத்தினை வரைவதற்கு கணிசமானளவு வேலை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இது பல சட்டரீதியான ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது. வரைவுச் சட்டமானது மேம்படுத்தப்பட்ட ஆளுகை நியமங்கள், மத்திய எதிர்தரப்பினராக (ம.எ.த.) செயலாற்றும் தீர்வக இல்லமொன்றினை நிறுவுவதற்கு வசதியளித்தல், பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பரிவர்த்தனையினை முறைமைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள், புதிய வகையிலான சந்தை இடையீட்டாளர்களை அங்கீகரித்தல் மற்றும் சந்தை துர்நடத்தைகளை கையாள்வதற்காக பரந்த அளவிலான வலியுறுத்தல் பொறிமுறைகளின் அறிமுகம் ஆகியவற்றை அடைவதற்கு முனைகின்றது.

வரைவுச் சட்டமானது முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலும் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் நிமித்தம் அதனை பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு சாத்தியமின்றி காணப்படுகின்றது. வரைவுச் சட்டத்தினை புதிய பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தும் செயல்முறையானது பொதுத் தேர்தலின் பின்னரே ஆரம்பிக்கப்படவேண்டியுள்ளது. இதற்கு தயாராகும் வண்ணம், புதிய ஆணைக்குழுவானது வரைவுச் சட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை மீளாய்வு செய்யும் செயற்பாட்டில் தற்போது ஈடுபட்டுள்ளது. அரசாங்கமானது விரைவாக இதனை சட்டமாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் என இ.பி.ப.ஆ. நம்பிக்கையுடன் உள்ளது. இது சமநிலையான, பயனுறுதிமிக்க மற்றும் விகிதாசார முறைமைப்படுத்தலை இயலுமையாக்கும்.

### செயல்திறன் மிக்க இடர்நேர்கை அடிப்படையிலான மேற்பார்வை

நிதியியல் ஸ்திரத்தன்மை மற்றும் வணிக செயற்படுத்தல் திறன் ஆகியவற்றில் விசேட கவனத்துடன் முறைமைப்படுத்தப்படும் நிறுவனங்களின் இடர்நேர்கையினை இனங்காண்பதற்காக, கண்காணிப்பதற்காக மற்றும் கட்டுப்படுத்துவதற்காக, இ.பி.ப.ஆ. இந்நிறுவனங்களில் ஓர் இடர்நேர்கை முனைப்பான அணுகுமுறையினை கடைப்பிடிப்பதனை தொடர்ந்தது. இலங்கையின் பிணையங்கள் துறையில் எழக்கூடிய சாத்தியமான பணம்

சலவைசெய்தல் மற்றும் பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்கையினை கருத்திற்கொண்டு, நாம் எமது முறைமைப்படுத்தப்படும் நிறுவனங்களுக்கு பணம் சலவை செய்தலுக்கு எதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதனை தடுத்தல் (ப.ச.செ.எ./ப.நி.அ.) ஒழுங்குவிதிகளை பலப்படுத்தும் நோக்கில் நாம் அவர்களுக்கு வழிகாட்டி மற்றும் விழிப்புணர்வு அமர்வுகளை நடாத்தினோம். இடர்நேர்கை மதிப்பீட்டு வினாத்தொடரின் மூலம் இனங்காணப்பட்ட உயர்ந்த இடர்நேர்கை பிரிவுகளின் அடிப்படை மற்றும் பங்குத்தரகு கம்பனிகளுக்கான மேற்பார்வை வரம்புறுகையின் கீழ் இவ்வருடத்தில் நாம் ப.ச.செ.எ /ப.நி.அ. என்பவற்றில் கவனஞ்செலுத்தி தளத்திலான மேற்பார்வைகளை நடாத்தினோம்.

முறைமைப்படுத்தல் அறிக்கையிடலானது மிகவும் துல்லியமாகவும், பயனுறுதிமிக்கதாகவும் மற்றும் நிலைபேறுள்ளதாகவும் காணப்படுவதனை உறுதிசெய்வதற்காக நாம் தற்போதுள்ள எண்மின் நிலை அறிக்கையிடல் மற்றும் முறைமைப்படுத்தல் செயல்முறையினை மேலும் விரிவாக்குவதற்கான சாத்தியப்பாட்டினை ஆராய்கின்றோம்.

### முதலீட்டாளர் கல்வி மற்றும் நுண்ணறிவினை மேம்படுத்தல்

முதலீட்டாளர்கள் இலங்கையின் மூலதனச் சந்தை குறித்து ஓர் ஒழுங்கான புரிந்துணர்வினை தாம் முதலீடு செய்வதற்கு முயற்சிக்கும் முன்னர் அத்தகைய முதலீடுகள் மேற்கொள்வதிலான நன்மைகள் மற்றும் இடர்நேர்கைகளை உணர்ந்துகொள்ளல் அவசியமானதாகும். செயலமர்வுகள், அச்சு மற்றும் இலத்திரணியல் ஊடக பிரச்சாரங்கள் போன்ற வடிவில் ஓர் பல் முனை ஈடுபாட்டு மூலோபாயத்தினூடாக இ.பி.ப.ஆ. அதன் நாடுபூராவுமான முதலீட்டாளர் விழிப்புணர்வினை தொடர்ந்தது. எமது மும்மொழியிலான வெளிக்கள நிகழ்ச்சித்திட்டங்களினூடாக நாம் 10,000 பங்குபற்றுனர்களுக்கு அதிகமானோருடன் ஈடுபாடு மேற்கொண்டோம். இ.பி.ப.ஆ. கல்வி அமைச்சுடன் மேற்கொண்ட உடன்படிக்கைக்கு மதிப்பளிப்பதனை தொடர்ந்ததுடன் வர்த்தகம் மற்றும் பொருளியல் பிரிவுகளிலுள்ள உயர்தர மாணவர்களுக்கு ஓர் மாகாண தொலைக்காட்சி புதிர் நிகழ்ச்சித்திட்டத்தினை ஆரம்பித்தது. சர்வதேச பிணையங்கள் ஆணைக்குழுக்கள் ஒழுங்கமைப்பின் உலக முதலீட்டாளர் கிழமையுடன் ஒன்றிப்பொருந்துவதற்காக இ.பி.ப.ஆ. மூன்று மொழிகளிலும் கல்விக் கேலிச்சித்திரங்கள், அறிவித்தல் மற்றும் கட்டுரைகள் போன்ற வடிவில் பல்வேறு பொது விழிப்புணர்வு செய்திகளை பிரசுரித்தது. இவை திடமான தனிப்பட்ட நிதியியல் திட்டமிடலுக்கான அவசியத்தில் கவனஞ்செலுத்தியது.

### சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான நிதி திரட்டலை விரிவாக்குதல்

மூலதனச் சந்தைகள் உள்ளடக்கியவையாக காணப்படவேண்டுமாயின், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்கள் (சி.ந.நி.) சந்தை அடிப்படையிலான நிதியளிப்பினை பெற்றுக்கொள்வதற்கு இயலுமையாயிருத்தல் கட்டாயமாகும். எனவே, இ.பி.ப.ஆ. கொழும்பு பங்குப் பரிவர்த்தனையுடன் (கொ.ப.ப.) சேர்ந்து சி.ந.நி. பட்டியலிடுவதற்காக "வலுவளித்தல் பலகை" எனும் ஓர் மேடையினை ஆரம்பித்தது. இந்த பட்டியலிடல் மேடையினூடாக மூலதனத்தை திரட்டுவது தொடர்பான சிறப்பான விழிப்புணர்வினை உருவாக்குவதற்காக, இ.பி.ப.ஆ. கொ.ப.ப. மற்றும் பிராந்திய சம்மேளனங்களுடன் இணைந்து சி.ந.நி. மற்றும் ஏனைய தொழில்முனைவோரை இலக்குவைத்து விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது. 500 க்கும் அதிகமான பங்குபற்றுநர்கள் இந்த நிகழ்ச்சித்திட்டங்களில் சமூகமளித்து பேச்சாளர்கள், குழுக்கள் மற்றும் முதலீட்டு வங்கிகளுடன் கலந்துரையாடினார்கள்.

சி.ந.நி. இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக அமைந்துள்ளதுடன் மொத்த தேசிய உற்பத்தியின் 50% க்கும் அதிகமான பங்களிப்பு செய்வதுடன், உயர்ந்த மட்டத்திலான சமூக பொருளாதார நலன்களை உருவாக்குவதன் காரணமாக மூலதனச் சந்தையூடாக அத்தகைய நிறுவனங்களுக்கு நிதியளிப்பதற்கு வசதிசெய்வதில் நாம் கடப்பாடுடன் உள்ளோம்.

### வெளிவாரி பங்காளிகளுடனான ஈடுபாடு

இ.பி.ப.ஆ. இன் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு வசதியளிப்பதற்காக எமது பங்காளிகளுடன் ஈடுபடுதல் குறித்து நாம் கவனத்துடன் உள்ளோம். 2019 இல், கொள்கை மற்றும் முறைமைப்படுத்தல் விடயங்கள் தொடர்பான சிக்கல்களில் கருத்துக்களை சேகரித்து கலந்துரையாடுவதற்காக துறைசார் பங்குபற்றுநர்கள், விசேடமாக பட்டியலிடப்பட்ட கம்பனிகள், கணக்காய்வாளர்கள், பங்குத்தரகர்கள் மற்றும் நம்பிக்கை அலகுப்பொறுப்பாட்சி முகாமைத்துவ கம்பனிகளுடன் நாம் தொடர்ந்து கலந்தாலோசனைகளை மேற்கொண்டோம். இந்த கலந்தரையாடல்களூடாக நாம் பெறுமதிமிக்க உள்ளீடுகளை பெற்றுக்கொண்டமையினால், அவர்களுடனான எமது உறவினை மேலும் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனை நாம் உறுதிப்படுத்துவோம். இது பாரிய மூலதனச் சந்தை கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் முறைமைப்படுத்தல் விதிமுறையின் சீரமைப்பிற்கு உதவுவது மாத்திரமன்றி உரிய தொழில்சார் பங்களிப்புகள் மற்றும் பொறுப்புக்களை புரிந்துகொள்ளவும் மதிப்பதற்கும் உதவும்.

### முன்னோக்கி நகர்தல்

ஜனவரி 2020 இல் நியமிக்கப்பட்ட புதிய ஆணைக்குழுவானது துறைசார் பங்காளிகளுடன் ஓர் தொடரான கூட்டங்களை ஆரம்பித்து மூலதனச் சந்தையினை அபிவிருத்திசெய்வதற்கு அவர்களது கருத்துக்களை பெற்றுக்கொண்டதுடன் அவர்கள் முகங்கொடுக்கும் சிரமங்களையும் செவிமடுத்தோம். இந்த ஆலோசனைகள் உட்கட்டமைப்பினை விருத்திசெய்தல், சந்தை முறைமைப்படுத்தலை பலப்படுத்துதல் மற்றும் எளிமையாக்கல், புதிய கருவிகளை விருத்திசெய்தல் மற்றும் முதலீட்டாளர்கள் மற்றும் வழங்குநர்களுக்கான விழிப்புணர்வினை மேம்படுத்தல் போன்றவற்றிற்கு சில பெறுமதிமிக்க யோசனைகள் மற்றும் நுண்ணறிவுகளை வெளிக்கொணர்ந்தன. இந்தச் சவால்களை துரிதமாக நிறைவேற்றுவதற்கு, இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. இன் கூட்டுக் குழுக்களை நியமித்து இவற்றை ஆராய்ந்து பரிந்துரைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம்.

இதற்கும் மேலாக, மூலதனச் சந்தையில் விரைவூக்கம் மற்றும் தொழிற்பாட்டு பயனுறுதியினை ஊக்குவிப்பதற்காக, கொ.ப.ப. உடன் இணைந்து இ.பி.ப.ஆ. முதலீட்டாளர்களுக்கு பின்வருவனவற்றை வழங்குவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளும். முழுவதுமான எண்மின் நிலை அனுபவம், தடையற்ற பிந்தைய வர்த்தகம் மற்றும் தீர்ப்பனவு மற்றும் இலத்திரணியல் கட்டளைக் குறிப்புகள் மற்றும் இலத்திரணியல் கூற்றுக்கள் என்பவையாகும். புத்தாக்கம் மற்றும் பாரிய மூலதனச் சந்தை அபிவிருத்தியினை இயக்குவதற்காக பங்குத்தரகர் விதிகள், மத்திய வைப்புத் திட்ட முறைமை விதிகள் மற்றும் பட்டியலிடல் விதிகள் ஆகியவற்றின் மீளாய்வு மற்றும் திருத்தங்களிலான செயல்முறையானது ஏற்கனவே நடைபெற்றவண்ணமுள்ளன.

இ.பி.ப.ஆ. இன் கடமையினை செயற்படுத்துவதற்காக தங்களது பெறுமதிமிக்க நேரத்தினை செலவழித்தமைக்காகவும், அவர்களது நிபுணத்துவம் மற்றும் அனுபவத்தினை பகிர்ந்துகொண்டமைக்காக அனைத்து ஆணைக்குழு அங்கத்தவர்களுக்கு நன்றி தெரிவிப்பதன் மூலம் நான் நிறைவுசெய்ய விரும்புகின்றேன். செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பணியாட்டொகுதியினரது ஒத்துழைப்பு மற்றும் தாராளமான உறுதுணை மற்றும் கடின உழைப்பிற்கு எனது ஆழ்ந்த பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். நான் மான்புமிகு பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு நிதி அமைச்சர் மற்றும் எமக்கு பொறுப்பாயுள்ள அமைச்சர் என்ற ரீதியிலும், திறைசேரியின் செயலாளர் திரு. எஸ்.ஆர். ஆட்டிகல, நிதி அமைச்சின் உத்தியோகத்தர்கள் மற்றும் எமது அனைத்து பங்காளிகளுக்கும் ஆணைக்குழுவினது சீரான செயற்பாட்டிற்கும் வழங்கிய உறுதுணைக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.



**விராஜ் தயாரத்ன ஜ.ச.**
தலைவர்

20 ஜுலை 2020

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு



**நாட்டிலுள்ள ஏனைய பல துறைகளைப் போன்று எமது மூலதனச் சந்தையும் பல வாய்ப்புக்களை தவறவிட்டுள்ளதுடன் அதன் உண்மையான ஆற்றல் வளத்திற்கு செயலாற்றவில்லை. மெய்யாகவே, ஓர் நாட்டைப் பொறுத்தளவில் நாம் ஓர் அபிவிருத்தியடைந்த தேசமாக மாறுதல், செழிப்பு மற்றும் அனுகூலங்களுடனான விழுத்தொடரும் ஓர் தேசமாக வருதல் என நாம் கனவு கண்டுகொண்டிருந்தோம். இந்த நோக்கத்தினை நிறைவேற்றுவதற்காக, நாம் தேவைப்படும் திறமையினை அடைவதற்கு கடப்பாட்டுடனும் விடாமுயற்சியுடனும் செயற்படவேண்டியுள்ளது.**

எமது பணியின் சுருக்கத்தினை சமர்ப்பித்தல் மற்றும் 2020 ஆம் ஆண்டு மற்றும் அதற்கப்பால் எமது திட்டம் மற்றும் எதிர்பார்ப்புக்களது ஓர் அறிகுறி ஆகியவற்றை வழங்குவது எனது பாக்கியமாகும்.

நாட்டிலுள்ள ஏனைய பல துறைகளைப் போன்று எமது மூலதனச் சந்தையும் பல வாய்ப்புக்களை தவறவிட்டுள்ளதுடன் அதன் உண்மையான ஆற்றல் வளத்திற்கு செயலாற்றவில்லை. மெய்யாகவே, ஓர் நாட்டைப் பொறுத்தளவில் நாம் ஓர் அபிவிருத்தியடைந்த தேசமாக மாறுதல், செழிப்பு மற்றும் அனுகூலங்களுடனான விழுத்தொடரும் ஓர் தேசமாக வருதல் என நாம் கனவு கண்டுகொண்டிருந்தோம். இந்த நோக்கத்தினை நிறைவேற்றுவதற்காக, நாம் தேவைப்படும் திறமையினை அடைவதற்கு கடப்பாட்டுடனும் விடாமுயற்சியுடனும் செயற்படவேண்டியுள்ளது.

எமது பொருளாதாரம் முகங்கொடுக்கும் அரசிறை வருமானம் மற்றும் நாணயக் கட்டுப்பாடுகளுடன் நாட்டின் வளர்ச்சி எறிபாதையினை மீள்நிலைப்படுத்துவதில் தனியார் துறையின் முக்கிய பங்களிப்பானது தெளிவாக விளங்குகின்றது. இதற்கமைய, தனியார் துறையின் வளர்ச்சிக்கான உத்வேகத்தினை வழங்கக்கூடிய திடமான மூலதனச் சந்தையின் கடுமையான தேவையானது முன்பிலும் பார்க்க அதிகமாக உணரப்படுகின்றது. இ.பி.ப.ஆ. க்கு ஓர் உயரிய முறைமைப்படுத்துபவர் என்ற வகையில் ஓர் திடமான மற்றும் நீடிப்புத்திறன்மிக்க மூலதனச் சந்தையினை உருவாக்குவதற்கு பொருத்தமான அனைத்து துறைகளையும் முறைமைப்படுத்தும் ஆழமான பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### நாட்டின் பொருளாதார வளர்ச்சி:

**மூலதனச் சந்தை எவ்வாறு பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு, வருமானம் மற்றும் வாழ்க்கைத் தரத்தினை ஊக்குவிக்கும்.**

மெரினா மசுகாட்டோ அவரது புத்தகமான 'தொழில்முனைவுள்ள அரசு' இல் விவாதிக்கும், புத்தாக்கம் மற்றும் பொருளாதார உருமாற்றத்திற்கு தலைமை தாங்கி வழிநடத்துவது ஓர் அரசாங்கத்தின் கடமையாகும். மெய்யாகவே, மசுகாட்டோ அவர்கள் சீனா, தென் கொரியா, சிங்கப்பூர், தாய்வான் மற்றும் மலேஷியா போன்ற நாடுகளின் விரைவேகமான வளர்ச்சிக்கு வணிக உலகில் அரசின் சரியான ஈடுபாடு காரணமென்பதுடன், இது தனியார் துறையில் ஓர் தலையிடுபவராக அன்றி, நன்கு வடிவமைக்கப்பட்ட, தொடர்ச்சியான மற்றும் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்ட அரச தலையீட்டினூடாக வளர்ச்சி மற்றும் புத்தாக்கத்தில் ஓர் முக்கிய பங்காளியாக ஆகும்.

மேலும். ஹாவார்ட் புகழ்பெற்ற பேராசிரியர் ரிகார்டோ ஹுஸ்மன் அவர்களும் இலங்கையின் பிரதான பிரச்சனை என்னவெனில் தனியார் துறையானது ஆடைகள் போன்ற ஒப்பீட்டளவில் எளிதான உற்பத்திகளிலிருந்து உயர்ந்த பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்கள் மற்றும் தொழில்நுட்பரீதியாக மேம்பட்ட துறைகளுக்கு நகர்வதற்கான ஆற்றலின்றி காணப்படுவதாகும். சில ஆசிய நாடுகளின் வெற்றியினைப் பார்த்தோமானால், இலங்கையைப் போன்றே ஒரே நேரத்தில் ஆடை உற்பத்தியினை ஆரம்பித்திருந்தாலும், அவற்றின் தனியார் துறையானது ஆடை உற்பத்தியிலிருந்து இலத்திரணியல் மற்றும் கைத்தொழில் உற்பத்திகள் போன்ற பெறுமதியான துறைகளுக்கு நகரக்கூடிய கொள்திறனைக் கொண்டிருந்தன.

முதலீடுகள் எம்மைத் தாண்டி வேறு இடங்களுக்குச் செல்வதைப் பார்க்கும்போது மனம் சோர்வடைகின்றது. தென்கொரியா, சிங்கப்பூர் மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளிலிருந்தான நிதியியல் மற்றும் பிணையங்கள் சட்ட சீர்திருத்தங்களிலிருந்து பெறப்பட்ட பாடங்கள் வெற்றிகரமான சீர்திருத்தங்கள் நேரடி முதலீட்டிற்கான உட்பாய்ச்சல்களது அதிகரிப்பினை தீவிரப்படுத்துகின்றது என்ற சான்றினை வழங்குகின்றது. மிகவும் சமீபத்தில், ஓர்

வளர்ச்சியடையும் பொருளாதாரம் மற்றும் புதிய பட்டியலிடல்கள் அலையின் மூலம் மேம்படுத்தப்பட்டு பாரிய வெளிநாட்டு முதலீட்டாளர்களிலிருந்து வியட்நாம் நிதியினை பெறக்கூடியதாயிருந்தது. சமீபத்தைய காலத்தில் ஆசியாவிலேயே சிறந்த இலாபங்களை வியட்நாம் உரித்துவமானது அடைந்துள்ளதுடன், ஹோ சீ மின் பங்குப் பரிவர்த்தனை உலகில் சிறந்த செயற்திறனுள்ள பங்குப் பரிவர்த்தனைகளில் ஒன்றாகவும் காணப்படுகின்றது. இப்பரிவர்த்தனையானது 'எல்லைப்புற சந்தையாக' இன்னமும் வகைப்பட்டிருந்தாலும் இதன் புரள்வானது கடந்த இரண்டு ஆண்டுகளில் இரட்டிப்படைந்துள்ளது.

உலகளாவிய நிதியங்களும் உயர்ந்த முதலீட்டாளர்களும் இந்த நாடுகளின் பொருளாதார வெற்றிக் கதைகளுக்கு ஈர்க்கப்படுவதாக பகுப்பாய்வாளர்கள் கூறுகின்றார்கள். இவர்கள் உலகளாவிய வர்த்தக முறையுடன் ஒருங்கிணைப்பதுடன் வெளிநாட்டு உற்பத்திக்கு ஓர் மையமாக தங்களை நிலைப்படுத்தியும் கொள்கின்றார்கள். சுவாரஸ்யமாக, இந்த நாடுகள் தற்போது சீனா மற்றும் அமெரிக்கா இடையேயான அதிகரிக்கும் பதற்றங்களிலிருந்து நன்மையடைந்துள்ளதுடன், உயர்ந்த கம்பனிகள் இரட்டிப்பு பட்டியலிடல்களை கருத்திலெடுத்துள்ளதுடன் சீனா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து கணிசமான உற்பத்தியினை நகர்த்தியுள்ளதுடன், பெறுமதி சேர்க்கும் தொழிற்சாலைகளை உருவாக்கி இவை தற்போது இந்த நாடுகளின் பொருளாதாரங்களை மேம்படுத்துவதற்கு பங்களிப்பு செய்கின்றன.

பொருளாதார வளர்ச்சி மற்றும் உருமாற்றம் என்பவற்றில் அரசாங்கத்தின் உயிர்ப்பற்ற பங்களிப்பு பற்றிய மரபுசார் கருத்துக்களிலான பல்வேறு 'பழங்கதைகள்' மறுதலிக்கப்பட்டாலொழிய, எமது நாடு முகங்கொடுக்கும் அமைப்புசார் பொருளாதார சவால்களை சந்திப்பதற்கு எதிர்பார்க்க இயலாது என்பதை நான் இங்கு கூறுகின்றேன். அதேபோன்று, இ.பி.ப.ஆ. இனை அதன் பாரம்பரிய பங்களிப்பு மற்றும் மரபுசார் அணுகுமுறைக்கு மட்டுப்படுத்த இயலாது. இ.பி.ப.ஆ. அதன் பங்களிப்பினை பின்வருவனவற்றிற்காக மீள்அளவிடல் இன்றியமையாததாகும். மூலதன உருவாக்கத்திற்கு உந்துதலை வழங்கும் அதேவேளை சந்தை முறைமைப்படுத்தல் மற்றும் சந்தை அபிவிருத்தி என்பவற்றிற்கிடையே சரியான சமநிலையினையும் பேணுதல் வேண்டும்.

சுருக்கமாகக் கூறுவதாயின், அந்த நாடுகளின் அரசாங்கங்கள் தனியார் துறை செழிப்படைவதற்கான ஓர் ஏற்ற சூழலை எவ்வாறு உருவாக்கியுள்ளன மற்றும் எவ்வாறு அவை அவற்றின் கம்பனிகள் உலகளவில் பிரசித்தியடைவதற்கு உதவியுள்ளன மற்றும் நாம் ஏன் எமது தனியார் துறைக்கு அத்தகைய ஓர் மட்டத்தை அடைவதற்கு உதவியளிக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுவது எனது நோக்கமாகும்.

மெய்யாகவே, எமது சந்தைகள் அவற்றின் வளர்ச்சி மற்றும் விரிவாக்கலுக்கு அரசாங்கம் உதவும்வரை காத்திருந்ததுடன் நாம் உதவுவதில் மிகவும் மெதுவாகவே இருந்துள்ளோம். உதாரணமாக, நாம் தற்போது தான் ஆதனவியல் முதலீட்டு நம்பிக்கைப் பொறுப்புகளை சந்தைக்கு அறிமுகம் செய்தோம், இவை ஆகக் குறைந்தது பத்து வருடங்களுக்கு முன்னர் செய்திருக்கவேண்டிய ஒன்றாகும்.

### மூலதனச் சந்தை தேசிய முயற்சிகளுக்கு உதவலாம்

தேசிய அளவில் முக்கியத்துவம் வாய்ந்த முன்னெடுப்புகளில் தனியார் துறை பங்களிப்பு மற்றும் அபிவிருத்தி திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காக விசேடமாக பொது சந்தைகளை அணுகுவதற்கு மற்றும் அரசாங்கத்தின் தேவைப்பாடுகளுக்கு நிதியினை திரட்டுவதற்கு வசதியளிக்கும் சந்தை உட்கட்டமைப்பினை கொ.ப.ப. கொண்டுள்ளது. தனியார் நிறுவனங்களைப் போன்றே, அரசாங்கமும் முன்னோக்கி செல்லும்போது பல்வேறு மற்றும் மாற்று நிதியளித்தல் மூலங்களை கவனிக்கும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

பலவருடங்களாகவே காணப்படும் எமது பிரச்சனை என்னவெனில் தொடர்ச்சியாக ஓர் குறிப்பிடத்தக்களவு காலத்திற்கு 6% க்கும் அதிகமான வளர்ச்சி வீதத்தினை நீடிக்க முடியாதிருந்த வேளை, ஆசியாவில் சமீபத்தில் அபிவிருத்தியடைந்த நிலையினை அடைந்த நாடுகள் தொடர்ச்சியாக ஓர் கணிசமானளவு காலப் பகுதியில் 7-8% க்கும் அதிகமான வளர்ச்சியினை எட்டின. ஜனாதிபதியின் செயலாளர், கலாநிதி.பி.பி. ஜயசுந்தர அவர்கள் டெய்லி எவ்.டி. பத்திரிக்கைக்கான நேர்காணலில் அவர் பின்வரும் கருத்தினை நம்பிக்கையுடன் தெரிவித்தார். தொற்றின் பின்னரான அடங்கிப்போயுள்ள பொருளாதார சூழலானது இலங்கைக்கு ஓர் பாரிய வாய்ப்பாக காணப்படுகின்றது. எட்டமுடியாது காணப்படுகின்ற 7-8% வளர்ச்சிக்கு தயாராகி அதனை அடைவதற்கு, நீடிப்புத்திறன் மிக்க சமூக பொருளாதார வளர்ச்சியினை உருவாக்குவதற்கு சாமர்த்தியம், சுறுசுறுப்பு மற்றும் மிகவும் மீளெழுச்சியுடன் மாற்றமடைவது முக்கியமாகும்.

**மெரினா மசூகாட்டோ அவரது புத்தகமான 'தொழில்முனைவுள்ள அரசு' இல் விவாதிக்கும், புத்தாக்கம் மற்றும் பொருளாதார உருமாற்றத்திற்கு தலைமை தாங்கி வழிநடத்துவது ஓர் அரசாங்கத்தின் கடமையாகும். மெய்யாகவே, மசூகாட்டோ அவர்கள் சீனா, தென் கொரியா, சிங்கப்பூர், தாய்வான் மற்றும் மலேஷியா போன்ற நாடுகளின் விரைவேகமான வளர்ச்சிக்கு வணிக உலகில் அரசின் சரியான ஈடுபாடு காரணமென்பதுடன், இது தனியார் துறையில் ஓர் தலையிடுபவராக அன்றி, நன்கு வடிவமைக்கப்பட்ட, தொடர்ச்சியான மற்றும் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்ட அரச தலையீட்டினூடாக வளர்ச்சி மற்றும் புத்தாக்கத்தில் ஓர் முக்கிய பங்காளியாக ஆகும்.**

மறுபுறத்தில், கலாநிதி. ஜயசுந்தர அவர்கள் 2021 இலிருந்து அரசாங்கமானது அரசிறை வருமானத்தினை பலப்படுத்தும் பாதையில் பயணிக்கும் என்பதைக் கூறினார். எனவே, எமது மூலதனச் சந்தையானது துணிகரமுயற்சியில் ஈடுபட விருப்பமுள்ள சமூகத்திற்கு வலுவளிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வதற்கு முன்வருவதற்கு இது பொருத்தமான நேரமாகும். இந்த முக்கிய குறிக்கோளை அடைவதற்கு தற்போதைய நிலைமையானது பல்வேறு புதிய வாய்ப்புக்களை திறந்துள்ளது.

### இலங்கையினை ஓர் சர்வதேச நிதியியல் மையமாக மேம்படுத்துவதற்கு வேண்டிய முறைமைப்படுத்தல்

முறைமைப்படுத்தல் பக்கத்தில், முறைமைப்படுத்தல் அதிகாரங்கள் மற்றும் சந்தை நடவடிக்கையினை பலப்படுத்துவதற்கு புதிய பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தினை சட்டமயமாக்குதல் உயர்ந்த முன்னுரிமையாகும். எனவே, புதிய ஆணைக்குழுவானது தற்போது இச்சட்டமூலத்தின் ஏற்பாடுகளை மீளாய்வு செய்யும் செயல்முறையில் ஈடுபட்டுள்ளது.

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

**அதேபோன்று, இ.பி.ப.ஆ. இனை அதன் பாரம்பரிய பங்களிப்பு மற்றும் மரபுசார் அணுகுமுறைக்கு மட்டுப்படுத்த இயலாது. இ.பி.ப.ஆ. அதன் பங்களிப்பினை பின்வருவனவற்றிற்காக மீள்அளவிடல் இன்றியமையாததாகும். மூலதன உருவாக்கத்திற்கு உந்துதலை வழங்கும் அதேவேளை சந்தை முறைமைப்படுத்தல் மற்றும் சந்தை அபிவிருத்தி என்பவற்றிற்கிடையே சரியான சமநிலையினையும் பேணுதல் வேண்டும்.**

**சுருக்கமாகக் கூறுவதாயின், அந்த நாடுகளின் அரசாங்கங்கள் தனியார் துறை செழிப்படைவதற்கான ஓர் ஏற்ற சூழலை எவ்வாறு உருவாக்கியுள்ளன மற்றும் எவ்வாறு அவை அவற்றின் கம்பனிகள் உலகளவில் பிரசித்தியடைவதற்கு உதவியுள்ளன மற்றும் நாம் ஏன் எமது தனியார் துறைக்கு அத்தகைய ஓர் மட்டத்தை அடைவதற்கு உதவியளிக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுவது எனது நோக்கமாகும்.**

இச்சட்ட மூலத்திலான குற்றச்சாட்டுக்கள் இரண்டு தடைகளை மையப்படுத்தியுள்ளன. சில ஏற்பாடுகளின் பொருள்விளக்கத்தில் தெளிவின்மை மற்றும் பொருள்மயக்கம் மற்றும் வலியுறுத்தல் வலுவளிப்புகள் விஸ்தீரணத்தின் நடைமுறைக்கு ஒவ்வாதவை என்பனவாகும். இதன் காரணமாக சட்டத்தினுள் சிக்கல்கள் காணப்படலாம் என்பதுடன் வலியுறுத்தல் செயற்பாட்டினை இ.பி.ப.ஆ. அமுல்படுத்துவதில் பிரச்சனைகளை ஏற்படுத்தலாம். மெய்யாகவே, புதிய சட்டத்துடன், இ.பி.ப.ஆ. வலியுறுத்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளல் சவால்மிக்கதாக காணப்படக்கூடாது.

எனவே, தற்போதைய உணர்வுசார் வரைதல் அணுகுமுறையானது பின்வருவனவற்றிற்கு வழிவகுக்கும். நடைமுறையில் செயற்படுத்தக்கூடிய சட்டத்தை உருவாக்கும், இது விரைவான மற்றும் தெளிவான வலியுறுத்தலை இயலுமையாக்குவதுடன் ஓர் நியாயமான அல்லது நடைமுறையான நியாயாதிக்கமின்றி சந்தை நடவடிக்கைகளை அவசியமின்றி தடுக்காது மற்றும் சட்டமூலத்திற்கு பெறப்பட்ட குற்றச்சாட்டுக்களை அகற்றிவிடும்.

பிணையங்கள் சந்தையின் வளர்ச்சியானது ஒட்டுமொத்தமாக சந்தை மற்றும் நாட்டில் வைக்கப்பட்டுள்ள நம்பிக்கை மற்றும் தன்னம்பிக்கையினை பிரதிபலிக்கின்றது. எவ்வாறாயினும், சமீபத்தைய காலங்களில் கண்ட பல்வேறு சிக்கல்களைப் போன்று, நம்பிக்கை மற்றும் தன்னம்ப்பிக்கையில் ஏற்படும் பற்றாக்குறையானது எமது சந்தையினைப் பாதித்தது. இது போதுமான வலியுறுத்தல் நடவடிக்கைகள் காணப்படாமை மற்றும் தொழில்சார்ந்த மனப்பான்மையின்மை ஆகியவற்றினால் சந்தை மற்றும் நிதியியல் அமைப்புமுறையில் கடுமையான சிக்கலை உண்டுபண்ணும்.

நான் இங்கு அழுத்தமாக கூறுவது என்னவெனில் நாம் முறைமைப்படுத்தும் சந்தையின் நம்பகத்தன்மையினை கீழே கொண்டுவர இயலாது. நாம் முதலீட்டாளர்கள் நலனை பாதுகாக்கவேண்டும், அதேசமயம் முறைமைப்படுத்தலில் இ.பி.ப.ஆ. ஓர் சரியான சமநிலையினை பேணுதலை உறுதிப்படுத்தல் வேண்டும் ஏனெனில் மேலதிக முறைமைப்படுத்தலானது வளர்ச்சியினை அடக்கி சந்தையில் துடிப்பான பங்காளிகளது பங்குபற்றலை சோர்வடையச்செய்யும்.

மறுபுறத்தில் எமது பொறுப்பாணைக்கிணங்க நாம் தொடர்ந்தும் சந்தையில் நன்னம்பிக்கையினை ஊக்குவிக்கும் நோக்குடன் இடர்நேர்கையினை கண்காணிப்பதற்கும், குறைப்பதற்கும் மற்றும் முகாமைப்படுத்துவதற்கும் பொறுப்பாயுள்ளோம். அத்துடன் முற்றான மற்றும் துல்லியமான தகவல் பரப்புதலூடாக முதலீட்டாளர்கள் பாதுகாக்கப்படுவதனையும் நாம் நிச்சயப்படுத்திக்கொள்கின்றோம். வெளிப்படுத்தலை உறுதிசெய்வதன் மூலம் தகவலறிந்த முதலீட்டு தீர்மானங்களை மேற்கொள்வதற்கான முதலீட்டாளர்களது ஆற்றலை அதிகரித்து, முதலீட்டாளர் நம்பகத்தன்மையினை மேம்படுத்தி முகாமைத்துவம் முறையற்ற நடத்தைகளில் ஈடுபடுவதனையும் தடுக்கக்கூடியதாகவும் இருக்கும். இவ்வாறு, இ.பி.ப.ஆ. இணங்கியொழுகாமைக்கு எதிராக கண்டிப்பான விதிகளை அமுல்படுத்தி கடுமையான வலியுறுத்தல் நடவடிக்கைகளை பொறுப்பேற்கும்.

### ஓர் மூலோபாய முதலீட்டாளரது பிரவேசத்திற்கு வசதியளிக்கவேண்டிய தேவை

கடந்த சில வருடங்களாக இலங்கையின் மூலதனச் சந்தையானது திறன்பட செயலாற்றவில்லை என்ற உண்மையினை நாம் ஏற்றுக்கொள்ளல் வேண்டும். எவ்வித ஐயப்பாடுமின்றி எமது மூலதனச் சந்தையானது வங்கித் துறையினை நிரப்பி நாட்டின் பொருளாதார இலக்குகளுக்கு துணைபுரியும் வண்ணம் நிலை நிறுத்தப்படல் வேண்டும். பல நாடுகளில் நீடிப்புத்திறன் மிக்க விரைவான பொருளாதார விரிவாக்கலுக்கு சந்தைகளை பலப்படுத்துதல் முக்கியமானதாகக் காணப்படுகின்றது. இந்த நோக்கத்தினை அடைவதற்கு, முதலீட்டாளர் மற்றும் பொதுமக்களது நம்பிக்கை மற்றும் சந்தைகள் மற்றும் அவற்றின் பங்குபற்றுநர்களது நன்னம்பிக்கை அவசியமானதாகும்.

சார்ளி முங்கர் கூறுவது போல், "எது வேலைசெய்கின்றது, எது வேலைசெய்யவில்லை மற்றும் ஏன்" என்பதை நாம் அறிந்துகொள்வது அவசியமாகும். மெய்யாகவே, சார்ளி முங்கர் அவர்கள் அவரது பலம் மற்றும் பலவீனம் என்பவற்றை அறிந்த ஒருவராக எனக்கு புலப்படுவதுடன் அவர் வணிக பங்காளியாக வொரன் பவட் அவர்களுடன் இணைந்து பவட் அவர்களது பலம் முங்கரை பூரணமாக்கியது. அதேபோன்று, கொ.ப.ப.க்கு ஓர் "மூலோபாய முதலீட்டாளர்" ஒருவரது பிரவேசத்திற்கு நாம் வசதியளித்தல் வேண்டும். இவர் ஓர் பங்குதாரர் என்ற ரீதியில் இலங்கையின் பிணையங்கள் சந்தையினது அபிவிருத்திக்கு கடப்பாடுடையவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் இத்தகைய கூட்டுமுயற்சியானது எம்மை அடுத்த மட்டத்திற்கு கொண்டுசெல்லும்.

கொ.ப.ப. மற்றும் எமது பங்காளிகளுடன் ஓர் நெருங்கிய கலந்துரையாடலை மேற்கொள்வதன் பெறுமதியினை நான் அங்கீகரிக்கின்றேன். வெறுமனே இணங்கியொழுகுதலுக்கு அப்பால் செல்லும் ஓர் கலாச்சாரத்தினை நாம் ஒன்றிணைந்து வளர்க்கலாம் என நான் எதிர்பார்க்கின்றேன். நாட்டிற்கு நிதிப் பாயச்சல்களை அதிகரிப்பதனூடாக இலங்கையின் பிணையங்கள் சந்தையானது பயனுறுதிமிக்க விதத்தில் போட்டியிடுவதனை உறுதிசெய்வதற்கு புதிய கருவிகள் மற்றும் சந்தை உட்கட்டமைப்பினை விருத்திசெய்வதில் கவனஞ்செலுத்தும் முன்னெடுப்புகளுக்கு வசதியளிப்பதற்கு நாம்

**பலவருடங்களாகவே காணப்படும் எமது பிரச்சனை என்னவெனில் தொடர்ச்சியாக ஓர் குறிப்பிடத்தக்களவு காலத்திற்கு 6% க்கும் அதிகமான வளர்ச்சி வீதத்தினை நீடிக்க முடியாதிருந்த வேளை, ஆசியாவில் சமீபத்தில் அபிவிருத்தியடைந்த நிலையினை அடைந்த நாடுகள் தொடர்ச்சியாக ஓர் கணிசமானளவு காலப் பகுதியில் 7-8% க்கும் அதிகமான வளர்ச்சியினை எட்டின. ஜனாதிபதியின் செயலாளர், கலாநிதி.பி.பி. ஜயசுந்தர அவர்கள் டெய்லி எவ்.டி. பத்திரிக்கைக்கான நேர்காணலில் அவர் பின்வரும் கருத்தினை நம்பிக்கையுடன் தெரிவித்தார். தொற்றின் பின்னரான அடங்கிப்போயுள்ள பொருளாதார சூழலானது இலங்கைக்கு ஓர் பாரிய வாய்ப்பாக காணப்படுகின்றது. எட்டமுடியாது காணப்படுகின்ற 7-8% வளர்ச்சிக்கு தயாராகி அதனை அடைவதற்கு, நீடிப்புத்திறன் மிக்க சமூக பொருளாதார வளர்ச்சியினை உருவாக்குவதற்கு சாமர்த்தியம், சுறுசுறுப்பு மற்றும் மிகவும் மீளெழுச்சியுடன் மாற்றமடைவது முக்கியமாகும்.**

ஆர்வமாயுள்ளோம். எமது சந்தையானது ஓர் முதலீட்டு இலக்கிற்கு அவசியமான முன்தேவைகளைக் கொண்டுள்ளது. கவர்ச்சிமிக்க பெறுமதிகள், நன்கு ஆளுமை செய்யப்பட்ட மற்றும் திடமான முறைமைப்படுத்தல் வரம்புறுகை, நவீன உட்கட்டமைப்பு மற்றும் சர்வதேச நிதியியல் அறிக்கையிடல் நியமங்களுக்கு (ச.நி.அ.நி.) இணங்கியொழுகும் பட்டியலிடப்பட்ட கம்பனிகளை போன்ற முன்தேவைகளைக் கொண்டுள்ளது. எனவே, எமது மூலதனச் சந்தையின் ஆற்றல்வளம் மற்றும் மீளெழுச்சி குறித்து நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

தற்போது நான் எமது பிணையங்கள் சந்தையினை உருமாற்றம் செய்வதற்கு இ.பி.ப.ஆ. ஆல் சமீபத்தில் எடுக்கப்பட்ட சில முன்னெடுப்புக்கள் பற்றி மிகவும் குறிப்பிட்ட விபரங்களை சமர்ப்பிக்கின்றேன்.

### இ.பி.ப.ஆ. இனை ஓர் சக்திவாய்ந்த முறைமைப்படுத்துபவராக மீள்நிலைப்படுத்துதல்

- **கொ.ப.ப. இன் முக்கிய கடமைகளை எண்மின் நிலைப்படுத்துவதற்கான கூட்டுக் குழு**

  பதற்றமான நேரத்தில் எமது சந்தையானது அதன் அனைத்து முக்கிய நடவடிக்கைகளையும் நடாத்துவதற்கான ஆற்றலை வெளிப்படுத்துவதற்கான நிலையில் காணப்படவில்லை. இது இன்னமும் காலம் கடத்தாமல் பங்குச் சந்தையின் முக்கிய செயற்பாடுகளை எண்மின் நிலைப்படுத்துவதற்கான அவசியத்தினை எடுத்துக்காட்டியது. இதற்கமைய, இ.பி.ப.ஆ. இன் தலைவரினால் கொ.ப.ப. இன் எண்மின் நிலைப்படுத்தலை ஆராய்வதற்காக இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. இன் பிரதிநிதிகளுடனான ஓர் கூட்டுக் குழுவானது நியமிக்கப்பட்டது. எண்மின் நிலைப்படுத்துவதன் மூலம் பங்குச் சந்தையின் அனைத்து முக்கிய நடவடிக்கைகளையும் எண்மின் நிலைப்படி மற்றும் தீர்வு மற்றும் தீர்ப்பனவினை இலத்திரணியல் முறையில் இயலுமையாக்குவதற்கு கொ.ப.ப. க்கு தேவையான பொறிமுறையினை அறிமுகப்படுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். பங்குத்தரகர் விதிகள், மத்திய வைப்புத்திட்ட முறைமை விதிகள் மற்றும் பட்டியலிடல் விதிகளுக்கு தேவையான திருத்தங்களை சமீபத்தில் ஆணைக்குழு அங்கீகரித்தது. இம்முன்னெடுப்பானது மூலதனச் சந்தையினது முடிவுக்கு முடிவு எண்மின் நிலைப்படுத்துவதற்கு வசதியளிப்பதற்கு எதிர்பார்ப்பதுடன் இது உள்ளூர் மூலதனச் சந்தையினை முதலீட்டாளர்களின் விரல் நுனியில் கொண்டுவரும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

  இது தொடர்பில், அனைத்து தரகர் சமூகத்தினது ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தினை இ.பி.ப.ஆ. வலியுறுத்தியது. தரகர்கள் என்ற ரீதியில் நாட்டிற்காகவும் உலகளாவிய பிணையங்கள் சந்தைகளுக்கு ஒத்ததாக ஓர் அதிநவீன பிணையங்கள் சந்தை காணப்படுவதையும் இலங்கையின் மூலதனச் சந்தையினது ஒட்டுமொத்த மேம்பாட்டினையும் நோக்காகக்கொண்டு அவர்களது கடமையினை நிறைவேற்றவேண்டிய அவசியம் காணப்படுகின்றது. மெய்யாகவே, இதுவரைக்கும் அடைந்த மிகப்பெரிய முன்னேற்றங்களுக்கு இ.பி.ப.ஆ.-கொ.ப.ப. கூட்டுக் குழுவினை பாராட்டுதல் வேண்டும். இதன் தனிச்சிறப்பு என்னவெனில் சந்தையினை அதிநவீனமயப்படுத்தல் மற்றும் அனைத்து சூழ்நிலைகளிலும் அது இயங்கக்கூடியதாயிருத்தல் என்பனவாகும்.

- **மூலதனச் சந்தையினை** விஸ்தரித்துலுக்கான கூட்டுக் குழு

  மூலதனச் சந்தையினை விஸ்தரித்து மற்றும் பொதுமக்களுக்கு கற்பித்து மற்றும் விழிப்புணர்வினை உருவாக்குவதற்கும் இது தொடர்பான பரிந்துரைகளை மேற்கொள்வதற்காகவும் எடுக்கவேண்டிய செயல்முறைகளை கருத்திற்கொள்வதற்காக இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. இன் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது கம்பனிகளை மூலதனம் திரட்டுவதற்கு மூலதனச் சந்தையினை பயன்படுத்துமாறு ஊக்குவிக்கவும், புலப்படுந்தன்மை மற்றும் பிராந்திய மற்றும் சர்வதேச ரீதியாக கூட்டுமுயற்சியினை வளர்ப்பதற்கும், முதலீட்டுச் சமூகத்தினை விஸ்தரிக்கும் நோக்குடன் பங்காளிகளது கல்வி மற்றும் விழிப்புணர்வினை மேம்படுத்துவதில் ஈடுபடவும், மற்றும் நாட்டின் அனைத்து பூகோள பிராந்தியங்களிலிருந்தும் சர்வதேச ரீதியாகவும் பிணையங்கள் சந்தையில் சிறந்த பங்குபற்றலுக்கு வசதியளிப்பதற்கும் எதிர்பார்க்கின்றது.

  மறுபுறத்தில், கொ.ப.ப. ஓர் பரவலான தோற்றமுடைய கம்பனிகளுக்கு பங்குச் சந்தை பட்டியலிடலை சாத்தியமாக்குவதற்காக பட்டியலிடல் விதிகளிலான திருத்தங்களை இ.பி.ப.ஆ. உடன் கலந்தாலோசித்து அறிமுகப்படுத்தியது. இத்திருத்தங்கள் வருவாய் மற்றும் காசுப்பாய்ச்சல் வழிமூலமாக தேவைப்படும் தகுதி வரன்முறைகளை சந்திப்பதற்கு சாத்தியப்படக்கூடிய வழங்குநர்களுக்கு புதிய வழிமறைகளை உருவாக்கும்.

- **கொ.ப.ப. இல் வெளிநாட்டு நிறுவனங்களின் இரட்டை பட்டியலிடலுக்கான கூட்டுக் குழு**

  இலங்கை அரசாங்கத்தின் கொள்கை வழிகாட்டலுடன் மற்றும் சந்தையின் பருமன் மற்றும் திரவத்தன்மையினை அதிகரிப்பதற்கு எடுக்கப்படும் முன்னெடுப்புகளின் ஒரு பகுதியாக,

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

**நான் இங்கு அழுத்தமாக கூறுவது என்னவெனில் நாம் முறைமைப்படுத்தும் சந்தையின் நம்பகத்தன்மையினை கீழே கொண்டுவர இயலாது. நாம் முதலீட்டாளர்கள் நலனை பாதுகாக்கவேண்டும், அதேசமயம் முறைமைப்படுத்தலில் இ.பி.ப.ஆ. ஓர் சரியான சமநிலையினை பேணுதலை உறுதிப்படுத்தல் வேண்டும் ஏனெனில் மேலதிக முறைமைப்படுத்தலானது வளர்ச்சியினை அடக்கி சந்தையில் துடிப்பான பங்காளிகளது பங்குபற்றலை சோர்வடையச்செய்யும்.**

குறுங்காலத்தில் நாடு ஓர் உயர்ந்த பொருளாதார வளர்ச்சியினை அடைவதற்கான தளத்தினை அமைப்பதன் முக்கியத்துவத்தினை இ.பி.ப.ஆ. இனங்கண்டுள்ளது. எனவே, பின்வருவனவற்றை இனங்காண்பதற்காக ஓர் கூட்டுக் குழு உருவாக்கப்பட்டது. சந்தை மூலதனவாக்கம், கொ.ப.ப. இல் உள்ள திரவத்தன்மை மட்டங்கள் என்பவற்றை தடுக்கும் கட்டுப்பாடுகள் மற்றும் ஓர் உகந்த கொள்கை மற்றும் முறைமைப்படுத்தப்படும் மூலதனச் சந்தை வரம்புறுகையினை உருவாக்குதல் என்பனவாகும். அதேசமயம் இலங்கையின் பிணையங்கள் சந்தையானது அமெரிக்கா-சீனா போன்ற நாடுகளிடையே உருவாகும் பூகோள அரசியல் பதட்டங்களிடையே ஒப்பீட்டு நலனை அடைவதனை இயலுமையாக்கும் காரணிகளில் கவனஞ்செலுத்துதலுமாகும்.

இந்த முன்னெடுப்பும் பரவலாக இலங்கையினை மோர்கன் ஸ்டான்லி மூலதன சர்வதேச வெளித்தோன்றும் சந்தை தரத்திற்கு உயர்த்துவதற்கு வசதியளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- **இலங்கையின் மூதனச் சந்தைக்கு ஆதனவியல் முதலீட்டு நம்பிக்கை பொறுப்பினை (ஆ.மு.ந.பொ.) அறிமுகப்படுத்துதல்**

  23 வருடங்களுக்கு முன்னர் முதன் முதலாக 1997 இல் பட்டியலிடப்பட்ட கூட்டாண்மை கடன் பிணையங்களது ஆரம்பத்தின் பின்னர் பட்டியலிடப்பட்ட ஆதனவியல் முதலீட்டு நம்பிக்கை பொறுப்பின் அறிமுகமானது (ஆ.மு.ந.பொ.) சந்தைக்கு ஓர் புதிய கருவியின் அறிமுகத்தினை குறிப்பிடுகின்றது. 90 சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட வருமானத்தினை ஆ.மு.ந.பொ. அலகுடைமையாளர்களுக்கு பகிர்ந்தளிக்கும் ஆ.மு.ந.பொ. கட்டமைப்பானது ஆதனவியல் துறை மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு மூலதனத்தினை வழங்குவதுடன் மற்றும் ஆதனவியல் துறையின் வளர்ச்சியிலிருந்தான நன்மையினை சிறிய முதலீட்டாளர்கள் நேரடியாகப் பெற்றுக்கொள்வதற்கு வசதியளிக்கின்றது. ஆ.மு.ந.பொ. இன் முகாமைத்துவக் கம்பனி மற்றும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கு பிரயோகிக்கப்படும் விதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் ஆ.மு.ந.பொ. இனை பட்டியலிடுவதற்கு இயலுமையாக்கும் பட்டியலிடல் விதிகளை வரையுமாறு கொ.ப.ப. பணிக்கப்பட்டது.

- **பிணையங்கள் பரிவர்த்தனை (பி.ப.) சட்டமூலத்தினை புதுப்பித்தல்**

  வரைவு பி.ப. சட்டமூலமானது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோதிலும் இச்சட்டமூலமானது குறிப்பிடத்தக்களவு காலப்பகுதியில் சட்டமாக வெளிவரவில்லை. பாரளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளதனால், புதிய பாராளுமன்றத்தில் இச்சட்டமூலத்தினை சமர்ப்பிக்கும் செயற்பாடு மீண்டும் ஆரம்பிக்கப்படல் வேண்டும். இந்த கடமையினை கருத்திற்கொண்டு, புதிய ஆணைக்குழுவானது தற்போது இச்சட்டமூலத்தின் ஏற்பாடுகளை விரிவாக மீளாய்வு செய்யும் செயல்முறையில் ஈடுபட்டுள்ளது. இது தொடர்பில், அதிஷ்டவசமாக தேவையான சட்ட நிபுணத்துவம் மற்றும் அறிவுத்திறன் கொண்ட ஓர் தலைவர் மற்றும் ஆணைக்குழுவினை நாம் கொண்டுள்ளோம். இவர்கள் இந்த பி.ப. சட்டமூலத்தினை வாசித்து நடைமுறையில் செயற்படுத்தக்கூடிய சட்டமாக உருமாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கரிசனையாயுள்ளார்கள்.

- **தனியார் அரசு பங்குடைமைகள் (த.அ.ப.)**

  த.அ.ப. கள் அரசாங்கத்துறை மற்றும் தனியார் துறைகளின் திறமைகள் மற்றும் வளங்களை பின்வருமாறு ஒன்றிணைக்கின்றது. இடர்நேர்கை மற்றும் பொறுப்புக்களை பகிர்ந்துகொள்ளல், இது போட்டித்தன்மையுள்ள நிலத்தோற்றத்தினை மேம்படுத்துவதுடன் நாட்டிற்கு பல விதங்களில் அளவற்ற நன்மைகளை வழங்கும். த.அ.ப. இனை நாட்டில் உட்கட்டமைப்பு நிதியளிப்பதற்கான ஓர் முறையாக ஊக்குவிப்பதற்காக நாம் கொ.ப.ப. இல் உட்கட்டமைப்பு த.அ.ப. களை பட்டியலிடுவதற்கு ஓர் சாத்தியமான மாதிரியினை உருவாக்கியிருந்தோம்.

- **ஒன்றிணைக்கப்பட்ட மத்திய எதிர் தரத்தினர் பொறிமுறை (ம.எ.த.) மற்றும் விநியோகம் எதிர் கொடுப்பனவு (வி.எ.கொ.)**

  இ.பி.ப.ஆ. இரண்டு தனிப்பட்ட ம.எ.த. களை வைத்திருப்பதிலும் பார்க்க ஓர் தனியான ம.எ.த. இனை வைத்திருப்பதன் மூலம் நாடு நலன்பெறும் என திடமாக நம்புகின்றது. இதனைக் கருத்திற்கொண்டு, இ.பி.ப.ஆ. ஓர் ஒன்றிணைக்கப்பட்ட ம.எ.த. பொறிமுறையினை நிறுவுவதற்கான சாத்தியப்பாட்டினை ஆராய்வதற்காக இலங்கை மத்திய வங்கிக்கு (இ.ம.வ.) சார்பாண்மைகளை மேற்கொண்டது. விநியோகம் எதிர் கொடுப்பனவினை அமல்படுத்துவதற்கான தொழிற்பாட்டு தரவரைவுகள் சமீபத்தில் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதுடன் கொ.ப.ப. 2020 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் வி.எ.கொ. இனை அமுல்படுத்துவதற்கான அமைப்புமுறை மாற்றியமைத்தல்களை மேற்கொள்ளும் செயல்முறையிலுள்ளது.

- **பங்காளிகளுடனான ஈடுபாடு**

  மேலும், தலைவரும் புதிய ஆணைக்குழுவும் துறைசார் பங்காளிகளுடன் மூலதனச் சந்தையினை அபிவிருத்தி செய்வதில் அவர்களது கருத்து மற்றும் அவர்கள் சந்திக்கும் சிரமங்களை சரிசெய்வதற்காக பல தொடரான கூட்டங்களை நடாத்தினார்கள். இந்த கலந்துரையாடல்கள் உட்கட்டமைப்பினை விருத்திசெய்வதற்கும் மற்றும் ஒழுங்குவிதிகளை பலப்படுத்தவும் மற்றும் எளிமையாக்குவதற்குமான உள்ளுணர்வினை வழங்கியது.

- **கொள்கை ஆய்வியல் மற்றும் பகுப்பாய்வு பிரிவின் உருவாக்கம்**

  தொடர்ச்சியாக மாற்றமடையும் பொருளாதார மற்றும் நிதியியல் நிலத்தோற்றத்துடன் நிலையொத்து காணப்படுவதற்கான தேவையானது

**சார்ளி முங்கர் கூறுவது போல், "எது வேலைசெய்கின்றது, எது வேலைசெய்யவில்லை மற்றும் ஏன்" என்பதை நாம் அறிந்துகொள்வது அவசியமாகும். மெய்யாகவே, சார்ளி முங்கர் அவர்கள் அவரது பலம் மற்றும் பலவீனம் என்பவற்றை அறிந்த ஒருவராக எனக்கு புலப்படுவதுடன் அவர் வணிக பங்காளியாக வொரன் பவட் அவர்களுடன் இணைந்து பவட் அவர்களது பலம் முங்கரை பூரணமாக்கியது. அதேபோன்று, கொ.ப.ப.க்கு ஓர் "மூலோபாய முதலீட்டாளர்" ஒருவரது பிரவேசத்திற்கு நாம் வசதியளித்தல் வேண்டும். இவர் ஓர் பங்குதாரர் என்ற ரீதியில் இலங்கையின் பிணையங்கள் சந்தையினது அபிவிருத்திக்கு கடப்பாடுடையவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் இத்தகைய கூட்டுமுயற்சியானது எம்மை அடுத்த மட்டத்திற்கு கொண்டுசெல்லும்.**

செயலகத்தில் ஆய்வியல் மற்றும் பகுப்பாய்வு பிரிவின் உருவாக்கத்திற்கு வழிவகுத்தது. இப்பிரிவானது மூலதனச் சந்தை மற்றும் ஒட்டுமொத்த நாடும் நலன்பெறக்கூடிய பொருளாதார, சந்தை மூலோபாயங்கள் மற்றும் கொள்கைகள் ஆகியவற்றை விருத்திசெய்து முன்மொழிவதற்கு ஆய்வியல் மற்றும் தரவுகள் விஞ்ஞானி என்ற பங்களிப்பினை வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### பின்னோக்கிய பார்வை

2019 ஆம் ஆண்டில், இ.பி.ப.ஆ. பல்வேறு விதமான முன்னெடுப்புகளை தொடர்ந்ததுடன் இவை பின்வரும் பக்கங்களில் விரிவாக கலந்துரையாடப்படும். முன்னாள் தலைவர் திரு. ரனெல் டி விஜேசிங்க மற்றும் ஆணைக்குழுவிற்கும் முன்னாற் பணிப்பாளர் நாயகம் திரு. வஜிரா விஜேகுணவர்தன அவர்களுக்கும் 2019 இல் அவர்களது பங்களிப்பிற்காக நான் எனது மனமார்ந்த நன்றிகளை பதிவுசெய்ய விரும்புகின்றேன்.

### கொ.ப.ப. இன் விரிவான கணக்காய்வு

மேற்பார்வை பரப்பளவில், இ.பி.ப.ஆ. பங்குப் பரிவர்த்தனையில் ஓர் விரிவான கணக்காய்வினை நடாத்தியது. இது கொ.ப.ப. ற்கு வழங்கப்பட்ட உரிமத்தினை ஐந்து வருட காலத்திற்கு புதிப்பிப்பதற்கு முன்னர் இடம்பெற்றது. இங்கு ஆளுகை, சந்தை செயற்பாடுகள், விதிமுறைகள் மற்றும் செயல்முறைகள் என்பவற்றில் கணிசமானளவு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது. மேலும், சந்தை இடையீட்டாளர்களுக்கு பிரயோகிப்பதற்கான தகுதியான மற்றும் பொருத்தமான வழிகாட்டிகளை இ.பி.ப.ஆ. கட்டாயமாக்கியது. இது முதலீடு செய்யும் பொதுமக்களை பாதுகாப்பதுற்கும் "தகுதியான மற்றும் பொருத்தமான" நபர்கள் மாத்திரம் உரிமம் பெறுவதற்கு அனுமதிப்பதற்காகும்.

### மூலதன உருவாக்கத்திற்கு வசதியளித்தல்

ஜுலை 2018 இல் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களை பட்டியலிடுவதற்காக வலுவளித்தல் பலகையினை அறிமுகப்படுத்துவதற்காக நாம் கொ.ப.ப. உடன் சேர்ந்து கடமையாற்றினோம். இது பிரதான பலகை மற்றும் திரி சவி பலகை ஆகியவற்றின் தகுதித் தேவைப்பாடுகளை சந்திக்காத கம்பனிகளுக்காக உருவாக்கப்பட்டது. அதன் பின்னர், நாடுபூராவும் பட்டியலிடலில் விழிப்புணர்வினை உருவாக்குவதற்காக நடாத்தப்பட்ட ஓர் தொடரான மன்றங்களினூடாக தொழில்முயற்சியாளர்களுடன் ஈடுபாடு கொண்டோம்.

வெளிநாட்டு நிறுவனங்களின் பங்குகள் வெளிநாட்டு நாணயத்தில் இலங்கையில் பட்டியலிடுவதற்கும் வர்த்தகம் செய்வதற்குமான ஓர் பல்நாணய பலகையினை நிறுவுதல் மேற்கொள்ளப்பட்ட இன்னுமோர் முக்கிய முன்னெடுப்பாகும். இவ்வாண்டில், கடன் பிணையங்களை பட்டியிலிட விரும்பும் உள்ளூர் கம்பனிகளுக்கு பல்நாணய பலகை வசதிகளை வழங்கும் சாத்தியப்பாடு குறித்து நாம் ஆராய்ந்தோம்.

### மூலதனச் சந்தைக்கான முதலீடுகளை ஊக்கமளித்தல்

இலங்கையில் முதலீட்டுத்தேக்கம் மற்றும் நேரடி முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக கொ.ப.ப. உம் இ.பி.ப.ஆ. உம் "இலங்கையில் முதலிடுங்கள்" என்ற தலைப்பில் சிங்கப்பூரில் ஓர் மன்றம் நடாத்தப்பட்டதுடன் இதற்கு ஊக்கமளிக்கும் வரவேற்பு கிடைத்தது. முன்னாள் தலைவர், திரு. ரனெல் விஜேசிங்க அவர்கள் இலங்கையிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திர தூதரகங்களது தலைமைத்துவத்துடன் ஓர் தொடரான கூட்டங்கள் நடாத்தப்படுவதனை ஆரம்பித்தார். இது இலங்கையின் மூலதனச் சந்தையில் காணப்படும் முதலீட்டு வாய்ப்புக்களில் அதிக கட்புலன் மற்றும் விழிப்புணர்வினை உருவாக்குவதற்கான மூலோபாயங்களை கலந்துரையாடுவதற்காகும்.

### முறையீடுகளை கையாளுதல் மற்றும் இழப்பீட்டினை வழங்குதல்

முதலீட்டாளர்களது நலன்களை பாதுகாப்பது எமது பிரதான முறைமைப்படுத்தல் குறிக்கோள்களுள் ஒன்றாகும். இந்த இலக்கை அடைவதற்காக, சிற்றளவு முதலீட்டாளர்களுக்கு அவர்களது முறையீடுகளை கையாள்வதற்கான ஓர் பயனுறுதிமிக்க பொறிமுறையினை வழங்குதல் அவசியமாகும். மீளாய்வுக் காலப்பகுதியில், முறையீடுகள் கையாளும் செயல்முறையினை, அது சுயாதீனமாகவும், நியாயமானதாகவும் மற்றும் செயற்திறனாகவும் காணப்படுவதனை உறுதிசெய்வதற்காக நெறிப்படுத்தியது.

### பொதுப் பட்டியலிடப்பட்ட கம்பனிகள் மற்றும் கணக்காய்வாளர்களுடனான கலந்துரையாடல்

நாம் பங்காளிகளுடன் ஓர் வழக்கமான அடிப்படையில் தொடர்பினை பேணி ஓர் பரந்த அளவிலான சிக்கல்களில் வட்டமேசை கலந்துரையாடல்களின் மூலம் அவர்களிடமிருந்து விரிவான கருத்தினை நாடினோம். இவ்வருடத்தில் முன்னாள் தலைவர், திரு. ரனெல் விஜேசிங்கவின் ஆதரவுடன் நாம் பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகள், கணக்காய்வாளர்கள் மற்றும் ஏனைய பங்காளிகளுடன், மூலதனச் சந்தையில் இணங்கியொழுகுதல், நடைமுறையிலுள்ள சட்டங்களிலான மாற்றங்கள் மற்றும் நடைமுறை சிக்கல்கள் தொடர்பாக சந்தை பங்குபற்றுநர்கள் அவர்களது கடப்பாடுகளை புரிந்துகொள்வதனை உறுதிசெய்யும்பொருட்டு ஓர் கலந்துரையாடலில் ஈடுபட்டோம்.

### பட்டய நிதியியல் பகுப்பாய்வாளர்கள் (ப.நி.ப.) சங்கத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தம்

இவ்வாண்டில் இ.பி.ப.ஆ. இலங்கையின் ப.நி.ப. சங்கத்துடன் பின்வருவனவற்றிற்காக ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைசாத்திட்டது. இலங்கையின் மூலதனச் சந்தையில் இரு நிறுவனங்களும் ஒன்றுசேர்ந்து சிறந்த நடைமுறைகளுக்கான கோவைகள் மற்றும் நியமங்களை ஊக்குவித்தல், முதலீட்டாளர் உரிமைகள் தொடர்பான முன்னெடுப்புகள் மற்றும் கூட்டு கல்வி முன்னெடுப்புகளில் பங்குடைமையாக செயற்படுவதற்காகும்.

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

**23 வருடங்களுக்கு முன்னர் முதன் முதலாக 1997 இல் பட்டியலிடப்பட்ட கூட்டாண்மை கடன் பிணையங்களது ஆரம்பத்தின் பின்னர் பட்டியலிடப்பட்ட ஆதனவியல் முதலீட்டு நம்பிக்கை பொறுப்பின் அறிமுகமானது (ஆ.மு.ந.பொ.) சந்தைக்கு ஓர் புதிய கருவியின் அறிமுகத்தினை குறிப்பிடுகின்றது. 90 சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட வருமானத்தினை ஆ.மு.ந.பொ. அலகுடைமையாளர்களுக்கு பகிர்ந்தளிக்கும் ஆ.மு.ந.பொ. கட்டமைப்பானது ஆதனவியல் துறை மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு மூலதனத்தினை வழங்குவதுடன் மற்றும் ஆதனவியல் துறையின் வளர்ச்சியிலிருந்தான நன்மையினை சிறிய முதலீட்டாளர்கள் நேரடியாகப் பெற்றுக்கொள்வதற்கு வசதியளிக்கின்றது. ஆ.மு.ந.பொ. இன் முகாமைத்துவக் கம்பனி மற்றும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கு பிரயோகிக்கப்படும் விதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் ஆ.மு.ந.பொ. இனை பட்டியலிடுவதற்கு இயலுமையாக்கும் பட்டியலிடல் விதிகளை வரையுமாறு கொ.ப.ப. பணிக்கப்பட்டது.**

### பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பணிப்பாளர் சபைகளில் பாலின வேறுபாட்டினை ஊக்குவித்தல்

2019 ஆம் ஆண்டின் தேசிய பாதீட்டிற்கு சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகளின் நிமித்தம் பொது பட்டியலிடப்பட்ட கம்பனிகளில் பாலின வேறுபாட்டினை ஊக்குவிப்பதற்காக பல்வேறு முன்னெடுப்புகளுக்கு வசதியளிப்பதற்காக ஓர் பணிக்குழு நிறுவப்பட்டது.

### முதலீட்டாளர்கள் மற்றும் மூலதனச் சந்தை தொழில்வல்லுநர்களுக்கு வலுவளித்தல்

சிற்றளவு முதலீட்டாளர் கண்ணோட்டத்தில், இ.பி.ப.ஆ. நாடுபூராவும் மாணவர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் சாத்தியமுள்ள முதலீட்டாளர்களுக்கு பல வெளிக்கள நிகழ்ச்சித்திட்டங்களில் நிதியியல் கல்வியறிவுடையவர் குடையின் கீழ் பல தனிநபர்களை தொடர்ந்தும் கொண்டுவந்தோம். மூலதனச் சந்தையில் ஈடுபட்டுள்ள சந்தை தொழில்வல்லுநர்களின் திறமை மற்றும் ஆற்றலினை தரமுயர்த்துவதற்காக, இ.பி.ப.ஆ. அதன் பயிற்றுவித்தல் மற்றும் அபிவிருத்தி அங்கத்தினூடாக மூலதனச் சந்தையில் ஓர் தொழில்துறையினை ஆரம்பிக்க விரும்புபவர்களுக்கு ஓர் புதிய வரம்புறுகையினை கட்டமைத்தது.

### முன்னோக்கி நகர்தல்

முன்னோக்கி நகரும்போது, யதார்த்தமான காலக்கெடுவினை வரையறுப்பதன் மூலம் பல முக்கிய முனைகளில் உறுதியான விளைவினை அடைவதற்காக நாம் இவற்றுக்கு தீவிரமான கவனத்தை செலுத்தும் நேரம் இதுவாகும்.

அரசாங்கத்தின் ஆதரவு மற்றும் ஊக்கமளிப்பினை அனுபவிப்பதில் நாம் உண்மையிலேயே அதிஷ்டசாலிகளாயுள்ளோம். கொள்கை ஸ்திரத்தன்மை மற்றும் அரசாங்கத்தின் மனோதிடம் என்பன எமது சாதனைகளை அடைவதற்கு சாத்தியமாக்கியுள்ளன. எமது செயற்பாட்டு சுதந்திரத்திற்கான அரசாங்கத்தின் உறுதுணையானது ஒருபோதும் பின்வாங்கப்படவில்லை. ஓர் சர்வதேச முறைமைப்படுத்துபவருக்கு இது ஓர் அத்தியாவசிய அடிப்படையாகும் என்பதுடன், இது மூலதனச் சந்தையில் ஈடுபடுவதற்கு நோக்குடைய அல்லது ஈடுபடும் ஒவ்வொருவருக்கும் நம்பிக்கையினை வழங்குகின்றது. எனவே, மதிப்பிற்குரிய. பிரதம மந்திரி மற்றும் திறைசேரியின் செயலாளர், திரு. சஜித் ஆர்ட்டிகல அவர்களுக்கு இ.பி.ப.ஆ. மீது வைத்துள்ள நம்பிக்கை மற்றும் வழங்கிய உறுதுணைக்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

ஓர் மேம்பட்ட ஜனாதிபதி சட்டத்தரணியாக, தலைவரது மதிநுட்பமான அறிவுறுத்தல் மற்றும் அயராத உறுதுணை என்பன எமது பணியின் ஒவ்வொரு அடிக்கும் பெறுமதிமிக்கதாகும். செயலகத்தின் சார்பிலும், ஓர் தனிப்பட்ட மட்டத்தில் அவர் எங்கள் மேல் வைத்துள்ள நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மைக்கும் நான் அவருக்கு மனமார நன்றி செலுத்துகின்றேன். ஆணைக்குழுவின் அங்கத்தவர்களுக்கு அவர்களது தவறாத உறுதுணை, திடமான அறிவுறுத்தல் மற்றும் கூட்டான நிபுணத்துவம் மற்றும் சில சமயங்களில் அவர்களது தனிப்பட்ட மற்றும் தொழில்சார் நேரத்தினை தியாகம் செய்தமைக்காக எனது நன்றியினை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இ.பி.ப.ஆ. இன் பொறுப்பாண்மையினை அடைவதற்கு தூண்களாகக் காணப்படும் உயர்ந்த மட்டத்திலான பணியாட்களது ஈடுபாடு, செயற்திறன் மற்றும் நம்பகத்தன்மை என்பவற்றை பராமரித்தல் முக்கியம் என நான் திடமாக நம்புகின்றேன். எனவே, இ.பி.ப.ஆ. இன் மனித மூலதனத்தினை நான் தொடர்ந்தும் விருத்திசெய்வேன். இறுதியாக, எனது பணிப்பாளர்கள், சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் பணியாட்களுக்கு எனது பாரிய நன்றியினை கூறுவதுடன் விடயங்கள் இடம்பெறுவதற்கு அவர்களது முழு ஒத்துழைப்பினை பெறுவதற்கு நான் மிகவும் அதிஷ்டசாலி என்றே கூற விரும்புகின்றேன்.

சரியான பாதையிலான புதுப்பிக்கப்பட்ட உற்சாகம் மற்றும் விரைவான அசைவுகளை நான் காண்கின்றேன். பிரஞ்சு புரட்சியின் ஆரம்பத்தில் பிரசன்னமாயிருந்த ஆர்வலர்கள் குறித்து வேர்ட்ஸ்வேர்த் கூறியதாவது, “பேரின்பம் என்பது அதிகாலையில் உயிருடன் இருப்பதானதாகும்”.

எமது மூலதனச் சந்தையினது பயன்படுத்தப்படாத சாத்தியப்பாட்டினை கட்டவிழ்த்துவிடுவதில் எமது அணுகுமுறையினை தொடர்ச்சியாக மீளாய்வு மற்றும் மீளளவு செய்வதற்கு நான் நினைக்கும் அதேவேளை எமது வெற்றிகளில் கட்டியெழுப்புவதற்கு நான் எதிர்பார்க்கின்றேன்.

**சிந்தக்க மெண்டிஸ்**
பணிப்பாளர் நாயகம்

18 ஜுலை 2020

# விரிவான, செயல் சார்ந்த, நடைமுறையான மற்றும் அளவிடக்கூடிய மூலதனச் சந்தை மூலோபாயம் 2020 - 2025

**இது தற்போது இ.பி.ப.ஆ. ஆல் அமுல்படுத்தப்பட்டவண்ணமுள்ளது.**

**மூலதனச் சந்தையினை வளர்ச்சிக்கான இயந்திரமாக நிலைப்படுத்துவதற்கு**



# முக்கிய முறைமைப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி மூலோபாயங்கள்

**இது தற்போது இ.பி.ப.ஆ. ஆல் அமுல்படுத்தப்பட்டவண்ணமுள்ளது.**

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியினை அடைவதற்காக தனியார் துறையினை வளர்ப்பதற்கு

**முக்கிய முறைமைப்படுத்தல் மூலோபாயங்கள்**

**முறைமைப்படுத்தல் மற்றும் ஆளுகை சூழலை பலப்படுத்துதல்**

- புதிய பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டமூலம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பு
- கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளின் மதிப்பாராய்வு மற்றும் திருத்தம்
- சந்தை இடையீட்டாளர்கள் தொடர்பான அனைத்து விதிகளையும் மீளாய்வு செய்தல்
- பொ.ஒ.அ.ஒ. இனால் வெளியிடப்பட்ட கொள்கைகளுக்கு அமைவாக கூட்டாண்மை ஆளுகை கோவையினை மீளாய்வ செய்தல்
- நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி விதிக்கோவையினை மீளாய்வு செய்தல்
- புதிய பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புக்கள் கோவையினை முடிவுறுத்தல்
- பிணையங்களாக்குவதன் சட்ட கட்டமைப்பினை முறைப்படுத்துதல்

**சந்தை மேற்பார்வை மற்றும் பொறுப்புடைமையினை மேம்படுத்துதல்**

- வர்த்தகத்தின் பயனுறுதிமிக்க கண்காணிப்பிற்கு மேம்படுத்தப்பட்ட செயல்கூறுகளுடன் கண்காணிப்பு முறையினை தரமுயர்த்துதுல்
- பட்டியலிடப்பட்ட நிறுவனங்களுக்கான நிதியியல் கண்காணிப்பிற்கு ஓர் முற்றுமுழுதான வரம்புறுகையினை விருத்திசெய்தல்
- பொறுப்புடைமையினை உறுதிப்படுத்துவதற்காக துணைச் சேவை வழங்குநர்களில் கடமைகளை வார்த்தல்
- அனைத்து மூலதனச்சந்தை நிறுவனங்கள் மற்றும் இடையீட்டாளர்களிலான இ.பி.ப.ஆ. இன் மேற்பார்வையினை மேம்படுத்துதல்
- மூலதனச் சந்தை துர்நடத்தையினை கட்டுப்படுத்துவதற்காக ஓர் பயனுறுதிமிக்க தடையீட்டு பொறிமுறையினை அறிமுகப்படுத்துதல்
- சந்தை தவறுகளில் விரைவான புலன்விசாரணைகள்

**மூலதனச் சந்தை பங்குபற்றுநர்களது தரம் மற்றும் தகமைகளை உயர்த்துதல்**

- மூலதனச் சந்தை நிறுவனங்கள், சந்தை இடையீட்டாளர்கள் மற்றும் பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்கான பொருத்தம் மற்றும் சரியான நியமங்களை மேம்படுத்துதல்
- சந்தை பங்குபற்றுநர்கள் தொடர்பான ஆவணங்களது தரப்படுத்தல்
- மூலதனச் சந்தை பங்குபற்றுநர்களுக்கான நடைமுறையிலுள்ள தகமை வரன்முறைகளை மீளாய்வு செய்து தரமுயர்த்தல்
- அனைத்து சொத்து வகுப்பிற்கும் வசதியளிப்பதற்காக பல்அடுக்கு உரிமமளித்தல் வரம்புறுகையினை விருத்திசெய்தல்
- நம்பிக்கை அலகுப்பொறுப்பாட்சி முகாமைக் கம்பனிகள் மற்றும் முதலீட்டு முகாமையாளர்களுக்கான உலகளாவிய முதலீட்டு செயற்திறன் நியமங்களை அறிமுகப்படுத்துவதற்கான இயலுமையினை மதிப்பீடு செய்தல்
- பணம் சலவை செய்தலை தடுப்பதற்காக இ.பி.ப.ஆ.இன் முறைமைப்படுத்தப்படுபவர்களுக்கும் பிரயோகிக்கத்தகக் உ.வா.தெ. தேவைப்பாட்டினை மேம்படுத்துதல்
- நிதியியல் ரீதியாக சவால்மிக்க கம்பனிகளை வகைப்படுத்தல் மற்றும் வெளிப்படுத்தல்
- முறைமைப்படுத்தல் தேவைப்பாடு தொடர்பாக பங்கு பெறுமதியிடலுக்கான வழிகாட்டிகளை விருத்திசெய்தல்

**அமைப்புசார் இடர்நேர்கையினை குறைத்தல் மற்றும் முகாமைப்படுத்தல்**

- விநியோகம் எதிர் கொடுப்பனவு மற்றும் மத்திய எதிர்தரப்பினர் பொறிமுறையின் அமுலாக்கத்திற்கு வசதியளித்தல்
- மூலதனச் சந்தை நிறுவனங்கள் மற்றும் இடையீட்டாளர்களுக்கான இடர்நேர்கை நிறையிடப்பட்ட மூலதனப் போதுமை வரம்புறுகையொன்றினை விருத்திசெய்தல்
- தளத்திலான மேற்பார்வைக்கு ஓர் இடர்நேர்கை அடிப்படையிலான மதிப்பீட்டு வரம்புறுகையினை விரததிசெய்தல்

## முக்கிய அபிவிருத்தி மூலோபாயங்கள்

### மூலதன உருவாக்கத்தினை இயலுமையாக்குவதற்கான சூழலை உருவாக்குதல்

- பருமன், அளவை மற்றும் திரவத்தன்மையுடைய நிறுவனங்கள் மூலதனச் சந்தையினை அணுகுவதற்காக மேடையொன்றை உருவாக்குதல்
- கூட்டாண்மை கடன்களுக்கான சந்தையினை விருத்திசெய்தல்
- மூலதனச் சந்தையினூடாக உட்கட்டமைப்பு நிதியளிப்பதற்கான ஓர் வரம்புறுகையினை அறிமுகப்படுத்துதல்
- புதிய சந்தை பிரிவுகளுக்கு வசதியளிக்கும் மாற்று பட்டியலிடல் பலகைகளை நிறுவுதல்
- மோர்கன் ஸ்டான்லி மூலதன சர்வதேச வெளித்தோன்றும் சந்தை தரத்திற்கு உயர்வடைதல்

### திரவத்தன்மையினை ஆழப்படுத்துதல் மற்றும் சந்தை பங்குபற்றல் உருவாக்கத்தினை பரவலாக்குதல்

- சிறிய முதலீட்டாளர்கள் சந்தையினை அணுகுவதற்காக நம்பிக்கை அலகுப்பொறுப்பாட்சி துறையினை ஓர் கால்வாயாக விருத்திசெய்தல்
- மூலதனச் சந்தையில் ஓய்வூதிய நிதியங்களது பங்களிப்பினை அதிகரித்தல்
- வெளிநாட்டு முதலீட்டுத்தேக்க முதலீட்டாளர்களை கவர்வதற்காக உகந்த சூழலை இயலுமையாக்குதல்
- குறை விற்பனை, பிணையங்கள் கடன் பெறல் மற்றும் கடன் கொடுத்தல் அறிமுகத்திற்கான ஓர் முறைமையினை உருவாக்குதல்
- திரவத்தன்மையினை அதிகரிப்பதற்காக உயர்ந்த பொதுப் புழக்க தேவைப்பாட்டினை அமுல்படுத்துதல்

### உட்கட்டமைப்பினை விருத்திசெய்தல் மற்றும் புதிய கருவிகளை இயலுமையாக்குதல்

- முறைமைப்படுத்தல் அறிக்கையிடலுக்கு இலத்திரணியல் கோர்ப்பு முறையினை மேம்படுத்துதல்
- பங்குத் தரகுத் துறையில் கட்டளை முகாமைத்துவ முறை மற்றும் இசைவுள்ள பின்புல காரியாலயம் ஆகியவற்றை அமுல்படுத்துதல்
- தரப்படுத்தப்பட்ட எண்மின் நிலை வணிக அறிக்கையிடல் மேடையினை அறிமுகப்படுத்துதல்
- ஆதன முதலீட்டு நம்பிக்கை பொறுப்புகள் மற்றும் பரிமாற்றக வர்த்தக நிதியங்கள் போன்ற புதிய கருவிகளுக்கான கொள்கைகள் மற்றும் விதிகளை உருவாக்குதல்
- இடர்நேர்கை இழப்புக் காப்பரண் கருவிகளது அறிமுகத்திற்கான மேடையொன்றினை உருவாக்குதல்

### உள்ளுர் திறமைகளை கட்டியெழுப்புதல்

- கொ.ப.ப. செயற்பாடுகளை எண்மின் நிலைப்படுதத்ல்
- கொ.பப. இனது பரஸ்பரமற்றமயமாக்கல்
- இ.பி.ப.ஆ. இன் செயற்பாட்டினை எண்மின் நிலைப்படுத்துதல்
- இ.பி.ப.ஆ. அதன் குறிக்கோள்களை பயனுறுதிமிக்க, செயற்திறனாக மற்றும் உரிய நேரத்தில் மேற்கொள்வதற்கு இ.பி.ப.ஆ. இன் அக்கறையினை உறுதிப்படுத்துதல்
- சாமர்த்தியம் மிக்க பணியாட்களை ஆட்சேர்த்து தக்கவைப்பதற்கான வழிமுறைகளை மேற்கொள்வதன் மூலம் முறைமைப்படுத்துபவரது திறன்களை கட்டியெழுப்புதல்
- மூலதனச் சந்தை தொடர்பான அனைத்து பங்காளிகளதும் நிதியியல் கல்வியறிவு மற்றும் மூலதனச் சந்தை வெளிப்படுத்தலை மேம்படுத்துதல்
- தொடர்ச்சியான முதலீட்டாளர் கல்வி மற்றும் பொது விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

# ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்



*இடமிருந்து வலம் நிற்பவர்கள்*

**திரு. டி.என்.ஆர். சிறிவர்தன, திரு. சுனில் லங்காதிலக்க, திரு. பிரியந்த ரத்நாயக்க, திரு. நரேஷ் அபேசேகர, திரு. சிசிர ரத்நாயக்க, திரு. சுஹத கம்லத் ஜ.ச., திரு. எச். ஏ. கருணாரத்ன**

*இடமிருந்து வலம் அமர்ந்திருப்பவர்கள்*

**திரு. மனில் ஜயசிங்க, திரு. விராஜ் தயாரத்ன ஜ.ச. (தலைவர்)**



# ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்

**திரு. விராஜ் தயாரத்ன ஜ.ச.**
(தலைவர்)

திரு. விராஜ் தயாரத்ன, ஜனாபதி சட்டத்தரணி, அவர்கள் 2020 ஜனவரி 22 இல் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவராகப் பதவியேற்றார். இவர் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து சர்வேதச தொடர்புகளில் இளமானி கலைத்துறை பட்டத்தையும் வேல்ஸ் பல்கலைக்கழகத்திலிருந்து சர்வதேச வர்த்தக சட்டத்தில் முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் இலங்கை சட்டக் கல்லூரியில் 1989 இல் பிரவேசித்து நவம்பர் 1992 இல் உயர் நீதிமன்றத்தின் வழக்குரைஞராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

இவர் ஜனவரி 1993 இல் இலங்கை சட்டமா அதிபர் திணைக்களத்தில் அரச சட்டவாதியாக இணைந்து மே 2018 இல் மேலதிக மன்றாடி அதிபதியாக உயர்வு பெற்றார். அதே வருடத்தின் ஜூன் மாதத்தில் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களால் ஜனாபதி சட்டத்தரணியாக நியமிக்கப்பட்டார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தில் அவரது முதலாவது ஆறு வருட காலப்பகுதியில், திரு. தயாரத்ன அவர்கள் குற்றவியல் பிரிவுடன் இணைந்திருந்ததுடன் நீதவான் நீதிமன்றங்கள் மற்றும் மேல் நீதிமன்றங்களில் வழக்குத் தொடுப்புக்களை நடாத்தியதுடன் மேல் நீதிமன்றங்களினால் வழங்கப்பட்ட தீர்ப்புக்களுக்கு எதிராக மேன்முறையீடுகள் தாக்கல் செய்யப்பட்டால் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் அரசுக்காக ஆஜராகினார். இதன் பின்னர், இவர் குடியியல் மற்றும் வர்த்தகச் சட்டப் பிரிவிற்கு நகர்ந்து அரசாங்கம், அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய சட்டபூர்வமான நிறுவனங்களை ஆரம்ப நீதிமன்றங்களுடன் மேன்முறையீட்டு நீதிமன்றங்களிலும் பிரதிநிதித்துவம் செய்தார். இவை பலவற்றுக்கிடையில் அடிப்படை உரிமைகள் தொடர்பான விடயங்கள், பொதுச் சட்டம், வர்த்தகச் சட்டம், வரி, வங்கியியல், சுங்கம் மற்றும் தொழில் சட்டம் ஆகியவற்றுடன் தொடர்புபட்டவையாகும். இவர் இலங்கை மற்றும் வெளிநாடுகளில் பல வர்த்தக நடுத்தீர்ப்புகளில் பிரசன்னமாகியுள்ளார்.

இவரது பணியானது அரசாங்கம், அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய சட்டபூர்வமான நிறுவனங்களுக்கு பலதரப்பட்ட சட்ட விடயங்களில் அறிவுரை வழங்குவதனை உள்ளடக்கும்.

திரு. தயாரத்ன அவர்கள் விஜி குடியரசின் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் வருகைதரும் நீதிபதி மற்றும் மலேஷியாவிலுள்ள ஆசிய சர்வதேச நடுத்தீர்ப்புகள் மத்திய நிலையத்தின் நீதிகாண்பவர்கள் குழாமின் ஓர் நீதிகாண்பவருமாவார். இவர் ICLP நடுத்தீர்ப்பு மத்திய நிலையத்தின் ஆசிரியப் பணியாளர் சபையின் அங்கத்தவருமார். இவர் கட்டுமாண நடுத்தீர்ப்பு மற்றும் நீதிகாண்தலில் வருகைதரும் விரிவுரையாளராகவும் கடமையாற்றுகின்றார்.

இவர் இலங்கை சட்டக் கல்லூரியில் நடுத்தீர்ப்பு சட்டத்தில் வருகைதரும் விரிவுரையாளராகவும் நிர்வாகச் சட்டத்தில் ஓர் பரீட்சிப்பவருமாக கடமையாற்றியுள்ளார். இவர் இன்வோர்மட்டிக்ஸ் இன்ஸ்ட்டிடியூட் ஒவ் டெக்னோலஜி இனால் நடாத்தப்படும் இலண்டன் இளமானி சட்டப் படிப்பு பாடக்கோப்புக்கு ஒப்பந்தச் சட்டத்தில் வருகைதரும் விரிவுரையாளராகவும் சேவையாற்றியுள்ளார்.

திரு. தயாரத்ன அவர்கள் ஓமான் சுல்தானகத்தின் பாதுகாப்பு அமைச்சின் ஒப்பந்தங்கள் மற்றும் சட்ட அலுவல்கள் இயக்கத்தின் சட்ட நிபுணராக 2009 முதல் 2011 வரையான இரண்டு வருட காலப்பகுதியில் சேவையாற்றியுள்ளார். இவர் இலங்கையின் அரச நிறுவனங்களது சீர்திருத்த ஆணைக்குழுவினதும் இலஞ்சமும் ஊழலும் சார்த்துரைகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினதும் சட்ட ஆலோசகராகக் கடமையாற்றியுள்ளார். இவர் இலங்கை வான் படையின் நீதிபதி வழக்குரைஞர் அதிபதியாகவும் கடமையாற்றியுள்ளார்.

இவர் பின்வரும் திட்டங்கள் தொடர்பாக திட்ட உடன்படிக்கைகளை வரைந்த திட்டக் குழுக்களின் அங்கத்தவராவார். மகாவலி சிறு நீர்மின் திட்டத்தை கட்டியெழுப்பு சொந்தமாக்கு செயற்படுத்து /கட்டியெழுப்பு சொந்தமாக்கு செயற்படுத்து மாற்றல்செய் அடிப்படையிலும் கிளிநொச்சி மாவட்ட மின்மயமாக்கல் திட்டத்தை கட்டியெழுப்பு சொந்தமாக்கு செயற்படுத்து அடிப்படையில் ஆகும். அத்துடன் இலங்கைக்கும் ஓமானுக்கும் இடையிலான இருதரப்பு முதலீட்டு உடன்படிக்கையினை பேச்சுவார்த்தை நடாத்திய இலங்கை அரசாங்கத் தூதுக் குழுவின் அங்கத்தவருமாவார். இவர் பல சர்வதேச கருத்தரங்குகளில் அரசாங்கத்தினை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளதுடன் பல பிரசுரங்களுக்கு சட்டத்தின் பல்வேறு தலைப்புகளில் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

அரச சேவைகள் ஆணைக்குழுவானது சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து இ.பி.ப.ஆ. இன் தலைவர் கடமையினை பொறுப்பேற்பதற்காக விடுவிக்கப்பட்டார்.

**திரு. மனில் ஜயசிங்க FCA, FCMA, CIPFA**

திரு. மனில் ஜயசிங்க அவர்கள் (ஐ.இ.) பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிருவகத்தின் சமூக அங்கத்தவரும், இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் சமூக அங்கத்தவரும் மற்றும் அரச நிதியியல் மற்றும் கணக்கீட்டுக்கான பட்டய நிருவகத்தின் அங்கத்தவருமாவார்.

இவர் 38 வருடங்கள் பரவலான அனுபவத்தினை இலங்கை எர்ன்ஸ்ட் அன்ட் யங் நிறுவனத்தில் கொண்டுள்ளதுடன் தற்போது வங்கியியல் மற்றும் நிதியியல் சேவைகளுக்குப் பொறுப்பான உறுதித் தலைமைப் பதவியினை வகிக்கின்றார்.

தற்போது இவர் பின்வரும் பதவிகளில் சேவையாற்றுகின்றார்:-

- இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் தலைவர்,
- சட்டரீதியான கணக்கீட்டு நியமங்கள் குழுவின் தலைவர், சட்டரீதியான கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவர் மற்றும் வேறு பல குழுக்களிலும் சேவையாற்றுகின்றார்.
- தெற்காசிய கணக்காளர்கள் சம்மேளனத்தின் கணக்கீட்டு நியமங்கள் குழுவின் தலைவர்.
- இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் அங்கத்தவர்

- சி.எம்.ஏ. ஸ்ரீ லங்காவின் சபை உறுப்பினர்
- பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் கணக்காய்வுக் குழுக்களில் ஆலோசகராக கடமையாற்றுதல்

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் தேர்வுக் குழுவின் தலைவராகவும், கடந்த வருடத்தில் சட்டரீதியான கணக்கீட்டு நியமங்கள் குழுவின் மாற்றீடு தலைவராகவும், சர்வதேச கணக்காளர்கள் சம்மேளனத்தின் சர்வதேச கணக்கீட்டு கல்வி தரங்கள் சபையின் அங்கத்தவராகவும், மொரட்டுவ பல்கலைக்கழகத்தினது சங்கத்தின் அங்கத்தவராகவும் கடமையாற்றியுள்ளார்.

### திரு. சுஹத கமலத், ஜ.ச.

திரு. கமலத் அவர்கள் ஓர் முன்னாள் மன்றாடி அதிபதி மற்றும் நீதி மற்றும் சட்ட சீர்திருத்தங்கள் அமைச்சின் முன்னாள் செயலாளரும் ஆவார்.

### திரு. எச்.ஏ.கருணாரத்ன

திரு. எச். ஏ. கருணாரத்ன அவர்கள் தற்போது இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநராகக் கடடையாற்றுவதுடன் இலங்கையிலும் வெளிநாட்டிலும் நிதியியல் சேவைகள் துறையில் பரந்த அனுபவத்தினைக் கொண்டுள்ளார். அவர் இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் முறைமை ஸ்திரத்தன்மை குழு, தேசிய கொடுப்பனவுகள் சபை, ஊ.சே.நி. முதலீடுகள் மேற்பார்வை குழு ஆகியவற்றின் தலைவராகவும் கடமையாற்றுகின்றார். அத்துடன் அவர் மத்திய வங்கியின் பல குழுக்களில், நாணயக் கொள்கை குழு உள்ளடங்களாக அங்கத்தவராகவும் கடமையாற்றுகின்றார். அத்துடன் அவர் இலங்கையின் கடன் தகவல் மையம் மற்றும் இலங்கை வங்கியாளர்கள் நிருவகம் மற்றும் வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிட்டட் ஆகியவற்றின் தலைவராகவும் கடமையாற்றுகின்றார். இதற்கும் மேலாக அவர் இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழுவின் அங்கத்தவராகவும், ஏனையவற்றுக்கிடையில் கொழும்பு டொக்யார்ட் பி.எல்.சி. நிறுவனத்தின் பணிப்பாளராகவும் பணிபுரிகின்றார். இவரது முப்பத்து நான்கு வருட சேவைக்காலத்தில் அவர் வகித்த சில முக்கிய பதவிகள் பின்வருமாறு: உதவி ஆளுநர் மற்றும் நாணயச் சபையின் செயலாளர், நாணயச் சபை ஆலோசனைக் கணக்காய்வுக் குழுவின் செயலாளர், பணிப்பாளர் சர்வதேச செயற்பாடுகள் திணைக்களம், இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் நுண்ணறிவுப் பிரிவின் பணிப்பாளரும் ஆவார்.

திரு. கருணாரத்ன அவர்கள் ரெவ்கோ சிங்கப்பூர் பிரைவேட் லிமிட்டட்டின் நிலையான வருமானத் திணைக்களத்தின் துணைத் தலைவராகவும் மேன் வைனான்சியல் பிரைவேட் லிமிட்டட் சிங்கப்பூரில் முதன்மை இடர்நேர்கை கண்காணிப்பிற்கான துணைத் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார். இக்காலப்பகுதியில் சிங்கப்பூர் நாணய அதிகாரசபையிலிருந்து எதிர்வுத் தெரிவுகள் மற்றும் ஏனைய மூலாதாரப் பிணையங்களில் வர்த்தகம் செய்வதற்கான உரிமத்தினையும் பெற்றுக்கொண்டார்.

திரு. கருணாரத்ன அவர்கள் மே 2009 முதல் ஒக்டோபர் 2015 வரை இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்க முகாமைத்துவக் குழு, மற்றும் சந்தைச் செயற்பாடுகள் குழு ஆகியவற்றின் அங்கத்தவராயிருந்தார். தற்போது இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் இளமானி பட்டத்தையும், அமெரிக்காவின் ஒஹியோ பல்கலைக்கழகத்திலிருந்து பொருளியலில் முதுமானி பட்டத்தையும் வைத்துள்ளார். இவர் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் சமூக அங்கத்தவருமாவார்.

திரு. கருணாரத்ன அவர்கள் பல்வேறு உள்ளூர் மற்றும் சர்வதேச மன்றங்களில் பலவிதமான தலைப்புக்களில் வழக்கமான சொற்பொழிவாளராவார்.

### திரு. ஆர். எம். பி. ரத்நாயக்க

திரு. ஆர். எம். பி. ரத்நாயக்க அவர்கள் இலங்கை திட்டமிடல் சேவையின் விசேட தரத்திலான உத்தியோகத்தர் என்பதுடன், தற்போது பொதுத் திறைசேரிக்கு பிரதிச் செயலாளராக பணிபுரிகின்றார். இவர் அரச சேவையில் 25 வருடங்களாக பல்வேறு பதவிகளை வகித்துள்ளார்.

திரு. ரத்நாயக்க அவர்கள் நோர்வே பல்கலைக்கழகத்தில் விவசாயத்துறையில் முதுமானி பட்டத்தையும் பேராதனை பல்கலைக்கழகத்திலிருந்து இளமானி விஞ்ஞான (விசேட) பட்டத்தையும் வைத்துள்ளார்.

இவர் 1994 இல் அரச சேவையில் இணைந்ததுடன் பொதுத் திறைசேரியில் தேசிய திட்டமிடல் திணைக்களம், வெளிவாரி வளங்கள் திணைக்களம் போன்றவற்றில் பல்வேறு பதவிகளை வகித்திருந்தார். வெளிவாரி வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் என்ற வகையில் அபிவிருத்தித் திட்டங்களுக்கான வெளிநாட்டு நிதியினைத் திரட்டுவதற்காக அபிவிருத்தி பங்காளிகள், கடன்வழங்கும் முகவர்கள் மற்றும் மூலதனச் சந்தை என்பவற்றுடனான ஒருங்கிணைப்பிற்கு பொறுப்பாளியாக இருந்தார். அத்துடன் அவர் இருதரப்பு பேச்சுவார்த்தைகளின் ஈடுபட்டதுடன் வெளிநாட்டு நிதியானது நேரகாலத்துடன் வழங்கப்படுவதற்கு வசதியளித்தும் உள்ளார்.

திரு. ரத்நாயக்க அவர்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் வெளிவாரி வளங்கள் திணைக்களப் பிரிவிற்கு பொறுப்பாயுள்ள பணிப்பாளராகவும், ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் மாற்று நிறைவேற்று பணிப்பாளராகவும், தேசிய சேமிப்பு வங்கியின் தலைவராகவும், மக்கள் வங்கியின் பணிப்பாளராகவும், பட்டப்படிப்பின் பின்னரான மருத்துவ நிருவகத்தினது முகாமைத்துவச் சபையின் அங்கத்தவராகவும், இலங்கையின் அரசு மருந்துக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராகவும், இலங்கையின் சிவில் விமானப் பிரயாண அதிகாரசபையின் பணிப்பாளராகவும், இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிருவகத்தின் பணிப்பாளராகவும், தேசிய மருந்துகள் முறைமைப்படுத்தல்

# ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்

அதிகாரசபையின் அங்கத்தவராகவும் கடமை புரிந்துள்ளார்.

திரு. ரத்நாயக்க அவர்கள் பல் வேறு துறைகளில் / பல்வேறு விடயங்கள் தொடர்பாக பல கட்டுரைகளைப் பிரசுரித்துள்ளார்.

**திரு. சிசிர ரத்நாயக்க**

திரு. ரத்நாயக்க அவர்கள் 35 வருடங்களாக சட்டத்துறையில் சுறுசுறுப்பாக ஈடுபட்டுள்ளதுடன் இலங்கையில் குடியியல் மற்றும் குற்றவியல் சட்டத்தில் பரவலான அனுபவத்தினை கொண்டுள்ளார். இவர் ஐக்கிய இராச்சியத்தின், ஸ்கொட்லாந்திலுள்ள அபர்டீன் பல்கலைக்கழகத்தில் வணிகச் சட்டத்தில் பாராட்டுக்களுடன் முதுமானி பட்டத்தைப் (L.L.M.) பெற்றுள்ளதுடன் இலங்கையின் உயர் நீதிமன்றத்தின் சட்ட வழக்கறிஞருமாவார்.

திரு. ரத்நாயக்க அவர்கள் நீதித்துறையில், நீதிவானாக, மாவட்ட நீதிபதியாக, மேல் நீதிமன்ற நீதிபதியாகவும் மற்றும் இலங்கையின் பல்வேறு நீதிமன்றங்களில் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்தின் நீதிபதியாகவும் சேவையாற்றியுள்ளார். 2013 -2105 காலப்பகுதியில் இவர் நீதிச்சேவை ஆணைக்குழுவில் செயலாளராக கடமையாற்றியுள்ளார். இவர் 2007-2008 காலப்பகுதியில் நிதி அமைச்சில் மேலதிக செயலாளர் (சட்டம் ) ஆகவும் சேவையாற்றியுள்ளார்.

நீதிச் சேவைகள் சங்கத்தின் பிரதி தலைவராகவும், தலைவராகவும் சேவையாற்றியுள்ளார். (நீதிச் சேவைகள் சங்கமானது நாட்டிலுள்ள அனைத்து நீதிவான்கள், மாவட்ட நீதிபதிகளை உள்ளடக்கிய ஓர் சங்கமாகும்). இவர் மேல் நீதிமன்ற நீதிபதிகளின் சங்கத்தில் பிரதி தலைவராகவும், தலைவராகவும் சேவையாற்றியுள்ளார். (மேல் நீதிமன்ற நீதிபதிகளின் சங்கமானது நாட்டிலுள்ள அனைத்து மேல் நீதிமன்ற நீதிபதிகளையும் உள்ளடக்கிய ஓர் சங்கமாகும்).

இவர் பின்வரும் சர்வதேச நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்றுள்ளார். ஹொங்கொங்கில் இடம்பெற்ற, "கம்பனிகள் சட்டத்திலான நவீன போக்குகளில் மேம்படுத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்", சிங்கப்பூரில், "பிராந்திய நீதித்தறை கருத்தரங்கு 2007", சிங்கப்பூரில் இலங்கையின் சிரேஷ்ட நீதித்துறை அங்கத்தவர்களுக்கான "சர்வதேச நடுத்தீர்ப்பு மற்றும் பொருளமைத்தல் சட்டத்திலான நிறைவேற்று பயிற்சி", இந்தியாவில், "இலங்கை நீதிபதிகளுக்கான அறிவுசெறிந்த நிகழ்ச்சித்திட்டம்", சிங்கப்பூர் அரச சேவை கல்லூரியில் இடம்பெற்ற "நீதித்துறை மற்றும் தனிச்சிறப்பு சிங்கப்பூரில் கற்கை விஜயம்", தென் கொரியாவில் "KOICA பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்", இங்கிலாந்தின் எடின்பேர்க்கில் "UKELA வருடாந்த கருத்தரங்கு" என்பவையாகும். இவர் இந்தியாவில் இடம்பெற்ற நீதிமன்ற முகாமைத்துவம், வழக்கு முகாமைத்துவம், குடியியல் சட்ட மறுசீரமைப்பு மற்றும் குடும்ப சட்ட மறுசீரமைப்பு ஆகிய நிகழ்ச்சித்திட்டங்களிலும் பங்கேற்றுள்ளார்.

இவர் பின்வரும் உலகளாவிய நிகழ்வுகளில் இலங்கையினை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார். "தென் ஆபிரிக்கா, கேப் டவுனில் இடம்பெற்ற" ஆசிய-ஆபிரிக்க சட்ட ஆலோசனை ஒழுங்கமைப்பின் 46 ஆவது அமர்வு", அமெரிக்காவின் வாஷிங்டன் டி.சி. இல் இடம்பெற்ற "நீதித்துறை பேச்சுவழக்கு", அமெரிக்காவில் இடம்பெற்ற "கடனிறுக்க வகையின்மையில் INSOL/UNCITRAL∴ உலக வங்கி கூட்டு பல்தேச நீதித்துறை பேச்சுவழக்கு" என்பவற்றிலும் பங்குபற்றியுள்ளார்.

**திரு. டி.என்.ஆர். சிறிவர்தன**

திரு. டி. என். ஆர். சிறிவர்தன அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பூகோளவியலில் இளமானி (மேன்மை) பட்டத்தையும் இலங்கையின் திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டத்துறை பட்டத்தையும் (LLB) பெற்றுள்ளதுடன் ஐக்கிய இராச்சியத்தின் கார்டிவ் மெட்ரோபொலிடன் பல்கலைக்கழகத்தில் சர்வதேச வியாபாரத்துடன் தகவல் தொழில்நுட்பம் மற்றும் அறிவுசார் சொத்து என்பவற்றில் முதுமானி பட்டத்தையம் (LL.M) பெற்றுள்ளார். இவர் ஓர் தொழில்சார் வழக்கறிஞராவார். திரு. சிறிவர்தன அவர்கள் 1988 இல் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் சேர்ந்தார். தற்போது இவர் கம்பனிகள் பதிவாளர் நாயகமாக கடமை புரிகின்றார். திரு. சிறிவர்தன அவர்கள் இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினதும் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச்சபையினதும், இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழுவினதும் இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழுவினதும் இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் நுண்ணறிவு அலகினது ஆலோசனைச் சபையினதும் பதவிவழி அங்கத்தவராவார்.

**திரு. சுனில் லங்காதிலக்க**

திரு. சுனில் லங்காதிலக்க அவர்கள் இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுனராவார். இவர் ஐக்கிய இராச்சியத்தின் மென்செஸ்டர் பல்கலைக்கழகத்திலிருந்து பொருளியலில் முதுமானி விஞ்ஞான பட்டத்தையும் பட்டப்படிப்பின் பின்னரான டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளதுடன், பேராதனை பல்கலைக்கழகத்திலிருந்து வணிகத்தில் முதலாம் வகுப்பு இளமானி பட்டத்தையும் பெற்றுள்ளார். அத்துடன் இவர் பேராதனை பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பின் பின்னரான விவசாயத்துறை நிருவகத்திலிருந்து விவசாயப் பொருளியலில் முதுமானி தத்துவப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

திரு. லங்காதிலக்க அவர்கள் இலங்கை மத்திய வங்கியில் பொருளாதார மற்றும் விலை ஸ்திரத்தன்மை, நிதியியல் துறை ஸ்திரத்தன்மை மற்றும் முகவர் தொழிற்பாடுகள் போன்ற பிரிவுகளில் 32 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தினைக் கொண்டுள்ளார். 1986 இல் இலங்கை மத்திய வங்கியில் சேரும் முன்னர் இவர் பேராதனை பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராக கடமையாற்றியுள்ளார்.

இலங்கை மத்திய வங்கியில் இவரது 32 வருடகால சேவையில், திரு. லங்காதிலக்க அவர்கள் பின்வரும் பிரசித்தி பெற்ற பயிற்சி வழங்குனர்களினால் நடாத்தப்பட்ட அதிக எண்ணிக்கையிலான சர்வதேச பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்றுள்ளார். சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் ஆகியவற்றினால் நடாத்தப்பட்ட கருத்தரங்குகளில் பின்வரும் தலைப்புகளில் பயிற்சி பெற்றுள்ளார்.

பாரிய பொருளாதார முகாமைத்தும், பாரிய பொருளாதார மாதிரியமைத்தல், நிதியியல் நிரலாக்கல், வர்த்தக கொள்கைகள், போட்டித்தன்மை, திட்ட முகாமைத்துவம், வெளிநாட்டு முதலீடு, மூலோபாய திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம், மனித வள முகாமைத்துவம் மற்றும் தொடர்பாடல் கொள்கை என்பனவாகும். திரு. லங்காதிலக்க அவர்கள் இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையில் அங்கத்தவராகவும், பதிவாளர் அதிபதி திணைக்களத்தின் உரிமைக் காப்பீட்டு நிதியத்தின் முகாமைத்துவ சபை, தேசிய தொழிலாளர் ஆலோசனைக் குழு மற்றும் இலங்கை மத்திய வங்கியினை பிரதிநிதித்துவப்படுத்தும் பல்வேறு ஏனைய குழுக்களில் அங்கத்தவராகவும் கடமையாற்றியுள்ளார். திரு. லங்காதிலக்க அவர்கள் விசேடமாக வங்கியியல் உறவுகள், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு போன்ற பிரிவுகளிலான பல்வேறு அரசாங்க தூதுக்குழுக்கள் மற்றும் பேச்சுவார்த்தை குழுக்களில் இலங்கை மத்திய வங்கியினை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார். திரு. லங்காதிலக்க அவர்கள் பல கட்டுரைகளை எழுதியுள்ளதுடன் அவற்றை பிரசித்திபெற்ற சர்வதேச மற்றும் உள்ளூர் சஞ்சிகைகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பிரசுரங்களிலும் வெளியிட்டுள்ளார். இவை பொருளாதார விடயங்கள், சிற்றளவு கைத்தொழில்கள், சர்வதேச வர்த்தகம், மாணிக்கக்கல் துறை, ஆடைத் துறை போன்றவற்றை உள்ளடக்கும்.

திரு. லங்காதிலக்க அவர்கள் பல்வேறு மன்றங்களில் பல்வேறு தராதரங்களில் திட்ட முகாமைத்துவம், திட்ட மதிப்பீடு, நுண்ணிய மற்றும் பாரிய பொருளாதாரம் போன்ற பிரிவுகளில் பிரசித்திபெற்ற வளவாளரும் ஆவார். திரு. லங்காதிலக்க அவர்கள் பொருளாதாரத்தின் பரவலான தலைப்புகளில் பல்வேறு கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகளில் அதிகளவு எண்ணிக்கையிலான விளக்கக்காட்சிகளை நடாத்தியுள்ளார்.

### திரு. நரேஷ் அபேசேகர

தொழில்முனைவர், முதன்மைப் பேச்சாளர், ஸ்தாபகர்/பிரதம நிறைவேற்று அதிகரி - SECQUORO உருமாற்றுகை மூலோபாயம், நிதி, எண் மின் நிலை மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றில் விசேடத்துவம் கொண்டது.

நரேஷ் அவர்கள் மிலேனியம் ஐடி(இலண்டன் பங்குப் பரிவர்த்தனைக் குழு தொழில்நுட்பம் ) குழுமத்தின் பிரதம நிதி அதிகாரியாயிருந்தார். லண்டன், ஹொங்கொங், சிங்கப்பூர், கனடா, இத்தாலி, மலேஷியா, ஜொஹனஸ்பேர்க் மற்றும் ஆபிரிக்கக் கண்டத்தின் அனேகமான பரிவர்த்தனைகளை உள்ளடக்கிய உலகளவில் பரந்து காணப்படும் 40 உரித்துவ வர்த்தக இடங்களுக்கு உலகின் அதிவேகமான வர்த்தக மேடையினை வழங்கிய மூலதனச் சந்தை தொழில்நுட்பத்தினை விருத்திசெய்த உலகின் முன்னணி நிறுவனமாகும். இவர் லண்டன் பங்குப் பரிவர்த்தனை குழுமத்தின் உலகளாவிய தலைமைத்துவ குழுவிலும் காணப்பட்டார். இக்குழுமமானது சந்தை மூலதனவாக்க ரீதியாக ஒரு பிரதம நிறைவேற்று அதிகாரியின் கீழ் உலகில் காணப்படும் இரு பாரிய முன்னணி பரிவர்த்தனை குழுமத்தின் ஒன்றாகும் என்பதுடன் ஹாவார்ட் வணிக மீளாய்வில் உலகின் முன்னணி 100 ஆக தரவரிசைப்படுத்தப்பட்டது. ஆசியாவிலேயே 200 நிறுவனங்களில் சிறந்தது என வோர்ப்ஸ் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தெற்காசியாவிலேயே மிகப்பெரிய உற்பத்தி வசதியினை பட்டியலிடுவதற்கு இவரும் கருவியாகக் காணப்பட்டார்.

“தெற்காசியாவின் சிறந்த ஆண்டறிக்கையினை” தயாரித்தமைக்காக நிதியியல் அறிக்கையிடலுக்காக மற்றும் நிறுவன வள திட்டமிடல் அமுலாக்கல்களுக்கு பிராந்திய ரீதியில் பாராட்டுக்களை வெல்வதற்கு கருவியாகச் செயற்பட்டார்.

இவர் உள்வாரி கணக்காய்வு நிருவகத்தின் இலங்கை சங்கத்தினை இணை நிறுவினார். இது இலங்கையில் இடர்நேர்கை மற்றும் ஆளுகை அறிவு வரம்புறுகையினை மேம்படுத்துவதற்காக நிறுவப்பட்டதுடன், நகோயா-ஜப்பான் டொயோட்டா உற்பத்தி ஆலையில் தொடர்ச்சியான மேம்படுத்தல் நடைமுறைகளில் பயிற்றுவிக்கப்பட்டுள்ளார்.

இவர் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகம், பட்டய முகாமைத்துவ கணக்காளர் (லண்டன்), பட்டய உலகளாவிய முகாமைத்துவ கணக்காளர் ஆகியவற்றின் சமூக அங்கத்தவராவதுடன் பிரசித்தி பெற்ற பட்டப்படிப்பின் பின்னரான முகாமைத்துவ நிருவகத்தில் வணிக நிருவாகத்தில் முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார்.

# சிரேஷ்ட முகாமைத்துவம்



*இடமிருந்து வலம் நிற்பவர்கள்*

மதுகயனி பலபிட்டிய - முகாமையாளர், சட்டம் மற்றும் வலியுறுத்தல் மற்றும் மாற்றாள் தலைமை, மனித வளம் மற்றும் தகவல் தொழில்நுட்பம்
சுனெத் பெரேரா - உதவிப் பணிப்பாளர், மூலதனச் சந்தை கல்வி
துஷாரா ஜயரத்ன - பணிப்பாளர், வெளிவரி உறவுகள் மற்றும் மூலதனச் சந்தை கல்வி
பிரபாஷ் வணிகதுங்க - பணிப்பாளர், கண்காணிப்பு மற்றும் மாற்றாள் பணிப்பாளர், மேற்பார்வை
மனூரி வீரசிங்க - உதவிப் பணிப்பாளர், கூட்டாண்மை அலுவல்கள்
ஜி.பி.என். டில்ஹானி - உதவிப் பணிப்பாளர், நிதி மற்றும் மாற்றாள் பணிப்பாளர், நிதி மற்றும் நிர்வாகம்

*இடமிருந்து வலம் அமர்ந்திருப்பவர்கள்*

அயந்தி அபேவிக்கிரம - பணிப்பாளர், சட்டம் மற்றும் வலியுறுத்தல் மற்றும் மாற்றாள் பணிப்பாளர், புலனாய்வுகள்
சிந்தக்க மென்டிஸ் - பணிப்பாளர் நாயகம்
கலாநிதி. ஹர்சன பீரிஸ் சூரியபெரும - பணிப்பாளர், கூட்டாண்மை அலுவல்கள் மற்றும் மாற்றாள் பணிப்பாளர், மூலதனச் சந்தை அபிவிருத்தி

*சமூகமளிக்காதவர்*

தம்மிக்க பெரேரா - பிரதிப் பணிப்பாளர் நாயகம்



# முகாமையாளர்கள்



*இடமிருந்து வலம் நிற்பவர்கள்*
ஷீனா குணரத்ன - முகாமையாளர், வெளிவாரி உறவுகள்
சர்மிளா பண்டித்தரத்ன - முகாமையாளர், சட்டம் மற்றும் வலியுறுத்தல்
சவுமி கொடிப்பிலி - முகாமையாளர், மேற்பார்வை
மஞ்சுளா சந்திரரத்ன - முகாமையாளர், மேற்பார்வை
ரண்மினி ஜயதிலக்க - முகாமையாளர், தகவல் அமைப்புகள்

*இடமிருந்து வலம் அமர்ந்திருப்பவர்கள்*
டி.எம்.ஜி. பிரியந்த - முகாமையாளர், புலனாய்வுகள்
லக்ஷ்மி விக்கிரமநாயக்க - முகாமையாளர், நிதி
சஜீவனி பக்மீதெனிய - முகாமையாளர், மூலதனச் சந்தைக் கல்வி

# பணியாட்டொகுதி அங்கத்தவர்கள்



*மேல் இடமிருந்து வலம் நிற்பவர்கள்*
ஒலிவி சொலங்காராச்சி, தக்ஷிலா பிரான்சிஸ், ஆர்.கே. வசந்த சுனிமல், புத்தினி ஹேரத்

*கீழ் இடமிருந்து வலம் நிற்பவர்கள்*
பிரியந்த ஹேரத், அனுலா விஜேசிங்க, சமரி ஹீனட்டிகல



*மேல் இடமிருந்து வலம் நிற்பவர்கள்*
எரங்க மந்திரிரத்ன, ஜி. டி. கபில குமார, ரக்கித்த அசேல திசாநாயக்க

*கீழ் இடமிருந்து வலம் நிற்பவர்கள்*
நிஷோகா ஜயதுங்க, கிரிஷாந்தி முத்துதந்திரிகே, மேகலா ஜயபால, கே.ஏ.ஏ.டி.செமினி தயனிக்கா, மேரியன் கிலென்டா சந்தானம்



*மேல் இடமிருந்து வலம் நிற்பவர்கள்*
குமாரி சிறிவர்தன, தசுன் பெரேரா, பூர்ணி வீரசேகர, நிமால் குமாரசிங்க

*கீழ் இடமிருந்து வலம் நிற்பவர்கள்*
எம். இம்ரான் ஹாமட், ஹேன் கிரிஷாந்தி பர்னாந்து, துலாரி முகாந்திரம், ஜே.கே. பிரியதர்ஷினி

# பணியாட்டொகுதி அங்கத்தவர்கள்



*மேல் இடமிருந்து வலம் நிற்பவர்கள்*
தனிஷ்க திலக்கரத்ன, தசங்க வர்ணகுலசூரிய, ரந்திக்க சில்வா

*கீழ் இடமிருந்து வலம் நிற்பவர்கள்*
ரசங்கி திசாநாயக்க, பி.எம்.நிரோஷிகா உதயங்கனி, சுதாரா வீரக்கொடி, கவுஷல்யா குணவர்தன



*மேல் இடமிருந்து வலம் நிற்பவர்கள்*
தனேஷா ராஜபுர, ஏ.சி. டயஸ், ரோஷினி பீரிஸ்

*கீழ் இடமிருந்து வலம் நிற்பவர்கள்*
கவிஷா கும்புக்ககே, கயான் லொக்குகமகே, பிரீணிக்கா நிலக்ஷி பெரேரா



*மேல் இடமிருந்து வலம் நிற்பவர்கள்*
ராதா பிரத்திபா, சச்சின் வீரசூரிய, ரசிக வல்பிட்டகம, கவுஷல்யா விஜேசிரி, மரீஸ் வணிகசேகர



*மேல் இடமிருந்து வலம் நிற்பவர்கள்*
வை. டீ. சந்தமாலி, உதானி கே. விக்கிரமரத்ன, சரண்யா அனுதினன், பிரத்திபானி ஹேரத், சி. எரந்ததி வைத்தியசேகர



*மேல் இடமிருந்து வலம் நிற்பவர்கள்*
டி. பெத்தும் நிரோஷன, சமித் பிரேமரத்ன, சந்திரன் நாகேந்திரன், டி. ரந்திக்க ஹெட்டியாரச்சி, புத்திக பலபிட்டிய

*கீழ் இடமிருந்து வலம் நிற்பவர்கள்*
எம். ஏ. சந்தருவன் விஜேரத்ன, டபிள்யு. ஆரியரத்ன, எஸ்.டி. தர்மசிறி, பி.டி. பத்மராணி, எச்.ஜி. ரஜித்த வருண, பி.டபிள்யு.எல். பியதிஸ்ஸ

*சமூகமளிக்காதோர்*
கிறிஸ்டோபள் சில்வா, அசோகா கே தயாரத்ன, நொமானி செனவிரத்ன, சமந்தி குணவர்தன, சுரேகா ஜயசேகர, ஜூலி அலகக்கோன், லக்ஷ்மி அத்தபத்து, தனூஷி தல்பிட்ட மற்றும் லலிந்த ஜயரத்ன

# செயற்பாட்டு மீளாய்வு

## முறைமைப்படுத்தல்

முறைமைப்படுத்தலானது சமச்சீரற்ற தகவல்களை தீர்த்தல், இடையூறுகளை தவிர்த்தல், முதலீட்டாளர் நம்பகத்தன்மையினை வளர்த்தல் மற்றும் நன்கு செயற்படும் சந்தையினை உறுதிப்படுத்தும் நோக்கை உடையதாகும். இந்த குறிக்கோள்களை அடைவதற்காக, இ.பி.ப.ஆ. சிறந்த கூட்டாண்மை ஆளுகையினை ஊக்கப்படுத்தும், வெளிப்படுத்தல்களை ஊக்குவிக்கும், கொள்கைகளை அறிமுகப்படுத்தும் மற்றும் முன்மதியுடைய மற்றும் வணிக நடத்தை விதிகளை உருவாக்கும் ஓர் முறைமைப்படுத்தல் வரம்புறுகையினை நிறுவியுள்ளது.

## உரிமமளித்தல் மற்றும் பதிவீடுகள்

முறைமைப்படுத்தப்பட்ட மூலதனச் சந்தை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு நிறுவனங்கள் இ.பி.ப.ஆ. இடமிருந்து, சட்டத் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கமைய, ஓர் உரிமத்தினை அல்லது பதிவீட்டினை பெற்றுக்கொள்ளல் வேண்டும். அத்தகைய நிறுவனங்களுக்கு வழங்கப்படும் உரிமங்கள் மற்றும் பதிவீட்டுச் சான்றிதழ்கள் மீளாய்வாண்டில் பின்வருமாறு புதுப்பிக்கப்பட்டன. (உருவம் 1)

உருவம் 01 : உரிமமளித்தல் மற்றும் பதிவீடுகள்

| முறைமைப்படுத்தப்படும் நிறுவனத்தின் வகை | 31 டிசம்பர் 2019 இல் உரிமமளிக்கப்பட்ட / பதிவீடளிக்கப்பட்ட நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|
| பங்குப் பரிவர்த்தனை | 01 |
| பங்குத்தரகுக் கம்பனிகள் | 26 |
| பங்குத்தரகுக் கம்பனிகள் - வியாபாரச் செயற்பாடுகளின் மனமுவந்த செயல் முடக்கல் | 2 |
| பங்கு வர்த்தகக் கம்பனிகள் | 11 |
| முதலீட்டு முகாமையாளர்கள் | 24 |
| எல்லைக் கடன் வழங்குநர்கள் | 26 |
| ஒப்புரவாளர்கள் | 7 |
| கடன் தரப்படுத்தல் முகவர்கள் | 2 |
| தீர்வக இல்லம் | 1 |

## கொள்கை முன்னெடுப்புகள்

### 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்திற்கான திருத்தங்கள்

பிணையங்கள் பரிவர்த்தனை சட்டமூலத்திற்கான முடிவுறுத்தப்பட்ட வெளிப்பாட்டு வரைவானது 22 நவம்பர் 2017 இல் வழங்கப்பட்ட இணைப்பில் 17 நவம்பர் 2017 திகதியிடப்பட்ட வர்த்தமானியின் பகுதி இரண்டில் பிரசுரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு கிடைக்கக்கூடியதாக இருந்தது. வர்த்தமானியிடப்பட்ட பதிப்பிட்கு, கொ.ப.ப. மற்றும் இலங்கை வர்த்தக சம்மேளனம் உள்ளடங்களாக, பங்காளிகளிடமிருந்து பல கருத்துக்களும் அக்கறைகளும் பெற்றுக்கொள்ளப்பட்டன.

பங்காளிகளினால் உள்ளக மற்றும் வெளிவாரியாக தெரிவிக்கப்பட்ட அக்கறைகள் கருத்திற்கொள்ளப்பட்டு பயனுறுதிமிக்க மூலதனச் சந்தை முறைமைப்படுத்தலுக்கு அவசியமான முறைமைப்படுத்தல் அதிகாரங்கள் தக்கவைக்கப்பட்டவேளை திருத்தங்கள் பிரேரிக்கப்பட்டன. சில திருத்தங்கள் உலக வங்கியின் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடப்பட்டு அவர்களது ஆலோசனையும் கருத்திலெடுக்கப்பட்டது.

முடிவுறுத்தப்பட்ட திருத்தங்களுக்கான அமைச்சரவை அங்கீகாரமானது 2019 ஏப்ரல் 09 இல் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் வழங்கப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட திருத்தங்கள் நிதி அமைச்சினால் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### கொ.ப.ப. இன் பரஸ்பரமற்றமயமாக்கல்

இ.பி.ப.ஆ. பிரேரிக்கப்பட்டுள்ள பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பங்குகளது பகிர்வினைப் பற்றி கலந்துரையாடுவதற்காக கொ.ப.ப. மற்றும் பங்குத்தரகு நிறுவனங்களுடன் ஓர் தொடரான கூட்டங்களில் பங்கேற்றது. பகிரப்படும் பங்குகளை மூலதனச் சந்தை அபிவிருத்தி நிதியத்திற்கு 70 : 30 என்ற விகிதாசாரப்படி பகிர்ந்தளிப்பதற்காக பங்குத்தரகர்களுடன் ஒருமித்த கருத்தானது எட்டப்பட்டது. இதற்கும் மேலாக, தரகு அங்கத்தவர்கள் மற்றும் மூலதனச் சந்தை அபிவிருத்தி நிதியத்தினது 30% உரிமையினை விற்பனை செய்யும் சமயத்தில் ஓர் மூலோபாய முதலீட்டாளருக்கு இடமளிப்பதற்காக வரைவு பரஸ்பரமற்றமயமாக்கல் சட்டமூலத்திற்கு அவசியமான திருத்தங்களை பிரேரிப்பதற்கும் ஆணைக்குழு அங்கீகரித்தது.

குறித்த திருத்தங்களுக்கான அமைச்சரவையின் அங்கீகாரம் 2019 ஏப்ரல் 09 இல் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் வழங்கப்பட்டதுடன் வரைவு பரஸ்பரமற்றமயமாக்கல் சட்டமூலத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட திருத்தங்கள் நிதியமைச்சினால் சட்ட வரைஞர் திணைக்களம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டன.

### புதிய பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் விதிக்கோவை

புதிய பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் விதிக்கோவையின் வரைவானது சனாதிபதி சட்டத்தரணி நீதிபதி சலீம் மர்சூவ் அவர்களது, இலங்கையின் உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி, தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டலின் கீழ் தயாரிக்கப்பட்டதுடன் முற்றாக சுயாதீனமான பொறுப்பேற்புகள் ஆலோசனை குழுவொன்று காணப்படுவதன் நன்மை தீமைகளை அளவிடுவதற்காக செயலகத்தின் மேலதிக மீளாய்வுக்கு உட்பட்டது. உள்வாரியாக பெறப்பட்ட ஒட்டுமொத்த கருத்துக்களை கவனத்திலெடுத்து இக்கோவையானது மேலதிக திருத்தங்களுக்கு உட்பட்டுள்ளது.

## அங்கீகாரங்கள்

### உலகளாவிய, பிராந்திய மற்றும் தேச நிதியங்கள்

வரையறுக்கப்பட்ட (தனியார்) மத்திய வைப்புத் திட்டத்தின் பரிந்துரைக்கமைய இ.பி.ப.ஆணைக்குழுவானது உலகளாவிய, பிராந்திய மற்றும் தேச நிதியங்களுக்கு கொ.ப.பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பங்குகளில் முதலீடு செய்வதற்கு அங்கீகாரம் வழங்குகின்றது. இவ் அங்கீகாரமானது அந்நிய செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள், 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க பணச் சலவைத் தடுப்புச் சட்டம், 2006 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நிதிக் கொடுக்கல் வாங்கல் அறிக்கைச் சட்டம் மற்றும் இலங்கையின் பிணையங்கள் தொடர்பான சட்டம் ஆகியவற்றிற்கு இணங்கியொழுகுவதனைப் பொறுத்தே வழங்கப்படுகின்றது.

2019 ஆம் ஆண்டில் இ.பி.ப.ஆ. 103 உலக, பிராந்திய மற்றும் தேச நிதியங்களுக்கு இலங்கையில் பட்டியலிடப்பட்டுள்ள

பிணையங்களில் முதலீடு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கியதுடன் 76 பெயர் மாற்றங்களையும் அங்கீகரித்தது.

கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளில் விதி இலக்கம் 5.4 (பி) ஏற்பாடுகளுக்கமைய விட்டுவிடல்கள்

தனிப்பட்ட இடுகைகளின் மூலம் பங்குகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கும் பொது பட்டியலிடப்பட்ட கம்பனிகளது விண்ணப்பங்களை இ.பி.ப.ஆ. செய்முறைப்படுத்துகின்றது. தற்போது வழங்கப்பட்டுள்ள பங்குகளில் இத்தகைய தனிப்பட்ட இடுகைகளின் ஊடாக வழங்கப்படும் பங்குகள் வழங்கலின் பின்னர் உடனடியாக 20% க்கு அதிகரிக்கும்போது இவ்விண்ணப்பங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மீளாய்வாண்டில் கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளின் விதி இலக்கம் 5.4 (பி) இலிருந்து பின்வரும் விடுவிப்புகள் வழங்கப்பட்டன.

- பிரவுண் கெப்பிட்டல் பி.எல்.சி. நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு ஓர் தனிப்பட்ட இடுகையினூடாக குழு மீள்கட்டமைப்பினை விளைவிப்பதற்காக பிரவுண் இன்வெஸ்ட்மென்ட்ஸ் பி.எல். சி. நிறுவனம் புதிய பங்குகளை வழங்குவதற்கு; மற்றும்
- ஓர் உள்ளக மீள்கட்டமைப்பினை விளைவிப்பதற்காக நிபந்தனைகளுக்கமைய நடைமுறையிலுள்ள பங்குதாரர்களுக்கு ஓர் பங்கு இடமாற்றமூடாக ஓர் தனிப்பட்ட இடுகை என்ற வகையில் லங்கா ரியாலிட்டி இன்வெஸ்ட்மென்ட்ஸ் பி.எல்.சி. நிறுவனம் புதிய பங்குகளை வழங்குவதற்கு;

## கொ.ப.ப. விதிகளுக்கான திருத்தங்கள்

பின்வரும் விதிகள் மீளாய்வாண்டில் மீளாய்வு செய்யப்பட்டு இ.பி.ப.ஆ. சட்டத்தின் 24 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய அங்கீகாரம் வழங்கப்பட்டது;

- பல் நாணய பலகையில் பட்டியலிடப்பட்டுள்ள பிணையங்களது வர்த்தகத்தினை இரத்து செய்தல் தொடர்பாக ஓர் புதிய ஏற்பாட்டினை ஒன்றிணைக்கும் தன்னியக்க வர்த்தக முறைமை விதிகளின் விதி இலக்கம் 10.3 க்கான திருத்தம்.
- பல் நாணய பலகையில் மேற்கொள்ளப்படும் பிணையங்கள் கொடுக்கல் வாங்கல்களுக்கு விதிக்கப்படும் கட்டண கட்டமைப்பு.
- பட்டியலிடப்பட்ட கம்பனிகள் ஆகக் குறைந்த பொது உரித்துவத்துடன் இணங்கியொழுகாமை தொடர்பாக, ஓர் இரண்டாந்தர பலகையின் அறிமுகத்தினூடாக, கடைப்பிடிக்கவேண்டிய செயல்முறை குறித்து கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளில் விதி இலக்கம் 7.13.2 மற்றும் 7.13.3. ஆகியவற்றிற்கான திருத்தங்கள்.

## பட்டியலிலிருந்து நீங்குதல்

மீளாய்வுக் காலத்தின்போது, இ.பி.ப.ஆ. இன் விதி இலக்கங்கள் 4 (2) மற்றும் 4 (3) இன் ஏற்பாடுகளுக்கமைய பின்வரும் கம்பனிகள் கொ.ப.ப. இன் உத்தியோகபூர்வ பட்டியலிலிருந்து கட்டாயமாக நீக்கப்பட்டன.

- வனிக் இன்கோப்பரேஷன் பி.எல்.சி.
- பெல்வத்த சுகர் இன்டஸ்ரீஸ் பி.எல்.சி.
- டச்வுட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பி.எல்.சி.
- ஒரியன்ட் காமன்ட்ஸ் பி.எல்.சி.
- சென்ரல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் வைனான்ஸ் பி.எல்.சி.
- பி சி ஹவுஸ் பி.எல்.சி.
- பி சி பார்மா பி.எல்.சி.
- பிரவுண்ஸ் கெப்பிட்டல் பி.எல்.சி.

இ.பி.ப.ஆ. இன் விதிகளின் விதி இலக்கம் 5 இன் ஏற்பாடுகளுக்கமைய கொ.ப.ப. இன் உத்தியோக பட்டியலிலிருந்து மனமுவந்து அதன் பிணையங்களை நீக்குவதற்காக ஏஐஏ இன்சூரன்ஸ் லங்கா பி.எல்.சி. க்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

## பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் கோவையினது நிர்வாகம்

2019 ஆம் ஆண்டில் இ.பி.ப.ஆ. 5 பொறுப்பேற்புக்களை நிர்வகித்தது. இந்த பொறுப்பேற்புக்களை நிர்வகிப்பதற்கு முன்னர் இ.பி.ப.ஆ. சுயாதீன ஆலோசகரது அறிக்கையின் உள்ளடக்கத்தினையும், பயன்படுத்தப்பட்ட மதிப்பீட்டு நுட்பங்கள் நியாயமானதா மற்றும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறைகளுக்கு அமைவாக உள்ளதா என்பதை இனங்காண்பதற்காக கடைப்பிடிக்கப்பட்ட மதிப்பீட்டு நுட்பங்கள் அத்தகைய மதிப்பீட்டு மாதிரிகளில் பயன்படுத்தப்பட்ட அனுமானங்களையும் மீளாய்வு செய்தது. இவை வெளிப்படுத்தப்படும் உள்ளடக்கத்தின் தெளிவினை மேம்படுத்துவதற்காகும். மீளாய்வாண்டில், பின்வரும் பொறுப்பேற்புகள் இ.பி.ப.ஆ. இனால் நிர்வகிக்கப்பட்டன. (உருவம் 2)

உருவம் 02 : பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் கோவையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொடைமுனைவுகள்

| கொடைமுனைபவர் | பொறுப்பேற்கப்படுபவர் | கொடைமுனைவின் வகை | கொடைமுனைவின் இறுதியில் காணப்படும் உரித்துவம் |
|---|---|---|---|
| ஜோர்ஜ் ஸ்டுவர்ட் அன்ட் கம்பனி லிமிட்டட் | சிட்ரஸ் லெசர் பி.எல்.சி. | கட்டாயக் கொடைமுனை | 85.03% |
| லோட்டஸ் ரினிவ்வபல் எனர்ஜி (பிரைவேட் ) லிமிட்டட் | ஹட்டன் பிளான்ட்டேசன் பி எல் சி | கட்டாயக் கொடைமுனை | 75.65% |
| செரனிட்டி லேக் லெசர் (பிரைவேட் ) லிமிட்டட் | ஹுனாஸ் வோல்ஸ் ஹொட்டல்ஸ் பி எல் சி | கட்டாயக் கொடைமுனை | 93.47% |
| ஸ்டேர்லிங் கெப்பிட்டல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் (பிரைவேட் ) லிமிட்டட் | பீபள்ஸ் மேர்ச்சன்ட் வைனான்ஸ் பி எல் சி | கட்டாயக் கொடைமுனை | 68.19% |
| சிங்ஹ கெப்பிட்டல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிட்டட் | சிங்ஹபுத்ர வைனான்ஸ் பி எல் சி | கட்டாயக் கொடைமுனை | 54.88% |

# செயற்பாட்டு மீளாய்வு

### இ.பி.ப.ஆணைக்குழுச் சட்டத்தின் 29 ஏ பிரிவின் கீழான அங்கீகாரங்கள்

இ.பி.ப.ஆணைக்குழுச் சட்டத்தின் 29 ஏ பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பட்டியலிடப்பட்ட கம்பனிகளினால் வழங்கப்படும் பட்டியலிடப்படா பிணையங்கள் தொடர்பான விண்ணப்பங்கள் இ.பி.ப.ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பின்வரும் நிறுவனங்களிற்கு ஆணைக்குழுவினது அங்கீகாரம் வழங்கப்பட்டன. (உருவம் 03 )

உருவம் 03 :இ.பி.ப.ஆ. சட்டத்தின் 29 ஏ பிரிவின் கீழான அங்கீகாரங்கள்

| வழங்குனரின் பெயர் | பிணையத்தின் வகை | அங்கீகரிக்கப்பட்ட தொகை | காலம் |
|---|---|---|---|
| சொவ்ட்லொஜிக் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. | சிரேஷ்ட, பிணைசாரா, பட்டியலிடப்படா, மீட்கத்தகு, தரப்படுத்தப்பட்ட தொகுதிக்கடன்கள் | ரூபா 2 பில்லியன் | மூன்று வருடங்கள் |
| லக்கி லங்கா மில்க் பிரோசஸிங் கம்பனி பி.எல்.சி. | பட்டியலிடப்படா, மாற்றத்தகு தொகுதிக்கடன்கள் | ரூபா 350 மில்லியன் | 20 வருடங்கள் |
| இலங்கை வங்கி | பாசல் III இணக்கப்பாட்டு அடுக்கு 2 மூலதனம் - தனிப்பட்ட ஒதுக்கத்தினூடாக பட்டியலிடப்படா, பிணைசாரா, தாழ்நிலை, மீட்கத்தகு தொகுதிக்கடன்கள் வாழுமையற்ற பதிவிறக்க சிறப்பியல்புடனானது | ரூபா 12 பில்லியன் | வகை ஏ மற்றும் பி: 5 வருடங்கள்<br>வகை சீ மற்றும் டீ: 8 வருடங்கள் |

### கொ.ப.ப. இன் வலியுறுத்தல் விதிகளின் ஒத்திவைப்புகள்

கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய விதி இலக்கம் 7.5(d) (I) 9 இன் பிரகாரம் இ.பி.ப.ஆ. இலிருந்து ஒத்திவைப்பினை பட்டியலிடப்பட்ட நிறுவனம் பெற்றாலன்றி அல்லது நிறுவனத்தின் பிணையங்கள் கண்காணிப்பு பட்டியலிற்கு மாற்றல் செய்யப்பட்டதன் பின்னர் ஆனால் அத்தகைய மாற்றல் இடம்பெற்ற திகதியிலிருந்து 6 மாதங்கள் நிறைவடைவதற்கு முன்னர் பட்டியலிடப்பட்ட நிறுவனம் பிரதிகூலமான அல்லது அபிப்பிராயத்தின் பொறுப்புத்துறப்பினை உருவாக்கும் விடயங்களை தீர்த்தாலன்றி, பட்டியலிடப்பட்ட நிறுவனத்திலான பிணையங்களின் வர்த்தகம் இடைநிறுத்தப்படும். பெறப்பட்ட விண்ணப்பங்களின் நிலைமை: (உருவம் 04)

உருவம் 04: கொ.ப.ப. இன் வலியுறுத்தல் விதிகளின் ஒத்திவைப்புகள்

| கம்பனியின் பெயர் | விண்ணப்பத்தின் நிலைமை |
|---|---|
| அணிலானா ஹோட்டல் அன்ட் பொரப்பட்டீஸ் பி.எல்.சி. | கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளின் பிரிவு 7.5(d) (I) 9 இன் ஏற்பாடுகளை பயன்படுத்துவதற்கு கம்பனி தெரிவு செய்ததன் காரணமாக விண்ணப்பம் செயல்முறைப்படுத்தப்படவில்லை |
| அகலவத்த ப்ளான்டேஸன்ஸ் பி.எல்.சி. | வர்த்தகம் இடைநிறுத்தப்படுவதனை ஒத்திப்போடுவதற்கு அனுமதியளிக்கப்பட்டது. |
| எச். வி. ஏ. வுட்ஸ் பி.எல்.சி. | வர்த்தகம் இடைநிறுத்தப்படுவதனை ஒத்திப்போடுவதற்கு அனுமதியளிக்கப்படவில்லை. |
| ஸ்டேன்டர்ட் கெப்பிட்டல் பி.எல்.சி. | பட்டியலிலிருந்து நீக்கப்படுதலின் ஒத்திவைப்பானது மீளாய்வு செய்யப்பட்டு அறிக்கையிடப்படும் திகதியில் தொடர்கின்றது. |
| ~~அடம் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பி.எல்.சி.~~ அடம் கெப்பிட்டல் பி.எல்.சி. | பட்டியலிலிருந்து நீக்கப்படுதலின் ஒத்திவைப்பானது மீளாய்வு செய்யப்பட்டு அறிக்கையிடப்படும் திகதியில் தொடர்கின்றது. |

### இ.பி.ப.ஆணைக்குழுச் சட்டத்தின் 28 ஏ பிரிவின் கீழான அங்கீகாரங்கள்

உரிமமளிக்கப்பட்ட ஓர் பரிமாற்றகத்தில் ஏதேனும் ஒரு பொதுக் கம்பனி பட்டியலிடுவதற்கு முன்னர் யாரேனும் நபருக்கு பங்குகளை ஒதுக்கியிருப்பின், கடைசியாக ஒதுக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் ஏதேனும் அத்தகைய கம்பனியின் பங்குகளையோ அல்லது பங்காக மாற்றக்கூடிய ஏதேனும் பிணையங்களையோ ஓர் உரிமமளிக்கப்பட்ட பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடலாகாது. அத்தகைய பட்டியலிடலுக்கு முன்னர் ஆணைக்குழுவிடமிருந்து அதற்கான எழுத்துமூல அனுமதியினைப் பெற்றிருத்தல் வேண்டும். இவ்வருடத்தில் கிரேன்ஸ் என் கிரீன் லிமிட்டட்டின் விண்ணப்பமானது மதிப்பிடப்பட்டது.

### வரையறுக்கப்பட்ட (தனியார் ) மத்திய வைப்புத் திட்டத்தின் (ம.வை.தி.) அமைப்பு அக விதிகளுக்கான திருத்தங்கள்

இ.பி.ப.ஆ. பின்வரும் காரணங்களுக்காக ம.வை.தி. இன் அமைப்பு அக விதிகளுக்கான திருத்தங்களை அங்கீகரித்தது. வைப்பகங்களுக்கு பிரயோகிக்கப்படும் உலகளாவிய நியமங்களை பலவீனப்படுத்தாது உலகளாவிய ரீதியில் ஏனைய வைப்பகங்களினால் மேற்கொள்ளப்படும் வணிக செயற்பாடுகளுக்கு ஒத்ததாக ம.வை.தி. அதன் வணிகத்தை விரிவாக்குவதனை இயலுமையாக்குவதற்காக ம.வை.தி. அதன் தொழிற்பாட்டினை பரவலாக்குவதற்குமாகும்.

ம.வை.தி. ஆனது வைப்பகச் செயற்பாடுகளுக்கு அப்பால் அதன் சேவைகளை விஸ்தரிப்பதற்கு தீர்மானித்துள்ளது. பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படா கம்பனிகளின் கூட்டாண்மை நடவடிக்கைகளை கையாள்வதனை பொறுப்பேற்றல், பதிவுச் சேவைகள் மற்றும் சர்வதேச மட்டத்தில் ஏனைய வைப்பகங்களினால் வழங்கப்படும் சேவைகளுக்கு ஒத்தாற்போல் ஏனைய களஞ்சியப்படுத்தல் செயற்பாடுகள் என்பனவாகும். இந்த சேவைகள் ம.வை.தி. ஆல் வழங்கப்படும் கூட்டாண்மை நடவடிக்கை சேவைகளின் செயற்திறனை மேம்படுத்தும் எனவும் வழங்குநர்களுக்கான கிரயத்தையும் குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### தளத்திற்கப்பாலான மாற்றல்களுக்கான அங்கீகாரம்

இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 28 (1) இன் ஏற்பாடுகளுக்கமைய "உரிமமளிக்கப்பட்ட ஓர் பங்குப் பரிமாற்றகத்தில் பட்டியலிடப்பட்ட ஒரு பொதுக் கம்பனியில் பிணையங்களை வைத்திருக்கும் எந்த ஒரு நபரும் அத்தகைய உரிமமளிக்கப்பட்ட பங்குப் பரிமாற்றகத்தினால் கடைப்பிடிக்கப்படும் வர்த்தக செயல்முறைக்கு இணங்கியொழுகினாலன்றி, ஆணைக்குழுவின் முன் அங்கீகாரமின்றி, அத்தகைய பிணையங்களை கொள்வனவு,

விற்பனை, கொடை அல்லது இல்லையெனில் வர்த்தகம் செய்வதற்கு இயலாது.

மீளாய்வாண்டில் இ.பி.ப.ஆ. இன் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட 473 அசாதாரணமான மாற்றல்களுக்கும் 118 பங்குத் தானங்களுக்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டது. எல்லைக் கடன் வர்த்தகம், ஒற்றைக் கணக்கிலிருந்து கூட்டுக் கணக்குகளுக்கு, கூட்டுக் கணக்கிலிருந்து ஒற்றைக் கணக்குகளுக்கு, நிதியளித்தல் வசதிகள், தானம் (விசேட), காப்புறுதி வணிகத்தின் வகைப்பிரிப்பு, காப்பான் / நம்பிக்கைப் பொறுப்பாளரில் மாற்றங்கள், ஒன்றிணைத்தல்கள், மனமுவந்த கொடைமுனைவுகள், கட்டாயக் கொடைமுனைவுகள், மறுசீரமைத்தல்கள், நம்பிக்கை பொறுப்பொன்றினை முடிவுறச் செய்தல், எல்லைக் கடன் வர்த்தக செயற்பாடுகளை முடிவுறச் செய்தல் மற்றும் கம்பனியொன்றை நீக்குதல் ஆகியவற்றிற்கு வசதியளிப்பதற்காக அசாதாரணமான மாற்றல்கள் இடம்பெற்றன.

ஆகக்குறைந்த பொது உரித்துடைமை தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்காக, வழங்கப்பட்ட கால அவகாசத்தின் நீடிப்பு

பட்டியலிடல் விதிகளில் விதி இலக்கம் 7.13.3(iii) இல் குறிப்பிட்டுள்ளவாறு அசாதாரணமான நிலைமாற்றல் சூழல்களின் நிமித்தம் ஆகக் குறைந்த பொது உரித்துடைமை தேவைப்பாடுகளுக்கு குறைவாகக் காணப்பட்ட பதினொரு பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்கு இணங்கியொழுகுவதற்காக கால அவகாச நீடிப்பினை வழங்குவதற்கு கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கு இ.பி.ப.ஆ. அதன் உடன்பாட்டினை வழங்கியது.

### மேற்பார்வை மற்றும் இணக்கப்பாடு

சந்தை பங்குபற்றுநர்கள் அவர்களது வாடிக்கையாளர்களது நலன்களை பாதுகாக்கும் விதமாகவும் சந்தையின் நம்பகத்தன்மையினை காக்கும் விதமாகவும் தாங்கள் நடந்துகொள்ளவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பயனுறுதிமிக்க முறைமைப்படுத்தலுக்கு வழுவற்ற சட்டங்களும் முறைமைப்படுத்தல் நியமங்களும் அவசியமாகும் என்பதனால் சந்தை பங்குபற்றுநர்கள் தாம் செயற்படும் முறைமைப்படுத்தல் வரம்புறுகைகளுக்கு இணங்கியொழுகுவதற்கு வேண்டப்படுகின்றார்கள். எமது மேற்பார்வை முனைப்பின் பிரிவுகள் முன்மதி மற்றும் வணிக நடத்தை ஆகிய இரண்டையும் உள்ளடக்குவதுடன் சந்தை பங்குபற்றுநர்கள் இணங்கியொழுகுவதனை உறுதிசெய்வதற்காக நாம் தளத்திலான மீளாய்வுகள் மற்றும் தளத்திற்கப்பாலான கண்காணிப்பு என்பவற்றை உள்ளடக்கிய பல்வேறு கருவிகளை பயன்படுத்துகின்றோம்.

மேலும் பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகளின் முறைமைப்படுத்தலானது, தகவலறிந்த முதலீட்டு தீர்மானங்களை மேற்கொள்வதற்கு முதலீட்டாளர்கள் உடனடியாக அணுகத்தக்க, காலத்திற்கேற்ற மற்றும் நம்பகத்தன்மையுடைய முக்கியமான தகவல்களது வெளிப்படுத்தலின் அடிப்படையில் அமைந்துள்ளது.

### பட்டியலிடப்பட்ட கம்பனிகள்

அனைத்து பட்டியலிடப்பட்ட கம்பனிகளும் நிதியாண்டு நிறைவடைந்து 5 மாதங்களுக்குள் அவற்றின் பங்குதாரர்களுக்கும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கும் (கொ.ப.ப.) வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

இ.பி.ப.ஆ. பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் வருடாந்த அறிக்கைகளை மீளாய்வு செய்து இணங்கியொழுகாத விடயங்கள் தொடர்பாக கம்பனிகளுக்கு அறியப்படுத்துகின்றது. இந்த முயற்சியில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளது பதிலளிப்பானது மிகவும் சாதகமாகக் காணப்படுகின்றது.

இந்தப் பயிற்சியின் முக்கிய நோக்கமானது பட்டியலிடப்பட்ட கம்பனிகளினால் மேற்கொள்ளப்படும் தகவல் பரப்புதல் மற்றும் நிதியியல் அறிக்கையிடலின் தரம் ஆகியவற்றை மேம்படுத்துவதாகும். பிணையங்கள் சந்தையில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றை நிலைநிறுத்துவதற்காகவும் தொழில்சார் நியமங்கள் பேணப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காகவும் பட்டியலிடப்பட்ட கம்பனிகள் முக்கியமான தகவல்களை உடனடியாக பரப்புதல் வேண்டும் என்ற தேவைப்பாடு காணப்படுகின்றது.

வருடாந்த அறிக்கைகளை மீளாய்வு செய்வதில் இ.பி.ப.ஆ. பின்வரும் விடயங்களில் கவனஞ்செலுத்தியது:

- கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகள், இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் மற்றும் கம்பனிகள் சட்டத்தின் பொருத்தமான ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல்
- கூட்டாண்மை ஆளுகை நடைமுறைகள்
- நிதியியல் எடுத்துக்காட்டல்கள்
- தலைவரின் அறிக்கை
- பணிப்பாளர்களின் அறிக்கை
- சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை
- பங்குதாரர் மற்றும் முதலீட்டாளர் தகவல்கள்
- நிதியியல் தரவுகள்
- பணிப்பாளர் சபையினது உப குழுக்களிலான அறிக்கைகள்

கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகள் மற்றும் பொருத்தமான ஒழுங்குவிதிகளுக்கமைய வருடாந்த அறிக்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்கள் தயாரித்து சமர்ப்பிப்பதில் கம்பனிகளிடையே அவர்களில் சுமத்தப்பட்டுள்ள பொறுப்புக்கள் தொடர்பாக விழிப்புணர்வு மட்டத்தினை மேம்படுத்துவதற்கு இச்செயல்முறையானது தொடர்ந்தும் பங்களிப்பு செய்யும்.

மீளாய்வாண்டில் இ.பி.ப.ஆ. 115 பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகளின் நிதியியல் கூற்றுக்களில் மீளாய்வினை நடாத்தி இணங்கியொழுகுதலை மேம்படுத்துமாறும் வெளிப்படுத்தல்களை செழுமைப்படுத்துமாறும் 97 கருத்துக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

இதற்கும் மேலாக, கடன் பிணையங்களுக்கான 16 முன்விவரணக்கோவைகளை மீளாய்வு செய்து முடிவுறுத்தப்பட்டதுடன் 2 உரித்துவ முன்விவரணக்கோவைகளும் மீளாய்வு செய்யப்பட்டன. இவற்றுள் நான்கு மீளாய்வுகள் புதிய கொள்கை அபிவிருத்தியினை வேண்டும் பாசல் III இணக்கப்பாட்டு கருவிகள் தொடர்பானதாகும். (உருவம் 05)

பட்டியலிடப்பட்ட கம்பனிகளது வருடாந்த அறிக்கையினது மீளாய்வினைத் தொடர்ந்து அசாதாரணமான வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் இணங்கியொழுகாமை தொடர்பான 24 விடயங்கள் மேலதிக விசாரணைக்காக இனங்காணப்பட்டன.

# செயற்பாட்டு மீளாய்வு

உருவம் 05: பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகளது வெளிப்படுத்தல்கள் மற்றும் கூட்டாண்மை அலுவல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முறைமைப்படுத்தல் நடவடிக்கைகள்

| வெளிப்படுத்தல்கள் / கூட்டாண்மை அலுவல்கள் | நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|
| விளக்கங்கள் கோரப்பட்டவை<br><br>(குறிப்பிட்ட பட்டியலிடப்பட்ட நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட வெளிப்படுத்தல்கள் தொடர்பாக ஓர் விடயத்தினை உறுதிசெய்வதற்காக) | 114 சந்தர்ப்பங்கள் |
| கொ.ப.ப. வழியாக வெளிப்படுத்தல்கள் மூலம் திருத்தங்களை மேற்கொள்வதற்கு எடுத்த நடவடிக்கைகள்<br><br>(வெளிப்படுத்தல் விடயங்களை சீர்செய்வதற்காக) | • சிட்டி ஹவுசிங் அன்ட் ரியல் எஸ்டேட் கம்பனி பி.எல்.சி.<br>• எய்ட்கென் ஸபென்ஸ் ப்ளான்டேஸன் மெனேஜ்மன்ட் பி.எல்.சி.<br>• அமானா டக்காவுல் பி.எல்.சி.<br>• பேருவளை ரிசோட்ஸ் பி.எல்.சி |

*இவ்வருடத்தில் கூட்டாண்மை அலுவல்கள் பிரிவானது பட்டியலிடப்பட்ட கம்பனிகளினால் சந்தை அறிவித்தல்களூடாக மேற்கொள்ளப்பட்ட வெளிப்படுத்தல்களை மீளாய்வு செய்து 114 குறிப்பீடுகள் தொடர்பாக கம்பனியிடமிருந்து அல்லது கொ.ப.ப. இடமிருந்து தெளிவுறுத்தல்களை வேண்டியது. அத்தகைய தெளிவுறுத்தல்கள் கம்பனி கண்காணிப்புப் பட்டியலில் இருக்கும்போது அதன் பணிப்பாளர்களது வியாபாரம் தொடர்பாக (07), தாமதமான வெளிப்படுத்தல்கள் (07), பணிப்பாளர்களிலான மாற்றங்கள் (82), தொடர்புடைய நபர்களது கொடுக்கல் வாங்கல்கள் (05) மற்றும் உடனடியாக சந்தை வெளிப்படுத்தலை வேண்டும் ஏனைய கூட்டாண்மை வெளிப்படுத்தல்கள் - பதிவு செய்யப்பட்ட முகவரியிலான மாற்றம் (04) கம்பனி காரியதரிசியிலான மாற்றங்கள் (04) கணக்காய்வாளர்களிலான மாற்றங்கள் (02) தரப்படுத்தல் மீளாய்வு (01) கம்பனிகளது ஒருங்கிணைப்பு (01) மற்றும் தொடர்புடைய தரப்பினரது வர்த்தகம் (01) தொடர்பானவையாகும்.

## ஏனைய முறைமைப்படுத்துபவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட் விடயங்கள்

பின்வரும் விடயங்கள், அங்கீகரிப்பு, அளவீடுகள் மற்றும் வெளிப்படுத்தல்கள் என்பன உரிய நியமங்களுடன் இணக்கப்பாடு கண்டுள்ளனவா என்பது தொடர்பாக தெளிவுறுத்தலைப் பெறுவதற்காக இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபைக்கு (இ.க.க.நி.க.ச.) அனுப்பிவைக்கப்பட்டன. (உருவம் 06)

உருவம் 06: ஏனைய முறைமைப்படுத்துபவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட் விடயங்கள்

| முறைமைப்படுத்துபவர் | கம்பனிகளின் எண்ணிக்கை | அனுப்பிவைக்கப்பட்ட விடயங்கள்: மற்றும் விளைவு |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை (இ.க.க.ந.க.ச.) | 4 | சிட்டி ஹவுசிங் அன்ட் ரியல் எஸ்டேட் கம்பனி பி.எல்.சி.<br>LKAS 7 - காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் கணக்கீட்டு நியமத்துடன் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட கம்பனியின் / குழுவின் காசுப் பாய்ச்சல் கூற்றானது இணங்கியொழுகியுள்ளதா என்பது பற்றி தெளிவாக்கத்தினை பெற்றுக்கொள்வதற்காக மற்றும் முக்கியமாக எதிர்பார்க்கப்படும் கவனிப்புக் கடமையினை கணக்காய்வாளர் பிரயோகித்தாரா. |
| | | டென்ஜரின் பீச் ஹோட்டல்ஸ் பி.எல்.சி.<br>அங்கீகரிப்பு, அளவீடுகள் மற்றும் வெளிப்படுத்தல்கள் என்பன பொருந்துகின்ற இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களுடன் இணங்கியொழுகியுள்ளனவா என்பது பற்றி தெளிவாக்கத்தினை பெற்றுக்கொள்வதற்காக |
| | | டெஸ் எக்ரோ பி.எல்.சி.<br>அங்கீகரிப்பு, அளவீடுகள் மற்றும் வெளிப்படுத்தல்கள் என்பன பொருந்துகின்ற இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களுடன் இணங்கியொழுகியுள்ளனவா என்பது பற்றி தெளிவாக்கத்தினை பெற்றுக்கொள்வதற்காக |
| | | ரேடியன்ட் ஜெம்ஸ் இன்டர்நேஷனல் பி.எல்.சி.<br>அங்கீகரிப்பு, அளவீடுகள் மற்றும் வெளிப்படுத்தல்கள் என்பன பொருந்துகின்ற இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களுடன் இணங்கியொழுகியுள்ளனவா என்பது பற்றியும் முக்கியமாக எதிர்பார்க்கப்படும் கவனிப்புக் கடமையினை கணக்காய்வாளர் பிரயோகித்தாரா என்பதன் தெளிவாக்கத்தினை பெற்றுக்கொள்வதற்காக |

## உரிமமளிக்கப்பட்ட / பதிவீடளிக்கப்பட்ட நிறுவனங்களின் மேற்பார்வை

### பங்குத் தரகுக் கம்பனிகள்

1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தில் (திருத்தியமைக்கப்பட்டவாறு), மற்றும் இதன்கீழ் மேற்கொள்ளப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளில் குறிப்பிட்டுள்ளவாறு இ.பி.ப.ஆ. க்கு பங்குத் தரகு நிறுவனங்களுக்கு உரிமமளித்தல் மற்றும் அவற்றை மேற்பார்வை செய்யும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்பார்வையின் நோக்கம் என்னவெனில் பங்குத் தரகு நிறுவனங்களின் நிதியியல் ஸ்திரத்தன்மை மற்றும் தொழிற்பாட்டு இயலுமை என்பவற்றை உறுதிசெய்வதனூடாக மூலதனச் சந்தையில் முதலீட்டாளர் பாதுகாப்பினை பலப்படுத்துவதுடன் மூலதனச் சந்தையில் முதலீட்டாளர் நம்பகத்தன்மையினையும் வளர்ப்பதுமாகும்.

பங்குத்தரகு நிறுவனங்களின் மேற்பார்வைக்கான அணுகுமுறையானது ஓர் இடர்நேர்கை மதிப்பீட்டு வரம்புறுகை அடிப்படையிலானதாகும். இங்கு ஒவ்வொரு பங்குத்தரகு நிறுவனம் தொடர்பாகவும் இடர்நேர்கை நிகழக்கூடிய சாத்தியப்பாடு மற்றும் அதன் தாக்கம் ஆகிய இரண்டினையும் கவனத்திலெடுத்து அவற்றிற்கான இடர்நேர்கை தோற்றுருவமானது மதிப்பிடப்படுகின்றது. இங்கு பங்குத்தரகர்கள் சந்திக்கும் இடர்நேர்கைகள் விவேகம், திரவத்தன்மை, எதிர்தரத்தவர், நிதியியல், கடன், செயற்பாடு, நிலை மற்றும் சட்ட இடர்நேர்கைகள் என வகுக்கப்படலாம்.

தளத்திற்கப்பாலான பரிசீலனைகள் உரிமமளிக்கப்பட்ட பங்குத்தரகுக் கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்படும் நிதிக்கூற்றுக்கள், சட்டமுறையான அறிக்கைகள் மற்றும் இலத்திரணியல் கோப்பீட்டு முறைமைக்கு பதிவேற்றம் செய்யப்படும் அறிக்கைகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பன மீளாய்வு செய்வதற்கும் பகுப்பாய்வு செய்வதற்கும் இயலுமையாயுள்ளது.

வருடம் முழுவதும் நாம் சந்தையின் நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மையினை பாதுகாப்பதற்காக நம்பத்தகுந்த தடைகள் உள்ளடங்களாக பயனுறுதிமிக்க வலியுறுத்தல் நடவடிக்கைகளை அடைவதனை நோக்கி நாம் திடமான அர்ப்பணிப்பினை வெளிக்காட்டினோம்.

2019 ஆம் ஆண்டில் கொ.ப.ப. பங்குத்தரகர் விதிகளின் 12 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இரண்டு வருட காலத்திற்கு இரண்டு பங்குத்தரகு நிறுவனங்களின் வணிகச் செயற்பாடானது செயலிழக்கச் செய்யப்பட்டது. கொ.ப.ப. இன் பங்குத்தரகர் விதிகளின் 12 ஆம் பிரிவிற்கு இணங்கியொழுகும்வண்ணம் குறித்த இரண்டு நிறுவனங்கள் உரிய செயலிழத்தல் செயல்முறையினை நிறைவுசெய்துள்ளன என கொ.ப.ப. இன் பணிப்பாளர் சபையானது இ.பி.ப.ஆ. க்கு பரிந்துரைத்ததனை தொடர்ந்து இ.பி.ப.ஆ. இன் இறுதி அங்கீகாரத்தின் பின்னர் குறித்த இரண்டு பங்குத் தரகு நிறுவனங்களின் வணிகச் செயற்பாடுகளின் செயலிழப்பிற்கு இறுதி அங்கீகாரம் வழங்கப்பட்டது.

பணம் சலவை செய்வதற்கு எதிராக மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதனை முறியடிப்பதற்காக (ப.ச.எ./ப.ந.மு.) 2015-2010 தேசிய கொள்கையினை கவனத்திலெடுத்து பிணையங்கள் துறையில் பங்குபற்றுபவர்களிடையே ஓர் திடமான நிறுவன வரம்புறுகையினை விருத்தி செய்தல், (பசஎ/பநிமு) இடர்நேர்கை அடிப்படையிலான மேற்பார்வையினை பலப்படுத்துவதன் பிரதான குறிக்கோள்களில் ஒன்றாகும் என இனங்காணப்பட்டது. இது பிணையங்கள் துறையில் பசஎ / பநிமு நோக்கிய இடர்நேர்கை அடிப்படையிலான மேற்பார்வையின் பயனுறுதித்தன்மையினை மேம்படுத்தும் நோக்கத்தை உடையதாகும். எனவே பங்குத்தரகு நிறுவனங்களின் பசஎ /பநிமு மேற்பார்வையின் தீவிரம் மற்றும் நிகழ்வின் எண்ணிக்கை என்பன குறித்த நிறுவனங்களை பாதிக்கும் பசஎ /பநிமு இடர்நேர்கை மதிப்பீட்டு அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டன. பங்குத் தரகு நிறுவனங்களுகான ஓர் மேற்பார்வை வரம்புறுகையினை இ.பி.ப.ஆ. விருத்தி செய்துள்ளதுடன் பங்குத் தரகு நிறுவனங்களில் 2019 ஆம் ஆண்டில் பசஎ /பநிமு இல் கவனஞ்செலுத்தி தளத்திலான பரிசீலனைகள் நடாத்துவதனை தொடர்ந்தது.

2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2019 ஆம் வருடத்தில் பங்குத் தரகுத் துறையின் மொத்த புரள்வானது சற்று வீழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும், 2018 ஆம் ஆண்டின் ரூபா 149 மில்லியன் நட்டத்துடன் ஒப்பிடும்போது இவ்வருடத்தில் வரிக்குப் பின்னரான தேறிய நட்டமானது ரூபா 37 மில்லியனாக குறைவடைந்தது. பங்குத்தரகுக் கம்பனிகளின் செயற்திறன் பற்றிய ஒப்பீட்டுப் புள்ளிவிபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. (உருவம் 07 )

உருவம் 07 : பங்குத் தரகுத் துறையின் சிறப்புக்கூறுகள்

| | 2019 (ரூபா '000) | 2018 (ரூபா '000) | சதவீத வேறுபாடு |
|---|---|---|---|
| புரள்வு | 1,663,045 | 1,784,134 | (6.79%) |
| தேறிய தரகு | 1,440,766 | 1,547,442 | (6.89%) |
| ஏனைய வருமானம் | 707,329 | 786,797 | (10.10%) |
| செயற்பாட்டு இலாபம்/(நட்டம்) | 40,483 | 23,691 | 70.88% |
| வரிக்கு முந்திய தேறிய இலாபம்/(நட்டம்) | (79,453) | (83,724) | 5.10% |
| வரிக்குப் பிந்திய தேறிய இலாபம்/(நட்டம்) | (37,096) | (149,879) | 75.25% |
| மொத்தச் சொத்துக்கள்* | 9,726,649 | 8,568,117 | 13.52% |
| மொத்தப் பொறுப்புக்கள்* | 4,571,124 | 3,349,785 | 36.46% |
| தேறிய மூலதனம்* | 5,155,524 | 5,218,332 | (1.20%) |

*31 டிசம்பர் 2018/2019 இல் உள்ளவாறு.

மூலம்: இ.பி.ப.ஆ. க்கு பங்குத்தரகு நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்படும் கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்கள்

### சந்தை இடையீட்டாளர்கள்

இ.பி.ப.ஆ. க்கு சந்தை இடையீட்டாளர்களாக கடமையாற்றுவதற்கு எல்லைக் கடன் வழங்குனர்கள், முதலீட்டு முகாமையாளர்கள், கடன் தரப்படுத்தல் முகவர்கள், ஒப்புரவாளர்கள் மற்றும் தீர்வக இல்லம் ஆகிய ஐந்து பிரிவினருக்கு இ.பி.ப.ஆ. பதிவீடுகளை வழங்குவதற்கும் முறைமைப்படுத்துவதற்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

இ.பி.ப.ஆ. இன் முறைமைப்படுத்தல் பங்களிப்பானது மூலதனச் சந்தை இடையீட்டாளர்களது நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் கண்காணித்தல் என்பவற்றை உள்ளடக்கும். இது அனைத்து பதிவீடளிக்கப்பட்ட நிறுவனங்களும் நிதியியல் ரீதியாக ஸ்திரமாக காணப்படுதல், தொழிற்பாட்டு ரீதியாக சாத்தியமாகக் காணப்படுதல், மற்றும் போதுமான உள்வாரி கட்டுப்பாடுகள் மற்றும் வழிமுறைகளைக் கொண்டுள்ளமை என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காகும்.

மேற்குறிப்பிட்ட சந்தை இடையீட்டாளர்களுக்கு ஏற்புடைய இடர்நேர்கைகளை இனங்காண்பதற்காகவும், கண்காணிப்பதற்காகவும், குறைப்பதற்காகவும் மற்றும் முகாமைப்படுத்துவதற்காகவும் தளத்திலான மற்றும் தளத்திற்கப்பாலான மேற்பார்வைகளில் ஓர் பயனுறுதிமிக்க மற்றும் திடமான வரம்புறுகையானது பிரத்தியேகமாக கடைப்பிடிக்கப்பட்டன.

இதற்கமைய, பதிவீடளிக்கப்பட்ட சந்தை இடையீட்டாளர்கள் கவனத்திலெடுக்கப்படும் காலப்பகுதியில் இடர்நேர்கை அடிப்படையிலான தளத்திலான பரிசீலனைகளுக்கு

# செயற்பாட்டு மீளாய்வு

உட்படுத்தப்பட்டார்கள். இதற்கும் மேலாக, ஓர் முதலீட்டு முகாமையாளர் என்ற வகையில் கடமையாற்றுவதற்கு உரித்தான முறைமைப்படுத்தல் நியமங்களுடன் இணங்கியொழுகுதல் மற்றும் பொருந்தக்கூடிய தன்மை என்பனவற்றை மதிப்பிடுவதற்காக உரிமமளிப்பதற்கு முன்னரான பரிசீலனைகள் நடைபெற்றதுடன் 2019 ஆம் ஆண்டில் குறித்த விண்ணப்பதாரிக்கு பதிவீடு வழங்கப்பட்டது.

சந்தை இடையீட்டாளர்களின் முறைமைப்படுத்தல் வரம்புறுகையினை பலப்படுத்தும் நோக்கில் இவ்வாண்டில் முறைமைப்படுத்தல் நியமங்கள் மீளாய்வு செய்யப்பட்டன. மேலும், பொருத்தமானது மற்றும் தகுதியானது என்பதிலான வழிகாட்டிகள் 2019 செப்டம்பர் 01 முதல் கட்டாயமயமாக்கப்பட்டது. பிணையங்கள் சந்தையில் வணிக நடவடிக்கைகள் உயர் தரத்திலான சந்தை நடைமுறைகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மையினூடாக நம்பகத்தன்மை என்பவற்றை உறுதிசெய்வதற்கு பொருத்தமானது மற்றும் தகுதியானது நியமங்கள் கவனத்திலெடுக்கப்பட்டது. (உருவம் 08)

உருவம் 08 : சந்தை இடையீட்டாளர்களின் நிதியியல் சிறப்புக்கூறுகள் 31 டிசம்பர் 2019 இல் உள்ளவாறானது ( மில்லியன் ரூபாவில் )

| பிரிவு | மொத்த வருமானம் ரூபா | வரிக்கு முந்திய மொத்த தேறிய இலாபம் ரூபா | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா |
|---|---|---|---|---|
| எல்லைக் கடன் வழங்குனர் | 156,879.93 | 42,563.61 | 1,974,472.87 | 1,750,242.20 |
| முதலீட்டு முகாமையாளர் | 1,369.55 | 311.11 | 10,634.74 | 3,809.98 |
| ஒப்புரவாளர் | 247.41 | -622.08 | 3,817.44 | 122.77 |
| கடன் தரப்படுத்தல் முகவர்கள் | 208.68 | 89.39 | 291.57 | 97.22 |
| பல்நோக்கு நிறுவனங்கள்** | 269,230.70 | 110,132.02 | 6,327,459.12 | 5,763,616.06 |

**பல்நோக்கு நிறுவனங்கள் என்பன ஒன்றுக்கு மேற்பட்ட முறைமைப்படுத்தப்படும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பதிவீடளிக்கப்பட்ட முறைமைப்படுத்தப்படும் நிறுவனங்களாகும்.

### நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சித் துறை

இவ்வருடத்தில் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளின் தளத்திலான இ.பி.ப.ஆ. இன் மேற்பார்வையானது இடர்நேர்கை அடிப்படையிலான அணுகுமுறை நோக்கியதாக காணப்பட்டது. இது விவேகம், செயற்பாடு மற்றும் முகாமைத்துவக் கொள்கை என்பவற்றின் கீழான பிரதான இடர்நேர்கை பகுதிகளை உள்ளடக்கியதுடன் அவற்றின் நிதியியல் பலத்தின் போதுமான தன்மை, உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் செயல்முறைகளுக்கு இணங்கியொழுகுதல், ஆளுகை, தகவல் முறைகள் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளது தேவைப்பாடுகள் என்பவற்றை மதிப்பிடுவதற்காக மேற்கொள்ளப்பட்டது.

நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளிலான தளத்திற்கப்பாலான மேற்பார்வையானது நம்பிக்கை அலகுப்பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளது நிதியியல் நிலைமையானது திடமாகக் காணப்படுதல் மற்றும் இ.பி.ப.ஆ. ஆல் குறித்துரைக்கப்பட்ட ஆகக்குறைந்த தேறிய மூலதனத் தேவைப்பாட்டிற்கு இணங்கியொழுகி செயற்படுவதனையும் உறுதிப்படுத்துவதற்காக கணக்காய்வு செய்யப்படாத மாதாந்த நிதிக் கூற்றுக்களின் பகுப்பாய்வினூடாக பலப்படுத்தப்பட்டது. இதற்கும் மேலாக, நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் வெளிப்பாட்டு மட்டங்கள் மற்றும் திரவத்தன்மை என்பன அவை நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி விதிக்கோவை, உரிய நம்பிக்கை அலகுப் பொறுப்புறுதிகள் மற்றும் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பணிப்புரைகள் என்பவற்றில் குறிப்பிட்டுள்ள ஏற்றுக்கொள்ளத்தக்க மட்டங்களுக்குள் காணப்படுவதனை உறுதிசெய்வதற்காக ஆராயப்பட்டன.

நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் தேறிய சொத்தின் பெறுமதியானது 2019 டிசம்பர் 31 இல் ரூபா 104.79 பில்லியனாகக் (அண்ணளவாக) காணப்பட்டதுடன் அலகுடையாளர்களின் எண்ணிக்கையானது முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது 10% ஆல் அதிகரித்துக் காணப்பட்டது. (உருவங்கள் 09,10)

உருவம் 09 : நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் ஒட்டுமொத்த நிலைமை.

| | 31.12.2019 **இல்** | 31.12.2018 **இல்** | % **மாற்றம்** |
|---|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் எண்ணிக்கை | 71 | 75 | -5.33% |
| நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் தேறிய சொத்தின் பெறுமதி (ரூபா பில்லியன்) | 104.79 | 64.22 | 63.17% |
| அலகுடைமையாளர்களின் எண்ணிக்கை | 46,481 | 42,093 | 10.42% |
| வழங்கப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை (மில்லியன். அண்ணளவாக) | 4,769 | 3,368 | 41.60% |
| உரித்துடைமைகளில் முதலீடு (ரூபா மில்லியன்) | 9,841 | 9,416 | 4.51% |
| அரசாங்கப் பிணையங்களில் முதலீடு (ரூ.மில்லி.) | 9,150 | 3,379 | 170.79% |
| ஏனைய சாதனங்களில் முதலீடு** (ரூ.மில்லியன்) | 84,542 | 50,601 | 67.08% |

*** வணிகத் தாள்கள், நம்பிக்கைச் சான்றிதழ்கள், தொகுதிக்கடன்கள், வங்கி வைப்புகள் முதலியன

மூலம்: நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்படும் முறைமைப்படுத்தல் சமர்ப்பிப்புகள்

உருவம் 10: 31 டிசம்பர் 2019 இல் உள்ளவாறான நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளின் சந்தை பங்களிப்பு

**31.12.2019 இல் உள்ளவாறான நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளின் பங்களிப்பு**




- சிலோன் எஸட் மெனேஜ்மன்ட் கம்பனி லிமிட்டட்
- கொம்ட்ரஸட் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
- என்டிபி வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
- சீபேங் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
- நெஷனல் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
- வெர்ஸட் கெப்பிட்டல் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
- ஜே பீ வைனான்சியல் (பிரைவேட்) லிமிட்டட்
- கார்டியன் எக்யூட்டி எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
- கென்டோர் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
- எஸட் ட்ரஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
- கெப்பிட்டல் எலாயன்ஸ் இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிட்டட்
- ஆர்பிக்கோ அட்டரக்சியா எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
- பிரீமியர் வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
- எஸட்லைன் கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட்

## கொ.ப.ப. இன் தளத்திலான பரிசீலனை

2019 ஆம் ஆண்டில் கொ.ப.ப. இல் தளத்திலான பரிசீலனை ஒன்று நடாத்தப்பட்டது. இது ஏனையவற்றுக்கிடையில் ஆளுகை, நியமங்கள், செயல்முறைகள், செயலாக்கங்கள், முறையீடு கையாளும் பொறிமுறை மற்றும் கொ.ப.ப. இனால் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளின் தக்கநேர வலியுறுத்தல் என்பவற்றினது அமுலாக்கலில் அதன் பயனுறுதித்தன்மை மற்றும் போதுமை என்பவற்றை தீர்மானிப்பதற்காகும். எமது பரிசீலனையானது கொ.ப.ப. இன் தொழிற்பாடானது இ.பி.ப.ஆ. சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் அதன் கீழான ஏதேனும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கேற்ப நடைபெறுகின்றதா என்பதனை மையப்படுத்தி நடாத்தப்பட்டது.

இதற்கமைய, குறித்த தளத்திலான பரிசீலனையானது ஓர் உள்வாரியாக விருத்திசெய்யப்பட்ட பரிசீலனை திட்டத்தினூடாக பின்வருவனவற்றிற்கு அழுத்தம் கொடுத்து நடாத்தப்பட்டது. ஒவ்வொரு மூலோபாய வணிக அலகினதும் விரும்புகின்ற குறிக்கோள்களை அடைவதற்கு கொ.ப.ப. இல் முறைமைகள், கட்டுப்பாடுகள் மற்றும் செயல்முறைகள் உள்ளனவா என்று பரிசீலிக்கப்பட்டது. இ.பி.ப.ஆ. தளத்திலான பரிசீலனைகளை மேற்கொண்டதன் பின்னர் மேம்படுத்தப்பட வேண்டிய பகுதிகளை பரிந்துரைத்து அவற்றுக்கு இணங்கியொழுகுவதற்கு காலக்கெடுவினை நிர்ணயித்தது.

## கண்காணிப்பு, புலனாய்வு மற்றும் வலியுறுத்தல்

சந்தையின் நன்னம்பிக்கை என்பது முறைமைப்படுத்தலின் மையக் குறிக்கோள் என்பதுடன் இது மூலதனச் சந்தையின் சீரான தொழிற்பாட்டிற்கு முக்கியமானதாகும். சந்தையின் நன்னம்பிக்கையினை பராமரிப்பதற்கு நாம் கண்காணிப்பு, புலனாய்வு மற்றும் வலியுறுத்தல் உள்ளடங்களான ஓர் கூட்டான செயல்முறைகளை கடைப்பிடிக்கின்றோம்.

### கண்காணிப்பு

கண்காணிப்பு என்பது, முதன்மை நிலையில் உள்ளுறைபவர் வர்த்தகம், சந்தை கையாளுகைகள் மற்றும் முன்னோடுதல் போன்ற சாத்தியப்படக்கூடிய தவறுகள் உள்ளடங்களாக சந்தை வரம்பு மீறுகைகளை தடுப்பதனூடாக மூலதனச் சந்தையில் முதலீட்டாளர்கள் மற்றும் பங்காளிகளது நம்பிக்கை மட்டத்தினை பாதுகாப்பதற்காக பயன்படுத்தப்படும் முறைமைப்படுத்தல் செயல்முறையாகும்.

பிணையங்கள் சட்ட மீறுகைகளை கண்டுபிடித்தல் மற்றும் தடுப்பதற்காக ஓர் தன்னியக்க கண்காணிப்பு முறையினை பயன்படுத்தி நாம் சந்தையினை ஓர் நிகழ்நேர அடிப்படையில் கண்காணிக்கின்றோம். சந்தேகத்திற்கிடமான சட்ட மீறுகைகள் கண்டுபிடிக்கப்படும்போது, இ.பி.ப.ஆ. இன் கண்காணிப்பு மற்றும் புலன்விசாரணை குழுவுக்கு ஓர் கண்காணிப்பு பரிந்துரை தயார்செய்வதுனூடாக உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. தொடர்புடைய நபர்களது சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல்கள் அவதானிப்பு பட்டியலில் பின்தொடரப்பட்டு மிகவும் நுணுக்கமாக ஆராயப்படுகின்றது.

### செயல்திறனுடனான கண்காணிப்பு

சந்தையில் ஏற்படக்கூடிய சாத்தியப்படக்கூடிய எதிர்மறையான தாக்கத்தினை குறைப்பதற்காக சந்தை மீறுகைகளை இனங்காண்பதற்காக, சந்தை அசைவுகள் மற்றும் போக்குகள் உள்ளடங்களாக முதலீட்டாளர்கள், தரகர்கள் மற்றும் ஏனையோரது நடவடிக்கைகளை இ.பி.ப.ஆ. செயல்திறனுடன் கண்காணிக்கின்றது. இ.பி.ப.ஆ. அசாதாரணமான வர்த்தக

# செயற்பாட்டு மீளாய்வு

நடத்தையினை பகுப்பாய்வு செய்தவுடன் இதில் தொடர்புடைய நபர்களிடமிருந்து தாமதமின்றி விளக்கங்களை கோரியது. அதேபோன்று, இ.பி.ப.ஆ. 2019 ஆம் ஆண்டில் 16 முதலீட்டு ஆலோசகர்களிடமிருந்தும் ஆறு முதலீட்டாளர்களிடமிருந்தும் விளக்கங்களை கோரியது.

## கண்காணிப்பு பரிந்துரைத்தல் மற்றும் குறிப்புகள்

இ.பி.ப.ஆ. இன் கண்காணிப்பு கண்டுபிடிப்புகள், கொ.ப.ப. இன் கண்காணிப்பு பரிந்துரைத்தல் மற்றும் முறைப்பாடுகள் என்பவற்றின் அடிப்படையில் இ.பி.ப.ஆ. பாரதுாரமான சந்தேகத்திற்கிடமான சந்தை துர்நடத்தைகளை இனங்கண்டவுடன் இந்த கண்காணிப்பு பரிந்துரைத்தல்கள் / கண்காணிப்பு குறிப்புகள் என்பவற்றை கண்காணிப்பு மற்றும் புலனாய்வு குழுவுக்கு (க.பு.கு) உரிய நடவடிக்கை மற்றும் ஆழ்ந்தாராய்விற்காக அனுப்பிவைக்கப்படுகின்றன. 2019 ஆம் ஆண்டில், 11 கண்காணிப்பு பரிந்துரைத்தல் நிறைவுசெய்யப்பட்டு க.பு.கு. க்கு சமர்ப்பிக்கப்பட்டன. இந்த பரிந்துரைத்தல்கள் சாத்தியப்படக்கூடிய ஏழு உள்ளுறைபவர் வர்த்தக விடயங்களையும், சாத்தியப்படக்கூடிய நான்கு சந்தை கையாளுகை மற்றும் ஏனைய சந்தை துர்நடத்தைகள் என்பவற்றை உள்ளடக்கியவையாகும் (ஒன்றுக்கும் மேற்பட்ட தவறுகள் வகுப்பினை உள்ளடக்கிய பரிந்துரைத்தல் சந்தர்ப்பங்களும் காணப்பட்டன). கண்காணிப்புக் குறிப்புகள் குறைவான முக்கியத்துவமுடைய சந்தேகத்திற்கிடமான சந்தை தவறுகளுக்கு தயாரிக்கப்பட்டு க.பு.கு. க்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. (உருவம் 11)

உருவம் : 11 கண்காணிப்பு பரிந்துரைத்தல்கள்/ சந்தேகத்திற்கிடமான தவறுகள்.[1]

**2019**

(ரூபா மில்லியன்)




## எதிர்காலத் தேவைகள்

அதிநவீன எச்சரிப்பு தொகுதிகளூடாக விரும்பத்தகாத நடத்தைகளை இனங்காண்பதற்கு போதுமான கருவிகளுடனான ஓர் அதிநவீன புதிய கண்காணிப்பு முறையொன்றை கொள்முதல் செய்யும் செயல்முறையில் இ.பி.ப.ஆ. உள்ளது. இக்கண்காணிப்பு முறையானது ஓர் திடமான மற்றும் நெகிழ்வான பணிப்பாய்வினை கொண்டிருப்பதுடன் இதற்கு சந்தை - வழிகாட்டும் பகுப்பாய்வு மற்றும் காட்சிப்படுத்தல் கருவிகளினால் உறுதுணையளிக்கப்படுகின்றது.

## புலனாய்வுகள்

1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தில் (திருத்தியமைக்கப்பட்டவாறு) மற்றும் அதன்கீழ் அமைக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றில் குறிப்பிட்டுள்ளவாறு உள்ளுறைபவர் வர்த்தகம்[1], விலை / சந்தை கையாளுகை[2], முன்னோடுதல்[3] மற்றும் ஏனைய சந்தை துர்நடத்தைகள் உள்ளடங்களான சந்தேகத்திற்கிடமான விடயங்களில் புலனாய்வுகளை நடாத்துகின்றது. இது அத்தகைய பிறழ்வுகளை தடுப்பதற்காகவும் மூலதனச் சந்தையானது நியாயமான, செயற்திறனான, ஒழுங்கான மற்றும் வெளிப்படையான சந்தையாகக் காணப்படுவதனை உறுதிசெய்வதற்குமாகும்.

2019 ஆம் ஆண்டில், இ.பி.ப.ஆ. மூன்று புலனாய்வுகளை வெற்றிகரமாக நிறைவுசெய்தது. சந்தேகத்திற்கிடமான விலை / சந்தை கையாளுகை புலனாய்வொன்றின் முடிவின்போது ஆணைக்குழுவானது மூன்று நபர்களுக்கெதிராக கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கையினை மேற்கொண்டது. சந்தேகத்திற்கிடமான உள்ளுறைபவர் வர்த்தகம், முன்னோடுதல் மற்றும் /அல்லது சந்தை கையாளுகையிலான மற்றுமோர் புலனாய்வின் முடிவில் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு ஒரு நபருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. 2016 இல் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களினால் மீள் ஆரம்பிக்கப்பட்ட ஒரு புலனாய்வும் இவ்வருடத்தில் நிறைவுற்றது. மற்றுமோர் புலனாய்வில் இ.பி.ப.ஆ. இனால் விடுக்கப்பட்ட அழைப்பாணைக்கு அமைய அதன் முன்னால் சமூகளிக்கத் தவறிய இரு நபர்கள் குறித்து மதிப்பிற்குரிய சட்டமா அதிபருக்கு சட்ட நடவடிக்கை[4] மேற்கொள்ளுமாறு பரிந்துரைக்கப்பட்டது.

2019 இல் இ.பி.ப.ஆ. சாத்தியப்படக்கூடிய உள்ளுறைபர் வர்த்தகத்திலான இரு புலனாய்வுகள் மற்றும் விலை /சந்தை கையாளுகையில் மூன்று புலனாய்வுகள் உள்ளடங்களாக ஐந்து புதிய புலனாய்வுகளை ஆரம்பித்தது.

இவ்வாண்டில், ஏற்கனவே நிறைவுசெய்யப்பட்ட ஓர் புலனாய்வின் வழக்காடல் செயல்முறைக்கு துணைபுரிவதற்காக அரசாங்க ஆய்வாளர் திணைக்களத்திலுள்ள கேள்விக்குரிய ஆவணங்களின் அரசாங்க பரிசோதகரது பரிசீலனைக்கு இ.பி.ப.ஆ. சில ஆவணங்களை அனுப்பிவைத்தது. இ.பி.ப.ஆ. இவ்வருடத்திலும் ஏனைய சட்ட வலியுறுத்தல் முகவர்களுடனான ஆணைக்குழுவின் கூட்டுறவினை தொடர்ந்தது.

1 ஓர் பட்டியலிடப்பட்ட கம்பனியின் பங்குகளில், அக்குறிப்பிட்ட கம்பனியின் பிணையங்கள் தொடர்பாக பிரசுரிக்கப்படாத விலை உணர்திறன் தகவல்களை வைத்திருக்கும் சமயம் வர்த்தகம் மேற்கொள்ளல். (இ.பி.ப.ஆ. சட்டத்தின் 32 ஆம் பிரிவு)

2 ஓர் பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட ஏதேனும் பிணையங்களது விலை அல்லது வர்த்தகம் தொடர்பாக ஓர் பொய்யான அல்லது தவறாக இட்டுச்செல்லும் தோற்றப்பாட்டினை உருவாக்குதல் (இ.பி.ப.ஆ. விதிகளின் 12 ஆம் பிரிவு) மற்றும்/அல்லது உரித்துடைமை நலனில் எவ்வித மாற்றத்தையும் உள்ளடக்காத பிணையங்களில் வர்த்தகம் மேற்கொள்வதனூடாக ஓர் பொய்யான சந்தையை உருவாக்குதல் அல்லது ஏதேனும் கற்பனையான கொடுக்கல் வாங்கலினூடாக அல்லது வேறு ஏதேனும் வழியூடாக (இ.பி.ப.ஆ. சட்டத்தின் விதி இலக்கம் 13)

3 ஒரு வாடிக்கையாளருக்கு குறித்த கம்பனியின் பிணையங்களில் கணிசமான அளவு கொள்வனவு அல்லது விற்பனைக்கு முன்னர் ஒரு கம்பனியின் பிணையங்களில் வர்த்தகத்தினை மேற்கொண்டு அதன் பின்னர் இலாபமடையும் நோக்கத்துடன் அக்குறிப்பிட்ட பிணையங்களில் வர்த்தகம் செய்தல். (இ.பி.ப.ஆ. விதிகளின் 14 ஆம் விதி)

4 ஆணைக்குழுவின் முன்னால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரின் முன்னால் சமூகமளிக்கத்தவறும் ஒவ்வொரு நபரும் இச்சட்டத்தின் கீழ் தவறிழைத்தவராகக் கருதப்படுவதுடன் நீதவான் முன்னாலான சுருக்க விளக்கத்தின் பின்னர் ஐந்து வருடங்களுக்கு விஞ்சாத சிறைத்தண்டனைக்கு அல்லது ஒரு மில்லியன் ரூபாவினை விஞ்சாத தண்டப்பணத்திற்கு அல்லது சிறைத்தண்டனை மற்றும் தண்டப்பணம் இரண்டிற்கும் உட்படுவார் (இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 46 ஏ (4) ).

2019 ஆம் ஆண்டின் இறுதியில் புலனாய்வுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை / தற்போதைய நிலவரம் ஆகியவற்றின் விளக்கங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. (உருவம் 12)

உருவம் 12 : புலனாய்வுகளின் நிலைமைகள்

| புலனாய்வுகளின் தன்மை | புலனாய்வுகளின் எண்ணிக்கை | மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை / தற்போதைய நிலவரம் |
|---|---|---|
| பட்டியலிடப்பட்ட கம்பனிகளது பங்குகளில் உள்ளுறைபவர் வர்த்தகம் | 5 | ஐந்து புலனாய்வுகளில் இரண்டு 2019 ஆம் ஆண்டில் பரிந்துரைக்கப்பட்டதுடன் அவை வருடத்தின் இறுதியில் நடந்தவண்ணமுள்ளது. ஒரு புலனாய்வின் அறிக்கையானது ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் ஆணைக்குழுவின் வழிகாட்டலுக்கமைய மேலதிக புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஏனைய இரு புலனாய்வுகளும் நடைபெற்றவண்ணமுள்ளன. |
| பட்டியலிடப்பட்ட கம்பனிகளது பங்குகளில் சந்தை /விலை கையாளுகை | 3 | ஒரு புலனாய்வானது இறுதிக் கட்டத்தில் உள்ளதுடன் ஏனைய இரு புலனாய்வுகளும் வருட இறுதியில் நடந்த வண்ணமுள்ளன. இவற்றுள் ஒரு புலனாய்வானது 2019 இல் பரிந்துரைக்கப்பட்ட புலனாய்வாகும். |
| பட்டியலிடப்பட்ட கம்பனிகளது பங்குகளில் சந்தை /விலைக் கையாளுகை மற்றும் /அல்லது உள்ளுறைபவர் வர்த்தகம் | 7 | ஒரு புலனாய்வின் அறிக்கையானது இவ்வருடத்தில் தொகுக்கப்பட்டவண்ணமுள்ளது.<br>மற்றைய ஆறு புலனாய்வுகளில், வருட இறுதியில் ஒரு புலனாய்வானது இறுதிக் கட்டத்திலுள்ளதுடன் இவ்வருடத்தில் பெறப்பட்ட இரு புலனாய்வுகள் உள்ளடங்களாக மற்றைய ஐந்து புலனாய்வுகளும் வருட இறுதியில் நடந்தவண்ணமுள்ளன. |
| ஒரு பட்டியலிடப்பட்ட கம்பனியினது பங்குகளில் உள்ளுறைபவர் வர்த்தகம் மற்றும் /அல்லது சந்தை /விலைக் கையாளுகை மற்றும் அதே கம்பனியினால் தவறாக வழிநடத்தும் / உரிமை வழங்கல் நிதியின் பயன்பாட்டினை வெளிப்படுத்தாமை | 2 | இரு புலனாய்வுகளில் ஒரு புலனாய்வு அறிக்கையானது வருட இறுதியில் நிறைவுசெய்யப்பட்டு பிரதான சந்தேக நபருக்கு காரணங் காட்டு அறிவித்தல் அனுப்பப்பிவைக்கப்பட்டது.<br>மீளாய்வாண்டில் மற்றைய புலனாய்வும் நிறைவு செய்யப்பட்டது. |
| பட்டியலிடப்பட்ட கம்பனிகளது பங்குகளில் முன்னோடுதல் மற்றும் /அல்லது உள்ளுறைபவர் வர்த்தகம் | 1 | அறிக்கையானது முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் நிதான ஆலோசனைக்கு உட்பட வேண்டியுள்ளது. |
| பங்குத்தரகு நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் முறையற்ற நடவடிக்கைகள் தொடர்பான புலனாய்வு | 1 | புலனாய்வு அறிக்கையானது தொகுக்கப்பட்டவண்ணமுள்ளது. |
| பங்குத்தரகு நிறுவனங்களுக்கு எதிராக முதலீட்டாளர் முறைப்பாடு | 1 | அறிக்கையானது முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் நிதான ஆலோசனைக்கு உட்பட வேண்டியுள்ளது. |
| பட்டியலிடப்பட்ட கம்பனி ஒன்றினால் பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் கோவையினை மீறிய சாத்தியப்பாடு பற்றிய புலனாய்வு | 3 | ஒரு புலனாய்வில் இ.பி.ப.ஆ. சட்டத்தின் 46யு (4) பிரிவின் கீழ் இரண்டு நபர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மதிப்பிற்குரிய சட்டமா அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் இப்புலனாய்வானது வருட இறுதியில் நடந்தவண்ணமுள்ளது.<br>ஒரு புலனாய்வு அறிக்கையானது முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் நிதான ஆலோசனைக்கு உட்பட வேண்டியுள்ளது.<br>மற்றைய புலனாய்வானது வருட இறுதியில் நடந்தவண்ணமுள்ளது. |
| ஒரு பட்டியலிடப்பட்ட கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் தவறாக வழிநடத்தும் வெளிப்படுத்தல்களிலான புலனாய்வு | 1 | வருட இறுதியில் புலனாய்வானது நடந்தவண்ணமுள்ளது. |
| முன்னைய வருடங்களில் (2015 மற்றும் 2016 இல் மீள்திறக்கப்பட்டது) நிறைவு செய்யப்பட்ட விடயங்களிலான மேலதிக புலனாய்வுகள் | 9 | நான்கு புலனாய்வுகளின் அறிக்கையானது நிறைவுசெய்யப்பட்டன.<br>மூன்று புலனாய்வுகளின் அறிக்கையானது தொகுக்கப்பட்ட வண்ணமுள்ளதுடன் வருட இறுதியில் ஏனைய இரு புலனாய்வுகளும் நடந்தவண்ணமுள்ளன. |
| முறைமைப்படுத்தப்படும் ஓர் முதலீட்டு முகாமைத்துவக் கம்பனிக்கெதிரான ஆரம்ப விசாரணை | 1 | அறிக்கையானது முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் நிதான ஆலோசனைக்கு உட்பட வேண்டியுள்ளது. |

# செயற்பாட்டு மீளாய்வு

### வலியுறுத்தல் நடவடிக்கை

ஆணைக்குழுவின் தீர்மானம் மற்றும் வழிகாட்டலுக்கமைய இ.பி.ப.ஆ. வலியுறுத்தல் நடவடிக்கையினை மேற்கொள்கின்றது.

### காரணம் காட்டு வழங்கல்

இரண்டு பொது பட்டியலிடப்பட்ட கம்பனிகள் மற்றும் அதன் பணிப்பாளர் சபைக்கு, இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட சில பணிப்புரைகளை சந்தைக்கு உரிய நேரத்தில் வெளிப்படுத்தாமைக்காக அவர்களுக்கு எதிராக இ.பி.ப.ஆ. ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என "காரணம் காட்டு" வழங்கப்பட்டது.

### முன்னெச்சரிக்கை வழங்கல்

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடல் விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டாண்மை ஆளுகை விதிகளுடன் இணங்கியொழுகாமைக்காக ஒரு பட்டியலிடப்பட்ட கம்பனி மற்றும் அதன் பணிப்பாளர் சபைக்கு எதிராக இ.பி.ப.ஆ. ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என "காரணம் காட்டு" வழங்கப்பட்டது. இவ்விதிகள் ஓர் பணிப்புரையின் மூலம் குறித்த கம்பனி நிலுவையிலுள்ளவற்றின் ஏதேனும் பதிவழிப்பு உள்ளடங்களாக ஏதேனும் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கலினை அல்லது நிலுவையிலுள்ள மீதியினை குறைக்கும் செம்மையாக்கல்கள் மேற்கொள்வதனை தடைசெய்யும் ஓர் தேவைப்பாட்டினை அமுல்படுத்தியது.

காரணம் காட்டுமாறு இக்குறித்த அறிவித்தல் தொடர்பாக பெறப்பட்ட பதில்களை மற்றும் கம்பனியினைச் சுற்றியுள்ள சூழல் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு ஆணைக்குழுவானது குறித்த கம்பனியின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபைக்கு ஓர் "முன்னெச்சரிக்கை கடிதத்தை" வழங்குவதற்கு தீர்மானித்தது.

### நடவடிக்கை அறிவித்தல் வழங்கல்

பின்வருவன தொடர்பாக கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடல் விதிகளை மீறியமைக்காக ஒரு பட்டியலிடப்பட்ட கம்பனி மற்றும் அதன் பணிப்பாளர் சபைக்கு நடவடிக்கை அறிவித்தல் கடிதமொன்று வழங்கப்பட்டது;

- தரப்படுத்தல் கீழிறங்கள் குறித்து வெளிப்படுத்தாமை; மற்றும்
- ஓர் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக தவறாக வழிநடத்தும் வெளிப்படுத்தல் குறித்த கம்பனியானது இவ்விடயத்தினை ஒத்திணங்குமாறு ஆணைக்குழுவிற்கு விண்ணப்பங்களை மேற்கொண்டது.

இந்த வேண்டுதலை ஆணைக்குழு ஆழ்ந்தாராய்ந்ததன் பின்னர் ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியத்திற்கு ஓர் மொத்த கொடுப்பனவாக ரூபா 36.3 மில்லியனை செலுத்தும் பட்சத்தில் இவ்விடயங்களை ஒத்திணங்குவதற்கு தீர்மானித்தது.

இவ்வறிக்கை பிரசுரிக்கப்படும் திகதியில் குறித்த தொகையானது இன்னமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### இடருற்ற முறைப்பாட்டாளர்களுக்கு நிதியியல் நட்டங்களை சீர்படுத்துதல்

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் தீர்மானத்தினால் இடருற்ற ஓர் பங்குத் தரகு கம்பனி மற்றும் அதனுடன் தொடர்புடைய எல்லைக் கடன் வழங்கும் கம்பனி ஆகியவற்றின் இரண்டு வாடிக்கையாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளை செவிமடுத்து தீர்மானிப்பதற்காக, 1987 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் 46 (1) ஆம் பிரிவின் கீழ் ஆணைக்குழு 3 அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு குழுவினை நிறுவியது.

குழுவானது பங்குத் தரகு கம்பனி மற்றும் அதன் எல்லைக் கடன் வழங்குநர் ஆகியோரது பதில்களை செவிமடுத்து மற்றும் கருத்திலெடுத்து பின்வருவனவற்றை கண்டுகொண்டது;

- பங்குத்தரகு நிறுவனம் ஆவணச் சான்றுடன் அல்லது இல்லையெனில் பிணக்கிலுள்ள காலப்பகுதியில் எல்லைக் கடன் வர்த்தகக் கணக்குகள் தொடர்பாக வாடிக்கையாளர் சார்பில் மேற்கொள்ளப்பட்ட பங்குக் கொள்வனவுகள் வாடிக்கையாளரது சம்மதம் மற்றும் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட்டது என்பதை நிரூபிக்கத் தவறியது. இதன் காரணமாக இக்காலப் பகுதியில் உரிமமளிக்கப்பட்ட பங்குத்தரகர்களுக்கு அமுலிலிருந்த அங்கத்துவர் ஒழுங்குவிதிகளின் பிரிவு 5 (ll) ஆனது மீறப்பட்டுள்ளது;
- முறைப்பாட்டாளர்களது நட்டத்தைக் குறைப்பதற்காக கிடைக்கக்கூடிய பிணையங்களை பங்குத் தரகு நிறுவனம் நேரகாலத்துடன் விற்பனை செய்வதற்கு தவறியுள்ளது;
- பங்குத் தரகு நிறுவனமும் அதன் எல்லைக் கடன் வழங்குநரும் வாடிக்கையாளரது பிணையங்களை விற்கும் விளக்கமான அறிவுறுத்தல்களுக்கு முரணாக பிணையங்களை கொள்வனவு செய்வதற்கு தொடர்ந்து செயற்பட்டதன் நிமித்தம் அவர்களது கடன் வெளிப்பாடானது விரிவடைந்தது; மற்றும்
- பங்குத்தரகர் அவர்களது வாடிக்கையாளர்களது சிறந்த நலனுக்காக செயற்பட்டார்கள் என்பதை செயல் விளக்கமளிக்க தவறினார்கள்.

குழுவின் கண்டுபிடிப்புகள் ஏனையவற்றுக்கிடையில், பங்குத்தரகு நிறுவனத்தினது அலுவல்களது முகாமைத்துவத்தில் முறைகேடு அல்லது ஒழுங்கீனம் காணப்படுகின்றது என்று விளக்கமளித்ததை ஆணைக்குழு உறுதிப்படுத்தியதுடன் மற்றும் பங்குத்தரகர் இதனை சரிசெய்யவேண்டும் அல்லது பங்குத்தரகருக்கு வழங்கப்பட்ட உரிமத்தினை இடைநிறுத்துவதற்கு அல்லது நீக்குவதற்கு பதிலாக முறைப்பாட்டாளர்களுக்கு மொத்த தொகையாக ரூபா 3,990,683,81 இனை செலுத்துவதன் மூலம் முறைப்பாட்டாளர்களுக்கு ஏற்பட்ட நிதியியல் நட்டத்தை சரிசெய்தல் வேண்டும் என தீர்வளித்தது.

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையும் தவறிழைத்த பங்குத்தரகர் குற்றப்பணம் செலுத்தவேண்டும் என பணித்தது.

ஆணைக்குழுவானது எல்லைக் கடன் வழங்குநருக்கு ஓர் "காரணம் காட்டு" இனை வழங்கியதன் பின்னர் எல்லைக் கடன் வழங்குநருக்கெதிரான குழுவினது கண்டுபிடிப்புகளை நிலைநிறுத்தியதுடன் எல்லைக் கடன் வழங்குநருக்கு வழங்கப்பட்ட பதிவீட்டினை இடைநிறுத்துவதற்கு அல்லது நீக்குவதற்கு பதிலாக எல்லைக் கடன் வழங்குநர் முறைப்பாட்டாளர்களுக்கு மொத்த தொகையாக ரூபா 2,141,008,69 இனை செலுத்துதல் வேண்டும் என பணித்தது.

### வழக்காடல்கள்

#### இ.பி.ப.ஆ. எதிர் எம். ஐ. சம்சுதீன் மற்றும் எம். பி. நிஷார் - நீ.நீ. S/5322/17

1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் (திருத்தியமைக்கப்பட்டவாறு) பிரிவு 51 (1) (ஏ) இன் கீழ் மற்றும் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 113 (பி) மற்றும் 102 இனை 18 டிசம்பர் 2001 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி

இலக்கம் 1215/2 இல் பிரசுரிக்கப்பட்ட இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு விதிகளில் விதி இலக்கம் 12 இனையும் சேர்த்து வாசித்து இவற்றின் கீழ் தண்டிக்கத்தகு சந்தை/விலை கையாளுகைக்கு சதி செய்தமை மற்றும் சந்தை/விலை கையாளுகையினை செய்தமைக்காக மேற்குறிப்பிட்ட வழக்கினை இ.பி.ப.ஆ. கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் எம். இம்தியாஸ் சம்சுதீன் மற்றும் பாவிக் நிஷார் என்பவர்களுக்கெதிராக தாக்கல் செய்தது.

இவ்விடயமானது கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது.

**டலிப் தவ்வீக் அல் நகீப் எதிர் இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. வழக்கு இலக்கம் WP/HCCA/LA/158/2017**

மதிப்பிற்குரிய கொழும்பு மாவட்ட நீதிபதியினால் வழங்கப்பட்ட கட்டளைக்கு எதிராக மேன்முறையிடுவதற்கான அனுமதி வேண்டி மேற்குறிப்பிட்ட விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது. குறிப்பிட்ட வழக்கு இலக்கம் DSP/20/2016 டலிப் தவ்வீக் அல் நகீப் அவர்களால் இ.பி.ப.ஆ. க்கும் கொ.ப.ப. க்கும் எதிராக தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு இலக்கம் DSP/20/2016 கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் கொ.ப.ப. மற்றும் இ.பி.ப.ஆ. க்கு எதிராக பின்வருவனவற்றை வேண்டி திரு டலிப் தவ்வீக் அல் நகீப் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டது. கொ.ப.ப. இல் பட்டியலிடப்பட்ட கம்பனியான ஹன்டர் அன்ட் கம்பனி பி எல் சி இன் பட்டியலிடப்படாத துணைக்கம்பனியான ஹீத் அன்ட் கம்பனி (சிலோன்) லிமிட்டட்டினது விடயங்களில் கொ.ப.ப. உம் இ.பி.ப.ஆ. உம் புலனாய்வு செய்வதற்கு கடப்பாடுடையதான பிரகடனத்திற்கு கொ.ப.ப. க்கும் இ.பி.ப.ஆ. க்கும் எதிராக தீர்ப்பு மற்றும் தீர்வையினை வேண்டி மேற்கொள்ளப்பட்டது. மதிப்பிற்குரிய மாவட்ட நீதிபதி அவர்கள் விண்ணப்பதாரி டலிப் தவ்வீக் அல் நகீப் அவர்களால் இ.பி.ப.ஆ. க்கும் கொ.ப.ப. க்கும் எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை தள்ளுபடி செய்யும் கட்டளையினை வழங்கினார்.

விண்ணப்பதாரி மாவாட்ட நீதிமன்றத்தின் வழக்கினைத் தள்ளுபடி செய்த தீர்ப்பிற்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளார். இவ்விடயமானது கொழும்பு மேல் நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

**மெக்பெக் எக்ஸ்போர்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் எதிர் இ.பி.ப.ஆ. வழக்கு இலக்கம் HCMCA 217/2007 – நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது**

இ.பி.ப.ஆ. விதிகளுக்கு முரணாக சில முக்கியமான தகவல்களை உடனடியாக வெளிப்படுத்தாமைக்காக அறிவுபடைத்த கொழும்பு கோட்டை நீதிவான் அவர்களினால் குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்ட நான்கு குற்றஞ் சுமத்தப்பட்டவர்கள் தீர்ப்புக்கும் அவர்களது தண்டனைத் தீர்ப்புக்கும் எதிராக மாகாண மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தார்கள். குற்றத்தீர்ப்பு மற்றும் தண்டனைத் தீர்ப்பு இரண்டிற்கும் எதிரான 6ஆம் குற்றஞ்சாட்டப்பட்ட மேன்முறையீட்டாளரது மேன்முறையீடானது கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது.

**இ.பி.ப.ஆ. எதிர் சேன யத்தெஹிகே மற்றும் எஸ். தினமணி, நீநீ/கோட்டை/12639/2019**

1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் (திருத்தியமைக்கப்பட்டவாறு) பிரிவு 32 மற்றும் அதனுடன் சேர்த்து வாசிக்கப்படும் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 102 இனையும் மீறியதுடன் உள்ளுறைபவர் வர்த்தகம் மற்றும் உதவி செய்தலும் உடந்தையாயிருந்தமைக்காக 2019 மார்ச் 07ஆம் திகதி கோட்டை நீதவான் நீதிமன்றத்தின் முன்னால் கலாநிதி. சேன யத்தெஹிகே மற்றும் திரு. சுப்பிரமணியம் தினமணி ஆகியோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. குறித்த நபர்களுக்கெதிராக அறிவுபடைத்த நீதவான் அவர்களால் அழைப்பாணை வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், இவ்விடயமானது உயர்நீதிமன்றத்தின் SC/SPL/LA 100/19 இன் கட்டளை முடிவுசெய்யும்வரை நிறுத்தி வைக்கப்பட்டது.

**இ.பி.ப.ஆ. எதிர் லங்கா கன்னங்கர, கபில சேனாரத், பாரிக் வுர்கான், மற்றும் ரவீந்திர மல்லவாரச்சி, நீநீ/கோட்டை/13736/2019**

இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 51 (2) இன் கீழ் தண்டிக்கதகு, இ.பி.ப.ஆ. சட்டத்தின் 51 (1)(ஏ) பிரிவு மற்றும் அதனுடன் சேர்த்து வாசிக்கப்படும் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவுகள் 113(பி) மற்றும் 102 மற்றும் 2001 டிசம்பர் 18 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 1215/2 இல் பிரசுரிக்கப்பட்டவாறான இ.பி.ப.ஆ. விதிகளில் விதி இலக்கம் 12 இல் ஓர் தவறாகக் கருதப்படும் சந்தை கையாளுகை, சந்தை கையாளுகையினை செய்வதற்கு கூட்டு சதி செய்தமை மற்றும் உதவியாயும் உடந்தையாயும் இருந்த குற்றத்திற்காக நான்கு முதலீட்டு ஆலோசகர்களுக்கு எதிராக 2019 ஜுலை 25 இல் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இவ்வழக்கானது இற்றைக்கு நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

**இ.பி.ப.ஆ. எதிர் டபிள்யு.கே.எச். வெகாபிட்டிய, திலக் டி சில்வா மற்றும் தக்சிலா ஹுலங்கமுவ, நீநீ/கோட்டை/14778/2019**

இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 51 (2) இன் கீழ் தண்டிக்கதகு, இ.பி.ப.ஆ. சட்டத்தின் 51 (1)(ஏ) பிரிவு மற்றும் அதனுடன் சேர்த்து வாசிக்கப்படும் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவுகள் 113(பி) மற்றும் 102 மற்றும் இ.பி.ப.ஆ. விதிகளில் விதி இலக்கம் 12 இல் ஓர் தவறாகக் கருதப்படும் சந்தை கையாளுகை, சந்தை கையாளுகையினை செய்வதற்கு சதி செய்தமை மற்றும் உதவியாயும் உடந்தையாயும் இருந்த குற்றத்திற்காக 2019 நவம்பர் 05 இல் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. குற்றவியல் நடவடிக்கைமுறைக் கோவையின் பிரிவு 186 க்கு ஏற்ப குற்றஞ்சாட்டப்பட்டவர்களினால் இக்கோவையின் பிரிவு 136 (1) (பி) இன் கீழ் இ.பி.ப.ஆ. அதன் வழக்குரையினை தாக்கல் செய்ய இயலாது என்று எழுப்பப்பட்ட முதனிலை ஆட்சேபனையினை ஏற்றுக்கொண்டு 2020 பெப்ரவரி 13 இல் அறிவுபடைத்த நீதவான் அவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டவர்களை விடுவித்தார்.

**மேநீ/பேராணை/519/2019 - டபிள்யு. கே.எச்.வெகாபிட்டிய எதிர் இ.பி.ப.ஆ., மேநீ/போராணை/520/2019 - திலக் டி சில்வா எதிர் இ.பி.ப.ஆ.**

இ.பி.ப.ஆ., அதன் ஆணைக்குழு அங்கத்தவர்கள், மற்றும் இ.பி.ப.ஆ. இன் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு எதிராக, மேற்குறிப்பிட்ட மனுதாரர்களை பிரதிவாதிகளாகப் பெயரிட்டு நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு இலக்கம் நீநீ/கோட்டை/14778/2019 இனை இ.பி.ப.ஆ. சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டமைக்காக, மனுதாரர்கள் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் ஓர் ஆணை விண்ணப்பத்தினை தாக்கல் செய்தார்கள்.

# செயற்பாட்டு மீளாய்வு

மேற்குறிப்பிட்ட வழக்கில் 2020 பெப்ரவரி 13 இல் மதிப்பிற்குரிய நீதிமன்ற நீதிமான் அவர்களால் வழங்கப்பட்ட தீர்ப்பின் பின்னர் மனுதாரர்கள் இவ்வழக்குகனை வாபஸ் பெற்றார்கள்.

### சேன யத்தெஹிகே எதிர் இ.பி.ப.ஆ. மே.நீ. /பேராணை/417/2017

கலாநிதி சேன யத்தெஹிகே அவர்கள் 2017 இல் மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னால், ஏனையவற்றுக்கிடையில் நீதவான் நீதிமன்ற நடவடிக்கைகளை நிறுத்திவைக்குமாறு வேண்டி இ.பி.ப.ஆ. க்கு எதிராக இந்த பேராணை விண்ணப்பமானது தாக்கல் செய்யப்பட்டது. இ.பி.ப.ஆ. மார்ச் 2019 இல் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் இவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டபோது இவர் பேராணை விண்ணப்பத்திற்கு துணைபுரிவதற்கு நடவடிக்கை எடுத்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்றம் 2019 மார்ச் 22 இல் நீதவான் நீதிமன்றத்தின் முன்னால் உள்ள நடவடிக்கைகளை நிறுத்திவைப்பதற்கு மறுத்ததுடன் அறிவித்தல் வழங்குவதில் எழுத்துமூல சமர்ப்பிப்புகளை தாக்கல் செய்யுமாறு கட்டளையினை வழங்கியது.

### சேன யத்தெஹிகே எதிர் இ.பி.ப.ஆ., உநீ/விசேடம்/LA 100/19

மேநீ/பேராணை/417/2017 இல் மேற்குறிப்பிட்ட கட்டளையினால் இடருற்று கலாநிதி. யத்தெஹிகே மேன்முறையிடுவதற்காக விசேட அனுமதி மூலம் உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்தார். சத்தியம் மற்றும் உறுதிப்படுத்தல் கட்டளைச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய கலாநிதி யத்தெஹிகே அவர்களால் நீதிமன்றத்தின் முன்னே செல்லுபடியாகும் சத்தியக்கடதாசி காணப்படவில்லை என்ற ஆட்சேபனையை இ.பி.ப.ஆ. முன்வைத்தது. அத்துடன் குறித்த சத்தியக்கடதாசியானது 1981 ஆம் ஆண்டின் தூதரகச் செயற்பாடுகள் சட்டத்துடன் இணங்கவில்லை என இ.பி.ப.ஆ. சமர்ப்பித்தது. எனவே அனுமதி வழங்குவதற்கு நீதிமன்றத்தின் முன்னால் முறையான விண்ணப்பம் இல்லை என்று சமர்ப்பிக்கப்பட்டது.

இதற்கமைய, உயர் நீதிமன்றம் 2019 மே 3 இல் இ.பி.ப.ஆ. ஆல் எழுப்பப்பட்ட ஆரம்ப ஆட்சேபனையில் கட்டளைக்காக விடயத்தினை நிர்ணயித்ததுடன், நீதவான் நீதிமன்றம் (நீ. நீ./கோட்டை/12639/2019) மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் (மே.நீ./பேராணை/417/2017) ஆகியவற்றின் முன்னால் உள்ள விடயங்களை தற்காலிகமாக நிறுத்திவைத்தது. குறித்த ஆரம்ப ஆட்சேபனையிலான உயர்நீதிமன்றத்தின் கட்டளையானது இற்றை வரையில் நிலுவையாயுள்ளது.

### இ.பி.ப.ஆ. எதிர் திரு. டபிள்யு.ஜே.ஏ.எம்.சொய்சா (நீநீ கோட்டை/7701/2017)

இ.பி.ப.ஆ. கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் திரு. விதானலகே ஜுவெனல் அருண மெலன் சொய்சா க்கு எதிராக அவருடைய ம.வை.தி. கணக்கில் இடம்பெற்ற சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக ஓர் வாக்குமூலத்தினை பதிவுசெய்வதற்காக அழைப்பாணை விடுக்கப்பட்டதற்கு இ.பி.ப.ஆ. இன் முன்னால் பிரசன்னமாகத் தவறியமைக்காக வழக்கினை தாக்கல் செய்தது. அறிவுபடைத்த நீதவான் அவர்களால் 2019 ஜனவரி 25 இல் இ.பி.ப.ஆ. இன் 46ஏ பிரிவினை மீறியமைக்காக இவர் குற்றஞ்சாட்டப்பட்டார். இதன் பயனாக திரு. சொய்சா அவர்கள் இ.பி.ப.ஆ. இன் முன்னர் சமூகமாகி வாக்குமூலத்தினை வழங்கியதன் பின்னர் இவருக்கு எதிராக வழக்கினை 2019 ஜுன் 10 இல் வாபஸ் செய்தது.

### புகார்கள் குறைதீர்த்தல் முறைமை

பட்டியலிடப்பட்ட கம்பனிகள் தொடர்பாக கிடைக்கப்பெற்ற புகார்களது நிலவரம் மற்றும் அவற்றுக்கான குறைதீர்த்தல் கீழே கொடுக்கப்பட்டுள்ளன: (உருவம் 13)

உருவம் 13: பட்டியலிடப்பட்ட கம்பனிகள் தொடர்பான புகார்கள் மற்றும் விடயங்களது கையாளுகை

| புகாரின் தன்மை | கையாண்ட புகார்களின் எண்ணிக்கை | மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை / தற்போதைய நிலவரம் |
|---|---|---|
| பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகளின் பணிப்பாளர் சபையினது நடத்தை | 08 | 08 விடயங்கள் பொருத்தமானவாறு முடிவுறுத்தப்பட்டன. |
| பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகளின் நடத்தை | 14 | 11 விடயங்கள் பொருத்தமானவாறு தீர்த்துவைக்கப்பட்டன. 03 விடயங்கள் அறிக்கையிடப்படும் தினத்தில் நிலுவையிலுள்ளன. |
| பிரயோகிக்கப்படவேண்டிய நிதியியல் அறிக்கையிடல் வரம்புறுகைக்கு இணங்கியொழுகாமை | 02 | 02 விடயங்கள் பொருத்தமானவாறு தீர்த்து வைக்கப்பட்டன. |
| இ.பி.ப.ஆ. இன் விதிகள் / கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளுக்கு இணங்கியொழுகாமை | 03 | 03 விடயங்கள் பொருத்தமானவாறு முடிவுறுத்தப்பட்டன. |
| மொத்தம் | 27 | |

### இழப்பீட்டுக்குழுவொன்றின் நியமனம்

1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் (திருத்தியமைக்கப்பட்டவாறு) பிரிவு 38இன் உப பிரிவு 01 இன் கீழ் ஓர் இழப்பீட்டு குழுவினை நியமித்தல் இ.பி.ப.ஆ. இன் சட்டரீதியான பொறுப்பாகும். இது யாரேனும் பங்குத்தரகர் அல்லது பங்குவர்த்தகர் தங்களது ஒப்பந்தக் கடப்பாடுகளை சந்திப்பதற்கு ஆற்றலின்றி காணப்பட்டால் இதன் விளாவாக யாரேனும் முதலீட்டாளர் பண ரீதியான நட்டத்தினால் பாதிக்கப்பட்டால் அதற்கு இழப்பீடு வழங்குவதற்காக ஓர் இழப்பீட்டு நிதியமொன்றை நிறுவிப் பராமரித்தல் வேண்டும்.

இ.பி.ப.ஆ. சட்டத்தின் 39 ஆம் பிரிவின் உப பிரிவு 01 இன் தேவைப்பாடு பின்வருமாறு காணப்படுகின்றது. ஆணைக்குழுவின் அங்கத்தவர்களிடையே மூன்று அங்கத்தவர்களை உள்ளடக்கிய ஆணைக்குழுவின் இழப்பீட்டுக் குழுவொன்றினை அமைச்சர் நியமிக்க வேண்டும் என்பதுடன் இக்குழுவானது இ.பி.ப.ஆ. சட்டத்தின் 40 ஆம் பிரிவின் கீழ் இழப்பீட்டிற்கான ஏதேனும் விண்ணப்பம் தொடர்பாக இழப்பீட்டினை மதிப்பீடு செய்வதற்கும் வழங்குவதற்கும் பொறுப்பாளியாவார்கள்.

இதன் பிரகாரம், நிதி விடயத்திற்கு பொறுப்பாயுள்ள மான்புமிகு அமைச்சர் ஆணைக்குழுவின் வேண்டுதலையடுத்து 2019 இல் ஆணைக்குழுவின் மூன்று அங்கத்தவர்களை உள்ளடக்கிய இழப்பீட்டுக் குழுவினை நியமித்தார்.

### மூலதனச் சந்தை அபிவிருத்தி

மூலதனச் சந்தையானது பொருளாதார அபிவிருத்திக்கு மிகவும் முக்கியமானதாகும், ஏனெனில் அவை பட்டியலிடப்பட்ட கம்பனிகள் தங்களது நீண்டகால மூலதனத்தை திரட்டுவதற்கான ஒரு மேடையினை வழங்குவதுடன் முதலீட்டாளர்களுக்கு அவர்களது மேலதிக நிதியினை முதலீடு செய்வதற்கான ஓர் வாயிலாகவும் காணப்படுகின்றன. திறன்பட இயங்கும் மூலதனச் சந்தையின் நலன்களை பெற்றுக்கொள்வதற்கு முதலீட்டாளர்களை பாதுகாக்கும் போதுமான முறைமைப்படுத்தல்கள், ஆழமான மற்றும் திரவத்தன்மை மிக்க சந்தைகளை ஊக்குவித்தல் மற்றும் முறைசார் இடர்நேர்கையினை முகாமைப்படுத்தல் என்பன அவசியமாகும். இதன் பிரகாரம், இ.பி.ப.ஆ. மூலதனச் சந்தையினை விருத்திசெய்வதற்கு கொள்கைகளை உருவாக்குவதிலும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குவதிலும் ஈடுபட்டுள்ளது.

### கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் விநியோகம் எதிர் கொடுப்பனவு பொறிமுறையின் அமுலாக்கம்

கொ.ப.ப. உடன் ஆலோசனை செய்து இ.பி.ப.ஆ. விநியோகம் எதிர் கொடுப்பனவு (வி.எ.கொ.) பொறிமுறைக்காக ஓர் கொள்கையினை உருவாக்கியது. இ.பி.ப.ஆ. அங்கத்தவர்களது அங்கீகாரத்தினை பெற்றதன் பின்னர், கொ.ப.ப. இதனை அமுல்படுத்துமாறு வேண்டப்பட்டது. இதன் விளைவாக, அனைத்து முறைசார் மேம்படுத்தல் உள்ளடங்களாக உத்தேசித்த வி.எ.கொ. இன் அமுலாக்கம் 2020 இன் இறுதியில் பூர்த்திசெய்யப்படும். இதன் அமுலாக்கத்தினை இ.பி.ப.ஆ. விரைவு படுத்துகின்றது.

நிறுவனங்களின் ஆரம்ப பொது வழங்கல் (ஆ.பொ.வ.) தொடர்பான கொ.ப.ப. இன் பட்டியலிடல் வரம்புறுகைகளுக்கான பிரேரிக்கப்பட்டுள்ள திருத்தங்கள் தொடர்பான கொள்கையின் அங்கீகாரம்

இ.பி.ப.ஆ. நிறுவனங்களின் ஆரம்ப பொது வழங்கல் (ஆ.பொ.வ.) தொடர்பான கொ.ப.ப. இன் பட்டியலிடல் வரம்புறுகைகளுக்கான பிரேரிக்கப்பட்டுள்ள திருத்தங்கள் தொடர்பான கொள்கையினை அங்கீகரித்தது. இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. தற்போது இதற்கான விதிகளை முடிவுறுத்தும் செயல்முறையிலுள்ளன.

பச்சை முறிகள் மற்றும் சூழல், சமூகம் மற்றும் ஆளுகை (சூ.ச.ஆ) அறிக்கையிடல் வரம்புறுகை தொடர்பாக ஆய்வு நடாத்தப்பட்டது.

பின்வருவனவற்றில் பரவலான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது:

- பச்சை முறிகளின் வழங்கல் மற்றும் உள்ளூர் மூலதனச் சந்தையின் அதன் விளைவு.
- சூ.ச.ஆ. அறிக்கையிடல் வரம்புறுகை மற்றும் உள்ளூர் மூலதனச் சந்தையில் அதனைப் பிரயோகிக்கக்கூடிய அளவு.

### கொடைவழங்கும் முகவர்களுடன் இணைவதனூடாக மூலதனச் சந்தையினை அபிவிருத்தி செய்தல்

உலக வங்கியின் நிதியியல் துறை நவினமயப்படுத்தல் திட்டம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூலதனச் சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

உலக வங்கியின் நிதியியல் துறை நவீனமயப்படுத்தல் திட்டம் (நி.து.ந.தி.) மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூலதனச் சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (மூ.ச.அ.நி.) என்பவற்றின் ஓர் அங்கமாக, இ.பி.ப.ஆ. அதன் மேற்பார்வை மற்றும் முறைப்படுத்தல் கொள்திறனை பலப்படுத்தும் முக்கியமான மூலதனச் சந்தை அபிவிருத்தி முன்னெடுப்புக்கள் தொடர்பாக நிதியினை பெற்றுக்கொண்டது. உரிய திட்டங்களுக்கான கொள்கை முன்னெடுப்புகள் மற்றும் ஆலோசனை மற்றும் பண்டங்கள் கொள்முதல்கள் என்பன தற்போது நடந்தவண்ணமுள்ளன.

### இலங்கையில் முதலிடுங்கள் - சிங்கப்பூரில் இடம்பெற்ற முதலீட்டாளர் மன்றம்

முதலீட்டுத்தேக்க மற்றும் நேரடி முதலீட்டாளர்களை கவர்வதற்காக இ.பி.ப.ஆ., கொ.ப.ப. உடன் இணைந்து 2019 மே 21 இல் சிங்கப்பூரில் ஓர் மன்றத்தினை ஒழுங்கு செய்தது. பிரதான மன்றத்தை அடுத்து, பங்குபற்றுநர்கள் இலங்கையின் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களுடன் நேருக்கு நேர் குழுக் கூட்டங்களில் கலந்துகொள்ளக்கூடிய வாய்ப்பினைப் பெற்றார்கள்.

இந்நிகழ்வானது சிங்கப்பூரிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் உதவியுடன் ஒழுங்குசெய்யப்பட்டதுடன் விளம்பர பங்காளி என்ற கொற்திறனில் சிங்கப்பூர் வணிக சம்மேளனத்தினால் உறுதுணையளிக்கப்பட்டது.

### ஏனைய கொள்கை முன்னெடுப்புகள்

- கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளது முற்றுமுழுதான சீராய்வானது, காணப்படும் முறைமைப்படுத்தல் இடைவெளிகளுடன் சேர்த்து புதிய முன்னெடுப்புக்களையும் உள்ளடக்குவதற்காக மேற்கொள்ளப்பட்டது:

# செயற்பாட்டு மீளாய்வு

- சபையின் உப குழுக்களின் அங்கத்தவர்கள் பட்டியலிடப்பட்ட நிறுவனத்தின் பணிப்பாளர்களாகக் காணப்படாமை
- சுயாதீன பணிப்பாளர்களின் நியமனமானது பெரும்பான்மை பங்குதாரர்களால் மேற்கொள்ளப்பட்டமை

- பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பணிப்பாளர்களுக்கான பொருத்தம் மற்றும் சரியானது பிரமாணங்களை விருத்திசெய்தல்
- பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள், பட்டியலிடல்கள் மற்றும் பட்டியலிடப்பட்ட கம்பனிகளை பட்டியலிலிருந்து நீக்குதல் போன்ற முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பாக பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் பங்குகளது மதிப்பீட்டிற்கான வழிகாட்டிகளை விருத்திசெய்தல்
- கூட்டாண்மை ஆளுகையிலான பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான ஒழுங்கமைப்பின் கொள்கைகள், சர்வதேச பிணையங்கள் ஆணைக்குழுக்கள் ஒழுங்கமைப்பின் கொள்கைகள் மற்றும் சர்வதேச சிறந்த நடைமுறைகள் என்பவற்றுக்கு ஒத்தாற்போல் கூட்டாண்மை ஆளுகை கோவையினை அமுல்படுத்துதல்
- செயற்பாட்டு வரம்புறுகை, இடர்நேர்கை இனங்காணுதல், விதிகளது கலந்தறிதல் மற்றும் புதிய பட்டியலிடல் மேடைகளை இயலுமையாக்குவதற்காக மட்டக்குறியிடல்களை அறிமுகப்படுத்தல் என்பவற்றிலான முற்றுமுழுதான மீளாய்வு.
  - உள்நாட்டு நிறுவனங்களினால் பல்நாணய கடன் பட்டியலிடல்கள்
  - சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகளின் கடன் பட்டியலிடல்கள்
- பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் கணக்காய்வாளர்களது பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதற்காக பிரயோகிக்கத்தக்க ஓர் முற்றுமுழுதான வழிகாட்டிகளை உருவாக்குவதற்காக நடைமுறையிலுள்ள தேவைப்பாடுகளை பலப்படுத்துவதுடன் பங்காளிகளது நம்பகத்தன்மையின் பாதுகாத்தல் மற்றும் வெளிப்படுத்தப்படும் தகவல்களின் நம்பகத்தன்மையினை மேம்படுத்துவதற்கான வரம்புறுகையினை உருவாக்குவதற்கான சாத்தியப்பாட்டினை மதிப்பிடல்
- பட்டியலிடப்படா கூட்டாண்மை நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் பகிரங்க கொடைமுனைவுகளிலான புதிய இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 75 இல் கீழான வேண்டப்படும் அங்கீகாரத்தினை வழங்குவதற்கான ஓர் செயல்முறையினை விருத்திசெய்தல்
- ஓர் இடர்நேர்கை அடிப்படையிலான வெளிப்படுத்தல் அணுகுமுறையினை கடைப்பிடித்து "நிதியியல் கண்காணிப்பில்" வரம்புறுகையினை விருத்திசெய்து அமுல்படுத்தல்; இதற்கு வசதியளிப்பதற்காக உள்ளக கொள்திறனை கட்டியெழுப்புதல்.
- இலங்கையின் மூலதனச் சந்தைக்கு தரப்படுத்தப்பட்ட நிதியியல் அறிக்கையிடல் முறையொன்றின் அறிமுகத்தினை மதிப்பிடுதல்
- பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் சிற்றளவு பங்குதாரர்களை பிரதிபலிக்கும் ஓர் முதலீட்டாளர் சங்கத்திற்கு வசதியளிப்பதற்கான சாத்தியப்பாட்டினை மதிப்பிடுதல்

### உலக வங்கியின் வணிகம் செய்தல் சுட்டி

உலக வங்கியின் வணிகம் செய்தல் முன்னெடுப்பிற்கு மேற்கொண்ட பரிந்துரைகளின் அடிப்படையில், கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளுடன் கம்பனிகள் சட்டத்தின் பொருத்தமான ஏற்பாடுகளூடாக மூலதனச் சந்தையினை முறைமைப்படுத்துவதற்கான இ.பி.ப.ஆ. இன் வரம்புறுகையினை மதிப்பீட்டாளர்கள் அங்கீகரித்துள்ளார்கள். உலக வங்கியின் ஏற்பாடுகளின் பிரகாரம் 190 நியாயாதிக்கங்களில் இலங்கை 99ஆவது நிலைக்கு படிநிலைப்படுத்தப்பட்டுள்ளதுடன் சிற்றளவு முதலீட்டாளர்களை பாதுகாக்கும் சுட்டியில் 28 ஆவது நிலையினையும் பெற்றுள்ளது.

### மூலதனச் சந்தை கல்வி மற்றும் பயிற்சி

பிணையங்கள் துறையில் முதலீட்டு ஆலோசகர்களாக தொழில்புரிவதற்கு கட்டாயமாக்கப்பட்ட பதிவீடளிக்கப்பட்ட முதலீட்டு ஆலோசகர் சான்றிதழளிப்பை இ.பி.ப.ஆ. அதன் உரிமமளித்தல் கடமையின் ஓர் அங்கமாக நிர்வகிக்கின்றது. இந்நிகழ்ச்சித்திட்டத்தினூடாக துறைசார் தொழில்வல்லுநர்கள் தகமையுடையவர்களாக காணப்படுவதுடன் அவர்களது கடமையினை பயனுறுமிக்கதாகவும் வினைத்திறனுடையதாகவும் மேற்கொள்ள இயலுமையாயிருக்கும். முதலீட்டு ஆலோசகர்கள் அவர்களது தொழில்நுட்ப அறிவு மற்றும் திறமைகளை தொடர்ந்தும் இற்றைப்படுத்துவதற்கும் புதுப்பிப்பதற்குமாக தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றல் தேவைகளுக்கு இணக்கப்பாடு காணுதல் வேண்டும். அதே சமயம், அறிவுபடைத்த முதலீட்டாளர்களை உருவாக்குவதற்காக நாம் கட்டமைக்கப்பட்ட முதலீட்டாளர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகின்றோம்.

### திருத்தியமைக்கப்பட்ட தகமைக் கட்டமைப்பு

கடந்த 10 வருடங்களில் பிணையங்கள் துறையில் ஏற்பட்ட அபிவிருத்திகளை கருத்திற்கொண்டு இ.பி.ப.ஆ. தகமைக் கட்டமைப்பில் திருத்தங்களை ஆரம்பித்து 2018 இல் இவ்வேலையை நிறைவுசெய்தது. பழைய மாணவர்கள் மற்றும் துறைசார் பங்காளிகளுடனான விரிவான ஆழ்ந்தாராய்வுகளின் பின்னர் இக்கட்டமைப்பில் முழுமையான திருத்தம் மேற்கொள்ளப்பட்டு 2019 இல் அதன் செயல்முறைப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டது.

உரித்துவப் பிணையங்கள், கடன் பிணையங்கள், மூலாதாரப் பிணையங்கள் மற்றும் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகள் போன்றவற்றை உள்ளடக்கிய சொத்து வகுப்புக்களுக்கு தனியான சான்றிதழளிப்பதற்கு திருத்தியமைக்கப்பட்ட தகமைக் கட்டமைப்பு வசதியளிக்கின்றது. திருத்தியமைக்கப்பட்ட கட்டமைப்பின் கீழ், பதிவீடளிக்கப்பட்ட முதலீட்டு ஆலோசகர் (ப.மு.ஆ.) தகமையானது பிணையங்கள் துறையில் உச்சநிலை தகமையாக மேம்படுத்தப்பட்டதுடன் முதலீட்டு ஆலோசகர்களுக்கான தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி தேவைப்பாடானது கடுமையாக்கப்பட்டது. (உருவம் 14)

உருவம் 14 தகமை வரம்புறுகை



# செயற்பாட்டு மீளாய்வு

## மூலதனச் சந்தை சான்றிதழ் (மூ.ச.சா.) மற்றும் பதிவீடளிக்கப்பட்ட முதலீட்டு ஆலோசகர் (ப.மு.ஆ.)

மூலதனச் சந்தை தொழில் வல்லுநர்களுக்கும் மேலாக துறைசாரா தனிநபர்கள், பாடசாலை விட்டு விலகியோர், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஏனைய துறையைச் சார்ந்த தொழில் வல்லுநர்களிடமிருந்து தொடர்ச்சியான ஆர்வத்தையும் மூ.ச.சா. நிகழ்ச்சித்திட்டத்திலான சேர்க்கைகளையும் நாம் அவதானித்தோம். புதிய கட்டமைப்பின் அறிமுகத்தினை தொடர்ந்து இவ்வருடத்தில் 48 மாணவர்கள் மூ.ச.சா. நிகழ்ச்சித்திட்டத்தில் பதிவுசெய்தார்கள். (உருவம் 15,16,17)

உருவம் 15 : மூ.ச.சா. மற்றும் ப.மு.ஆ. செயற்திறனது புள்ளவிபரச் சுருக்கம் - 2019 (பழைய தகமைக் கட்டமைப்பு)

| மாணவர்களது எண்ணிக்கை | | | | | |
|---|---|---|---|---|---|
| பதிவுசெய்யப்பட்ட மொத்தம் | உரித்துவத் தொடரை நிறைவு செய்தவர்கள் | கடன் தொடரை நிறைவு செய்தவர்கள் | நிதியியல் முறைமைப்படுத்தல் மற்றும் நெறிமுறைத் தொடரை நிறைவு செய்தவர்கள் | மூ.ச.சா. நிறைவு செய்தவர்கள் | ப.மு.ஆ. நிறைவு செய்தவர்கள் |
| 2019 இல் புதிதாக தொகுதி ஆரம்பபிக்கப்படவில்லை (புதிய கட்டமைப்பிற்கான மாறுதல் காலப்பகுதி) | 14 | 13 | 31 | 29 | 08 |

உருவம் 16 : மூ.ச.சா. மற்றும் ப.மு.ஆ. செயற்திறனது புள்ளவிபரச் சுருக்கம் - 2019 (புதிய தகமைக் கட்டமைப்பு)

| மாணவர்களது எண்ணிக்கை | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பதிவுசெய்யப்பட்ட மொத்தம் | பிணையங்கள் சந்தைகள் மற்றும் முதலீட்டுக் கருவிகள் தொடரை நிறைவு செய்தவர்கள் | உரித்துவத் தொடரை நிறைவு செய்தவர்கள் | கடன் தொடரை நிறைவு செய்தவர்கள் | நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி தொடரை நிறைவு செய்தவர்கள் | நிதியியல் திட்டமில், ஆலோசனை மற்றும் சந்தைப்படுத்தல் தொடர் | நிதியியல் முறைமைப்படுத்தல் மற்றும் நெறிமுறைத் தொடர் |
| 48 | 15 | 10 | 12 | 09 | 2019 இல் பரீட்சைகள் நடாத்தப்படவில்லை | 2019 இல் பரீட்சைகள் நடாத்தப்படவில்லை |

உருவம் 17 : மூ.ச.ச. மற்றும் ப.மு.ஆ. க்கு நடாத்தப்பட்ட பரீட்சைகளின் சுருக்கம் - 2019

| நிகழ்ச்சித்திட்டம் | தொடர் | வருடத்தில் நடாத்தப்பட்ட பரீட்சைகளின் எண்ணிக்கை | சித்தியடைந்தோர் % |
|---|---|---|---|
| மூலதனச் சந்தை சான்றிதழ் பாடநெறி (QF1) | உரித்துவப் பிணையங்கள் | 6 | 80 |
| | கடன் பிணையங்கள் | 6 | 96 |
| | பிணையங்கள் முறைமைப்படுத்தல், நெறிமுறை மற்றும் சந்தைப்படுத்தல் | 7 | 88 |
| மூலதனச் சந்தை சான்றிதழ் பாடநெறி (QF2) | பிணையங்கள் சந்தைகள் மற்றும் முதலீட்டுக் கருவிகள் | 1 | 94 |
| | உரித்துவப் பிணையங்கள் | 1 | 63 |
| | கடன் பிணையங்கள் | 1 | 86 |
| | நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகள் | 1 | 100 |
| பதிவீடளிக்கப்பட்ட முதலீட்டு ஆலோசகர் | பொருத்தமற்றது | 3 | 89 |

## மூலதனச் சந்தைகளில் டிப்ளோமா (மூ.ச.டி.)

இவ்வருடத்தில் இ.பி.ப.ஆ. மூ.ச.டி. நிகழ்ச்சித்திட்டத்தினை தொடர்ச்சியாக நிர்வகித்ததுடன், இது ஐக்கிய இராச்சியத்தின் பிணையங்கள் மற்றும் முதலீடுகளுக்கான பட்டய நிருவகத்துடன் (பி.மு.ப.நி.) கூட்டாக மேற்கொள்ளப்படுகின்றது. ஓர் புதிய வகுப்பினர் (13ஆவது வகுப்பினர் ) இவ்வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன் 12 ஆவது வகுப்பினருக்கான விரிவுரைகள் நிறைவடைந்துள்ளன.

## தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் (தொ.தொ.அ.நி.)

மீளாய்வாண்டில், உள்ளூர் மற்றும் உலகளாவிய மூலதனச் சந்தைகளின் நவீன போக்குகளுடன் தங்களை இற்றைப்படுத்துவதற்கும் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்வதற்கும் இயலுமையாக்கும் பொருட்டு பங்குத் தரகு நிறுவனங்களில் நடைமுறையிலுள்ள முதலீட்டு ஆலோசகர்களுக்கு ஆறு (6) தொ.தொ.அ.நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. இந்த ஆறு (6) நிகழ்ச்சித்திட்டங்களினுள், முதலீட்டு ஆலோசகர்கள் தங்களது பழைய தகமைக் கட்டமைப்பிலிருந்து திருத்தியமைக்கப்பட்ட தகமைக் கட்டமைக்கப்பிற்கு மாற்றல் செய்வதற்காக மூன்று (3) கட்டாயமாக்கப்பட்டன. இந்நிகழ்ச்சித்திட்டங்கள் 900 க்கும் அதிகமான பங்குபற்றுனர்களை கவர்ந்ததுடன், இவை பங்குத் தரகு நிறுவனங்களின் பிரதம நிறைவேற்று அதிகாரிகள், முதலீட்டு ஆலோசகர்கள் மற்றும் பகுப்பாய்வாளர்களை உள்ளடக்கியிருந்தன.

நடைமுறையிலுள்ள முதலீட்டு ஆலோசகர்கள் அடுத்து வரும் வருடத்தில் தமது ப.மு.ஆ. தரத்தினை புதுப்பிப்பதற்காக 4 தொ.தொ.அ.நி. இல் பங்கேற்றுதல் வேண்டும் என்பதனை இ.பி.ப.ஆ. கட்டாயமாக்கியுள்ளது. (உருவம் 18)

உருவம் 18 : தொ.தொ.அ. நிகழ்ச்சித்திட்டங்களின சுருக்கம் - 2019

| தொ.தொ.அ.நி. இன் தலைப்பு | பங்குபற்றியோரது எண்ணிக்கை |
|---|---|
| முதலீட்டு ஆலோசகர்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கான கூட்டாண்மை ஆளுகையின் முக்கியத்துவம், விசேட கவனம் பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் கூட்டாண்மை ஆளுகை நியமத்திற்கு செலுத்தப்பட்டது | 189 |
| பிணையங்கள் சந்தைகள் மற்றும் முதலீட்டுக் கருவிகள் | 192 |
| எல்லைக் கடன் வர்த்தகத்திலான முறைமைப்படுத்தல் அமைப்பின் நடைமுறை தோற்றுருவம் | 104 |
| நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகள் | 144 |
| இலங்கையில் மூலதனச் சந்தையின் எதிர்காலம் மற்றும் கடன் தரப்படுத்தலின் பங்களிப்பு | 107 |
| நிதியியல் ஆலோசனை மற்றும் திட்டமிடல் | 205 |

## முதலீடு செய்வதிலான நிகழ்ச்சித்திட்டங்கள்

சாத்தியப்படக்கூடிய முதலீட்டாளர்களுக்கு பங்கு வர்த்தகத்தின் அடிப்படை கொள்கைவழி மற்றும் நடைமுறை தோற்றுருவத்தினை வழங்குவதற்காக இவ்வருடத்தில் ஆறு கிழமைகள் இடம்பெறும் நான்கு (4) ஆங்கிலமொழி மூல நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. இவ்வாண்டில் இந்நிகழ்ச்சித்திட்டங்களுக்கு 173 பங்குபற்றுனர்கள் பதிவுசெய்திருந்தார்கள்.

## முதலீடு செய்வதில் மேம்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம்

நடைமுறையிலுள்ள முதலீட்டாளர்களுக்கு பங்கு வர்த்தகத்தில் மேம்படுத்தப்பட்ட கொள்கைவழி மற்றும் நடைமுறை தோற்றுருவத்தினை வழங்கும் நோக்கில் மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டம் ஆங்கில மொழியில் நடாத்தப்பட்டது. இவ்வருடத்தில் இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கு 49 பங்குபற்றுனர்கள் பதிவுசெய்திருந்தார்கள்.

## தங்கப் பதக்கம் மற்றும் பணக்கொடைத் திட்டம்

பல்கலைக்கழகங்களில் மூலதனச் சந்தை தொடர்பான பாடங்களைப் பல்கலைக்கழக மாணவர்கள் கற்பதனை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட தங்கப் பதக்கம் மற்றும் பணக்கொடைத் திட்டத்தினை நாம் தொடர்ந்தோம். இத்திட்டத்தின் கீழ் இலங்கையிலுள்ள தேசிய பல்கலைக்கழகங்களில் மூலதனச் சந்தைப் பிரிவுகளில் மிகச்சிறந்து விளங்கும் பல்கலைக்கழக மாணவனுக்கு தங்கப் பதக்கம் மற்றும் பணப் பரிசு வழங்கப்படுகின்றது. மேற்கூறப்பட்ட திட்டம் தொடர்பாக பதினொரு (11) தேசிய பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (பு.ஒ.) கைச்சாத்திடப்பட்டன.

2019 ஆம் ஆண்டில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேசிய பல்கலைக்கழகங்களுக்கு தங்கப் பதக்கங்கள் மற்றும் பணப் பரிசில்கள் என்பன வழங்கப்பட்டன.

- களனிப் பல்கலைக்கழகம்
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
- இலங்கையின் வயம்ப பல்கலைக்கழகம்
- ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
- இலங்கையின் ரஜரட்ட பல்கலைககழகம்
- ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
- இலங்கையின் கிழக்குப் பல்கலைக்கழகம்
- ருஹுனு பல்கலைக்கழகம்

## விருது வழங்கல் வைபவம்

மூ.ச.சா., ப.மு.ஆ., மூ.ச.டி. மற்றும் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சியில் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றை வெற்றிகரமாக நிறைவுசெய்த மாணவர்களுக்கு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 2019 பெப்ரவரி 13 ஆந் திகதி 5ஆவது சான்றிதழ் மற்றும் டிப்ளோமா விருதுகள் பரிசளிக்கும் வைபவம் இடம்பெற்றது.

மிகவும் ஆவலுடன் காத்திருந்த இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி அவர்கள் கலந்துகொண்டதுடன் 100 மாணவர்களுக்கும் அதிகமானோர் விருதுகளைப் பெற்றுக்கொண்டார்கள். ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்,

# செயற்பாட்டு மீளாய்வு

இ.பி.ப.ஆ. இன் சிரேஷ்ட முகாமைத்துவம், கொ.ப.ப.இன் சிரேஷ்ட முகாமைத்துவம், பங்குத் தரகர்கள், நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சித்துறை உத்தியோகத்தர்கள் மற்றும் பிரசித்திபெற்ற விருந்தினர்கள் இந்நிகழ்வினை பார்வையிட்டார்கள்.

### மூலதனச் சந்தை தகவல் மையம் (மூ.ச.த.மை.)

கல்விமான்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஓர் இலத்திரணியல் கற்கை சூழலூடாக மூலதனச் சந்தை தகவல்கள், தரவுகள் மற்றும் ஏனைய கல்விக் கருவிகளை நாம் வழங்குவதற்கு எதிர்பார்ப்பதன் நிமித்தம் மூ.ச.த.மை. தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்படுகின்றது. மூ.ச.த.மை. யத்தினூடாக இம்மாணவர்கள் மூலதனச் சந்தை பகுப்பாய்வில் தங்களது புரிந்துணர்வினை மேம்படுத்திக்கொள்வதுடன் முதலீடு செய்வதில் தங்களது அறிவினை இற்றைப்படுத்திக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### மூலதனச் சந்தை விழிப்புணர்வு மற்றும் வெளிவாரி உறவுகள்

மக்களது நிதியியல் திறனை மேம்படுத்துவதற்காகவும் அவர்கள் நன்கு தகவலறிந்த முதலீட்டு தீர்மானங்களை மேற்கொள்வதற்காகவும் இ.பி.ப.ஆ. பல்வேறு குழுக்களை இலக்குவைத்து முதலீட்டாளர் கல்வி முன்னெடுப்புகளை வடிவமைத்து வழங்குகின்றது. எமது நிகழ்ச்சித்திட்டங்கள் பல்வேறு சபையோரை எட்டுவதனை நோக்காகக் கொண்டதுடன் நாம் கருத்தரங்குகள், செயலமர்வுகள், எண்மின் நிலை உபாயங்கள் மற்றும் பிரசுரங்கள் உள்ளடங்களான பல்வேறு நுணக்கமுறைகளை பயன்படுத்துகின்றோம்.

### கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் ஊடான விழிப்புணர்வு

எமது விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் சாத்தியப்படக்கூடிய மற்றும் நடைமுறையிலுள்ள முதலீட்டாளர்களை முதலிடுவதற்காக அவர்களது விருப்பமான வழியாக மூலதனச் சந்தையினை தெரிவு செய்வதனை ஊக்குவிப்பதில் கவனஞ் செலுத்தியது. இவ்வாண்டில், நாம் நாடு பூராவும் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொது மக்களுக்கு நிதியியல் கல்விக் கருத்தரங்குகள் /செயலமர்வுகளை நடாத்தினோம். இந்நிகழ்ச்சித்திட்டங்களின் சுருக்கம் பின்வருமாறு: (உருவம் 19)

உருவம் 19 : விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

| நிகழ்ச்சித்திட்டத்தின் வகை | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கல்வி அமைச்சுடனான ஆசிரியர்கள் பயிற்றுவித்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் (மூன்று மொழிகளிலும்) | 07 |
| பாடசாலை கருத்தரங்குகள் (உயர்தர மாணவர்கள் ) (மூன்று மொழிகளிலும்) | 13 |
| பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் | 06 |
| சாத்தியப்படக்கூடிய பட்டியலிடப்படக்கூடிய கம்னிகளுக்கான இ.பி.ப.ஆ./கொ.ப.ப. சி.ந.மு. மன்றங்கள் (வலுவளித்தல் பலகையினை ஊக்குவிப்பதற்காக) | 05 |
| இ.பி.ப.ஆ. /கொ.ப.ப. பாரிய முதலீட்டாளர்களுக்கான கருத்தரங்கு | 04 |
| கொ.ப.ப. நான்கு பகுதி செயலமர்வுகள் | 01 |

### பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள்

மீளாய்வாண்டில், நாடு பூராவும் பல்வேறு கருத்தரங்குகள் மற்றம் செயலமர்வுகள் நடாத்துவதன் மூலம் பாடசாலை மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களிடையே நிதியியல் அறிவினை மேம்படுத்தல் மற்றும் அதற்கு வசதியளித்தல் என்பவற்றை இ.பி.ப.ஆ. தொடர்ந்தது.

இ.பி.ப.ஆ. இன் கடப்பாடான நிதியியல் கல்வியினை வழங்குதல், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடையே திடமான நிதியியல் அறிவினை வழங்குவதன் மூலம் பாடசாலை மட்டத்திலிருந்து ஆரம்பமாகின்றது. இதற்கும் மேலாக, மூலதனச் சந்தை பாடமானது தற்போது க.பொ.த.(சாதாரண தரம் ) இற்கான வணிகம் மற்றும் கணக்கீட்டுக் கல்வி பாடத்திட்டம் மற்றும் க.பொ.த. (உயர் தரம் ) இற்கான வணிகக் கல்வி பாடத்திட்டம் ஆகியவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளதனால், இ.பி.ப.ஆ. அதன் மூலதனச் சந்தை விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் பாடசாலை பாடத்திட்டங்களின் பொருளடக்கங்களை உள்ளடக்குவதனை உறுதிசெய்கின்றது. இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் பிராந்திய கல்விப் பணிப்பாளர்களது உறுதுணையுடன் நடாத்தப்படுகின்றன.

அனைத்து தேசிய பல்கலைக்கழகங்களின் முகாமைத்துவம், கணக்கியல், வர்த்தகம் மற்றும் பொருளியல் பீடங்களுடன் இணைந்து இ.பி.ப.ஆ. பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களை கற்பிப்பதற்காக கிரமமான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது.

பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் 06 பல்கலைக்கழகங்களில் நடாத்தப்பட்டன.

### (ஒத்திசைவான, திறந்த, பதிலளிக்கக்கூடிய மற்றும் பயனுறுதியுள்ள) ஒ.தி.ப.ப. நீதி நிகழ்ச்சித்திட்டம்

இலங்கையின் சட்டத் தொழில்துறையின் ஆளுகை, தகைமைகள் மற்றும் வேறுபாடு என்பவற்றை மேம்படுத்துவதற்காக தேசிய பல்கலைக்கழகங்கள் மற்றும் இலங்கை சட்டக் கல்லூரி என்பவற்றின் தெரிவுசெய்யப்பட்ட பெண் சட்ட மாணவிகளுக்கான உள்ளூர்மயமாக்கப்பட்ட கற்கை சுற்றுலாவிற்கு இ.பி.ப.ஆ. வசதியளித்தது. USAID உடன் ஒன்றிணைந்து நடாத்தப்பட்ட இந்நிகழ்ச்சித்திட்டமானது இ.பி.ப.ஆ. போன்ற நிறுவனங்களது (கற்கையின் மையமாக முக்கிய நிறுவனங்களில் தெரிவு செய்யப்பட்ட ஒன்றாக இ.பி.ப.ஆ. காணப்பட்டது) தொழிற்பாடுகளை பார்வையிடுவதற்கு மாணவர்களுக்கு அதிகாரமளிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டதுடன் சட்டத் துறையில் காணப்படக்கூடிய பல்வேறு வேலை வாய்ப்புக்களில் ஓர் புரிந்துணர்வினையும் பெற்றுக்கொள்வதற்காகும்.

### பிராந்திய முதலீட்டு மன்றங்கள்

இ.பி.ப.ஆ. வும் கொ.ப.ப. உம் “கொடஸ் வெலந்த பொல: நகரயென் நகரயட்ட” எனத் தலைப்பிட்ட

இந்தச் செயலமர்வுகள், பிணையங்கள் சந்தையில் கிடைக்கக்கூடிய பல்வகையான முதலீட்டுக் கருவிகளில் அறிவினை

புகுத்தும் நிதியியல் அறிவினை மேம்படுத்தும், செல்வ உருவாக்கத்தினை அதிகரிக்கும் மற்றும் முதலீட்டாளர்கள் மோசடிகளுக்குள் கவரப்பட்டு அவற்றை நாடுவதை குறைப்பதனையும் நோக்காகக் கொண்டு நடாத்தப்பட்டன.

இந்த பிராந்திய மன்றங்களில் தொழில்வல்லுநர்கள், முயற்சியாளர்கள், கல்விமான்கள் ஆகியோரிடமிருந்து சுறுசுறுப்பான பங்குபற்றலை காணக்கூடியதாயிருந்து. இவ்வருடத்தில் இம்மன்றங்கள் நடாத்தப்பட்ட இடங்கள் பின்வருமாறு: (உருவம் 20)

பிராந்திய முதலீட்டாளர் மன்றங்கள்:
உருவம 20

| திகதி | இடம் |
|---|---|
| 23 மார்ச் 2019 | மாத்தறை |
| 22 ஜூன் 2019 | யாழ்ப்பாணம் |
| 07 செப்டம்பர் 2019 | திஸ்ஸமஹாராம |
| 21 செப்டம்பர் 2019 | பொலன்நறுவ |

பங்குபற்றுநர்களுக்கு பங்குத்தரகர்கள் மற்றும் நம்பிக்கை அலகுப்பொறுப்பாட்சி முகாமைத்துவ கம்பனிகளுடன் ஊடாடி அவர்களிடமிருந்து பெறுமதிமிக்க முதலீட்டு ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு வழங்கப்பட்டது. இம்மன்றங்களில் பங்குகளில் முதலீடு செய்வது பற்றிய பல்வேறு தோற்றங்களில் துறையின் பிரசித்திபெற்ற நபர்களினால் சிறப்புக் காட்சிப்படுத்தல்கள் மற்றும் குழு விவாதங்கள் என்பவையும் இடம்பெற்றன.

### சிறிய - நடுத்தர நிறுவனங்களது (சி.ந.நி.) மன்றங்கள்

ஜூலை 2018 இல் இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. ஆல் ஆரம்பித்துவைக்கப்பட்ட "வலுவூட்டல் பலகையினை" தொடர்ந்து சி.ந.நி. மன்றங்கள் நாடுபூராவும் நடாத்தப்பட்டன. இவை சி.ந.நி. க்கு வலுவூட்டல் பலகை பற்றி மேலும் கற்றுக்கொள்வதற்கும் அதிக மூலதனத்தினை திரட்டிக்கொள்வதன் மூலம் அவர்களது வியாபாரத்தினை விரிவாக்குவதற்கும் வாய்ப்பினை வழங்குவதனூடாக சி.ந.நி. க்கு வலுவூட்டும் நோக்கினைக் கொண்டதாகும்.

இப்புதிய பட்டியலிடல் மேடையில் மூலதனத்தினை திரட்டுவதில் சபையினருக்கு எழக்கூடிய அக்கறைகளை தீர்ப்பதற்காக கொ.ப.ப., இ.பி.ப.ஆ. மற்றும் பட்டியலிடப்பட்ட கம்பனிகளிலிருந்து துறைசார் வல்லுநர்களது பங்களிப்புடனான குழு விவாதங்களையும் உள்ளடக்கியிருந்தது. 2019 இல் நடாத்தப்பட்ட சி.ந.நி. மன்றங்கள் பின்வருமாறு: (உருவம் 21)

உருவம் 21 : சி.ந.நி. மன்றங்கள்

| திகதி | இடம் |
|---|---|
| 28 ஜூன் 2019 | கண்டி |
| 24 ஆகஸ்ட் 2019 | யாழ்ப்பாணம் |
| 06 செப்டம்பர் 2019 | மாத்தறை |
| 20 செப்டம்பர் 2019 | பொலன்நறுவ |
| 21 செப்டம்பர் 2019 | மட்டக்களப்பு |

### பங்காளிகள் மன்றங்கள்

#### பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகளுக்கான மன்றம்

- இந்நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளராக கீழ் காண்பவர்கள் பதவி வழி நியமனம் பெற்றுள்ளனர். இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவர், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் தலைவர், திறைசேரிப் பிரதிச் செயலாளர்,இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் பணிப்பாளர் நாயகம்.
- இலங்கை அரசாங்கமானது இந்த நிதியத்தினை உருவாக்குவதற்கு 50 மில்லியன் ரூபாயைக் கொண்ட தொகையை வழங்கியுள்ளது. இப்பணத்தொகையானது அரசாங்கப் பிணையங்களிலும் நிலையான வைப்புகளிலும் முதலீடு செய்யப்பட்டுள்ளது. தீர்ப்பனவு உத்தரவாத நிதியமானது மீள் நிறைவாக்கல்களாக நன்கொடைகள், கொடைகள், தரும சாதனங்கள் போன்றவற்றைக்கூடப் பெற்றுக்கொள்ள முடியும். தற்போது தரகர்களும் காப்பக வங்கிகளும் இந்நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்யுமாறு வேண்டப்படுவதில்லை.
- இந்நிதியத்தினைப் பலப்படுத்தும்பொருட்டு தீர்வை நிதியத்திலிருந்து ரூபா 100 மில்லியன் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் தலா ரூபா 50 மில்லியன் வீதம் இந்நிதியத்திற்கு மாற்றல் செய்யப்பட்டது. கொ.ப.பரிவர்த்தனையும் ஜனவரி 2012 இல் இந்நிதியத்திற்கு ரூபா 100 மில்லியனை, தீ.உ.நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்புறுதியில் இத்தகைய பெறுகைகளுக்கு வசதியளிக்கும் திருத்தங்களை மேற்கொண்டதன் பின்னர் மாற்றல் செய்தது.

எவ்வாறாயினும் தீ.உ.நி. ஆனது தீர்ப்பனவு இடர்நேர்கையை முறையாகத் தீர்ப்பதற்கு போதாததாகக் காணப்படுவதனால் இ.பி.ப.ஆ. இத் தீர்ப்பனவு இடர்நேர்கையை பயனுள்ள விதத்தில் சந்திக்கத்தக்க ஒரு மத்திய தீர்வக கூட்டுத்தாபனத்தை (ம.தீ.கூ.) நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இந்நிதியம் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து தீ.உ.நி. இலிருந்து எவ்வித உரிமைகோரல்களும் இடம்பெறவில்லை.

# செயற்பாட்டு மீளாய்வு

2019 ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆந் திகதியில் இந்நிதியத்தின் வரவில் உள்ள மீதி ரூபா 942,902,878/= ஆகும். 2010 முதல் 2018 வரையான காலப்பகுதியில் தீ.உ.நிதியத்தின் வளர்ச்சியானது கீழே காண்பிக்கப்பட்டுள்ளது. (உருவம் 31)

**உருவம் 31: தீ.உ.நிதியம்**

(ரூபா மில்லியன்)



# மேலதிகத் தகவல்கள்

**உரிமமளிக்கப்பட்ட பங்குப் பரிவர்த்தனை**

கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

**உரிமமளிக்கப்பட்ட பங்குத் தரகர்கள்**

1. எக்யூட்டி ஸ்டொக்புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
2. ஆஷா பிலிப்ஸ் செக்கியூரிட்டீஸ் லிமிட்டட்
3. ஏசியா செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
4. எசட்லைன் செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
5. பார்ட்லீட் ரெலிகெயார் செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
6. கென்டோர் ஈக்கியூட்டீஸ் லிமிட்டட்
7. கெப்பிட்டல் எலாயன்ஸ் லிமிட்டட் (கடன் பிணையங்கள்)
8. கெப்பிட்டல் எலாயன்ஸ் செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
9. கெப்பிட்டல் ட்ரஸ்ட் செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
10. சிடி சி எல் எஸ் ஏ செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
11. என்டர்பிரைஸ் சிலோன் கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட்
12. வெர்ஸ்ட் கெப்பிட்டல் ஈக்யூட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
13. வெர்ஸ்ட் கார்டியன் ஈக்யூட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
14. ஜே பி செக்கியூரிட்டீஸே (பிரைவேட்) லிமிட்டட்
15. ஜோன் கீல்ஸ் ஸ்டொக்புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
16. லங்கா செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
17. எல் ஓ எல் சி செக்கியூரிட்டீஸ் லிமிட்டட்
18. நவாரா செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்ழு
19. என் டி பி செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
20. என் எஸ் பி வன்ட் மெனேஜ்மன்ட் கொம்பனி லிமிட்டட் (கடன் பிணையங்கள்)
21. ரிச்சர்ட் பீரிஸ் செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
22. எஸ் சி செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
23. எஸ் எம் பி செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
24. சொவ்ட்லொஜிக் ஸ்டொக்புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
25. சமர்வில் ஸ்டொக்புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
26. டெப்ரோபேர்ன் செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
27. டி கே எஸ் செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட் *
28. வெல்த் ட்ரஸ்ட் செக்கியூரிட்டீஸ் லிமிட்டட் (கடன் பிணையங்கள்)

*வியாபார செயற்பாடுகளை செயலற்றதாக்கும் செயல்முறையில் உள்ளது.

**உரிமமளிக்கப்பட்ட பங்கு வர்த்தகர்கள்**

1. ஏசியா செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
2. பார்ட்லீட் ரெலிகெயார் செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட் (கடன் பிணையங்கள்)
3. கெப்பிட்டல் எலாயன்ஸ் லிமிட்டட் (கடன் பிணையங்கள்)
4. என்டர்பிரைஸ் சிலோன் கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட்
5. ஜே பி செக்கியூரிட்டீஸே (பிரைவேட்) லிமிட்டட்
6. என் டி பி செக்கியூரிட்டீஸ் (பிரைவேட் லிமிட்டட்
7. என் எஸ் பி வன்ட் மெனேஜ்மன்ட் கொம்பனி லிமிட்டட்
8. செலான் பேங்க் பி எல் சி (கடன் பிணையங்கள்
9. எஸ் எம் பி செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட் (கடன் பிணையங்கள்)
10. சொவ்ட்லொஜிக் ஸ்டொக்புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
11. வெல்த் ட்ரஸ்ட் செக்கியூரிட்டீஸ் லிமிட்டட் (கடன் பிணையங்கள்)

**உரிமமளிக்கப்பட்ட நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளின் முகாமைத்துவக் கம்பனிகள்**

1. சிலோன் எஸட் மெனேஜ்மன்ட் கம்பனி லிமிட்டெட்

- சிலோன் டொலர் பொன்ட் வன்ட்
- சிலோன் வைனான்சியல் செக்டர் வன்ட்
- சிலோன் கிள்ட் எட்ஜ் வன்ட்
- சிலோன் இன்கம் வன்ட்
- சிலோன் இன்டெக்ஸ் வன்ட்
- சிலோன் ஐபிஓ வன்ட்
- சிலோன் மணி மார்க்கட் வன்ட்
- சிலோன் டுஹறிசம் வன்ட்
- சிலோன் டிரசரி இன்கம் வன்ட

2. கொம்ட்ரஸ்ட் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டெட்

- கொம்ரஸ்ட் அடல் முதாரபஹா வன்ட்
- கொம்ரஸ்ட் இக்யுடி வன்ட்
- கொம்ரஸ்ட் கில்ட் எட்ஜ்ட் வன்ட்
- கொம்ரஸ்ட் மணி மார்க்கட் வன்ட்

3. என்டிபி வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டெட்

- என்டிபி வெல்த் கில்ட் எட்ஜ்ட் வன்ட்
- என்டிபி வெல்த் குரோத் அன்ட் இன்கம் வன்ட்
- என்டிபி வெல்த் குரோத் வன்ட்
- என்டிபி வெல்த் இன்கம் வன்ட்
- என்டிபி வெல்த் இன்கம் ப்ளஸ் வன்ட்
- என்டிபி வெல்த் இஸ்லாமிக் மணி பிளஸ் வன்ட்
- என்டிபி வெல்த் மணி வன்ட்
- என்டிபி வெல்த் மணி பிளஸ் வன்ட்

4. சீ பேங்க் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டெட்

- சீபேங்க் சென்சரி குரோத் வன்ட்
- சீபேங்க் கில்ட் எட்ஜட் வன்ட் (ஏ சீரீஸ்)
- சீபேங்க் கில்ட் எட்ஜட் வன்ட் (பி சீரீஸ்)
- சீபேங்க் ஐ ஹீல்ட் வன்ட்
- சீபேங்க் சேவிங்ஸ் ப்ளஸ் மணி மார்க்கட் வன்ட்
- சீபேங்க் சுரகும் கிள்ட் எட்ஜ் வன்ட்
- சீபேங்க் யுனிட் ட்ரஸ்ட் வன்ட்

5. நெஷனல் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டெட்

- நாமல் குரோத் வன்ட்
- நாமல் ஐ ஹீல்ட் வன்ட்
- நாமல் இன்கம் வன்ட்
- நாமல் மணி மார்க்கட் வன்ட்
- நெஷனல் இக்யுடி வன்ட்
- நாமல் கில்ட் வன்ட்
- நாமல் பேங் வன்ட்

# மேலதிகத் தகவல்கள்

6. வெர்ஸ்ட் கெப்பிட்டல் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டெட்
- வெர்ஸ்ட் கெப்பிட்டல் ஈக்யுட்டி வன்ட்
- வெர்ஸ்ட் கெப்பிட்டல் விக்ஸ்ட் இன்கம் வன்ட்
- வெர்ஸ்ட் கெப்பிட்டல் கில்ட் எட்ஜட் வன்ட்
- வெர்ஸ்ட் கெப்பிட்டல் மணி மார்க்கட் வன்ட்
- வெர்ஸ்ட் கெப்பிட்டல் வெல்த் வன்ட்

7. ஜே பி வைனான்சியல் (பிரைவேட்) லிமிட்டட்
- ஜே பி வான்டேஜ் மணி மார்க்கட் வன்ட்
- ஜே பி வான்டேஜ் சோர்ட் டேர்ம் கிள்ட் வன்ட்
- ஜே பி வான்டேஜ் வெலியூ ஈக்யுட்டி வன்ட்

8. கார்டியன் எக்யூட்டி எசட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
- கார்டியன் எக்யூட்டி ஈக்யுட்டி வன்ட்
- கார்டியன் எக்யூட்டி மணி மார்க்கட் வன்ட்
- கார்டியன் எக்யூட்டி மணி மார்க்கட் கிள்ட் வன்ட்

9. கென்டோர் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
- கென்டோர் குரோத் வன்ட்
- கென்டோர் மணி மார்க்கட் வன்ட்
- கென்டோர் ஒபர்டியுனிட்டிஸ் வன்ட்
- அமானா கென்டோர் ஷாரியா பெலன்ஸ்ட் வன்ட்
- அமானா கென்டோர் ஷாரியா இன்கம் வன்ட்

10. எசட் ட்ரஸ்ட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
- எஸ்ட்ரூ அல்பா வன்ட்

11. கெப்பிட்டல் எலாயன்ஸ் இன்வெஸ்ட்மன்ட் லிமிட்டட்
- கெல் பெலன்ஸ்ட் வன்ட்
- கெல் கோர்ப்பரேட் டெட் அன்ட் கிள்ட் டிரேடிங் வன்ட்
- கெல் கோர்ப்பரேட் ட்ரஸரி வன்ட்
- கெல் கிள்ட் வன்ட்
- கெல் கிள்ட் மணி மார்க்கட் வன்ட்
- கெல் கிள்ட் ட்ரேடிங் வன்ட்
- கெல் ஐ ஹீல்ட் வன்ட்
- கெல் இன்கம் வன்ட்
- கெல் இன்வெஸ்ட்மன்ட் கிரேட் வன்ட்
- கெல் மீடியம் ரிஸ்க் வன்ட்
- கெல் குவான்டிடேடிவ் இக்யுடி வன்ட்

12. ஆர்பிக்கோ ஹடரக்ஷியா எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
- ஆர்பிக்கோ ஹடரக்ஷியா கேஷ் மெனேஜ்மன்ட் ட்ரஸ்ட் வன்ட்
- ஆர்பிக்கோ ஹடரக்ஷியா எஸ் அன்ட் பி எஸ் எல் 20 இன்டெக்ஸ் வன்ட்
- ஆர்பிக்கோ ஹடரக்ஷியா ரிபோ இன்வெஸ்ட்மன்ட் வன்ட்
- ஆர்பிக்கோ ஹடரக்ஷியா ஸ்ரீலங்கா பொன்ட் வன்ட்

13. பிரீமியர் வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
- பிரீமியர் க்ரோத் வன்ட்
- பிரீமியர் மணி மார்க்கட் வன்ட்

14. எஸட்லைன் கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட்
- எஸட்லைன் இன்கம் வன்ட்
- எஸட்லைன் இன்கம் ப்ளஸ் க்ரோத் வன்ட

| கம்பனி | முதலீட்டு முகாமையாளர்கள் | எல்லை வழங்குநர்கள் | ஒப்புரவாளர்கள் |
|---|---|---|---|
| எக்யூட்டி பார்ட்னர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் | | √ | |
| அதெல் ஈக்யுட்டீஸ் லிமிட்டட் | | √ | |
| அமானா எஸட் லிமிட்டட் ** | √ | | |
| ஆஷா வைனான்சியல் சேர்விசஸ் லிமிட்டட் | | √ | |
| ஏசியா செக்கியுரிட்டீஸ் வெல்த் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட் | √ | | |
| எஸட் ட்ரஸ்ட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட் | √ | | |
| எஸட்லைன் கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட் | √ | | |
| எஸட்லைன் லீசிங் கம்பனி லிமிட்டட் | | √ | |
| இலங்கை வங்கி | | √ | |
| பான்சாய் செக்கியுரிட்டீஸ் கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட் | | √ | √ |
| பாட்லீட் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட் | √ | | |
| கென்டோர் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட் | √ | | |
| கெப்பிட்டல் எலாயன்ஸ் இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிட்டெட் | √ | | |
| கெப்பிட்டல் ட்ரஸட் கிரடிட் (பிரைவேட்) லிமிட்டெட் | | √ | |
| சீபேங் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் | √ | | |
| சிட்டிஸன் டெவலப்மன்ட் பிஸினஸ் வைனான்ஸ் பி.எல்.சி. | | √ | |
| கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பி.எல்.சி | | √ | √ |

| கம்பனி | முதலீட்டு முகாமையாளர்கள் | எல்லை வழங்குநர்கள் | ஒப்புரவாளர்கள் |
|---|---|---|---|
| கொம்ட்ரஸ்ட் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட் | √ | | |
| டீஎவ்சிசி பேங்க் பி.எல்.சி. | | √ | √ |
| டயளொக் வைனான்ஸ் பி.எல்.சி. (முன்னால் கொழும்பு ட்ரஸ்ட் வைனான்ஸ் பி.எல்.சி.) | | √ | |
| வெஸ்ட் கெப்பிட்டல் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் | √ | | |
| வெஸ்ட் கெப்பிட்டல் மார்க்கட்ஸ் லிமிட்டெட் | | √ | |
| கார்டியன் எக்யூட்டி எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் | √ | | |
| கார்டியன் வன்ட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் | √ | | |
| ஹட்டன் நஷனல் பேங்க் பி.எல்.சி. | | √ | √ |
| இனோவெஸ்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் | √ | | |
| ஜேபி வைனான்சியல் (பிரைவேட்) லிமிட்டட் | √ | | |
| ஜேபி கிரடிட்(பிரைவேட்) லிமிட்டட் | | √ | |
| எல்பி வைனான்ஸ் பி.எல்.சி. | | √ | |
| எல்.ஓ.எல்.சி. வைனான்ஸ் பி.எல்.சி. | | √ | |
| லீனியர் வெல்த் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட் | √ | | |
| மேர்ச்சன்ட் பேங்க் ஒப் ஸ்ரீலங்கா அன்ட் வைனான்ஸ் பி.எல்.சி. | √ | √ | √ |
| நேஷன் லங்கா கெப்பிட்டல் லிமிட்டட் | | √ | |
| நெஷனல் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் | √ | | |
| நெஷனல் டெவலப்மன்ட் பேங்க் பி.எல்.சி. | | √ | |
| நெஷனல் வெல்த் கோர்ப்பரேஷன் லிமிட்டட் | √ | | |
| என் டி பி கெப்பிட்டல் ஹோல்டிங்ஸ் லிமிட்டட் | | | √ |
| என் டி பி வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டட் | √ | | |
| ஒராயன் வன்ட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட் | √ | | |
| பேன் ஏசியா பேங்கிங் கோபரேஷன் பி.எல்.சி. | | √ | |
| பீப்பல்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பி.எல்.சி. | | √ | |
| பீப்பல்ஸ் மேர்ச்சன்ட் வைனான்ஸ் பி.எல்.சி. | | √ | |
| பிரீமியர் வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டட் | √ | | |
| ரிச்சர்ட் பீரிஸ் வைனான்சியல் சேர்விஸஸ் (பிரைவேட்) லிமிட்டட் | | √ | |
| சம்பத் பேங்க் பி.எல்.சி | | √ | √ |
| செலான் பேங்க் பி.எல்.சி. | | √ | |
| சொவ்ட்லொஜிக் கெப்பிட்டல் பி.எல்.சி. | √ | | |
| யூனியன் பேங்க் ஒவ் கொழும்பு பி.எல்.சி. | | √ | |
| வோல்டொக் மெகென்ஸி லிமிட்டெட் | √ | √ | |

### தீர்வக இல்லம் எனும் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட சந்தை இடையீட்டாளர்:

- சென்ரல் டிபொசிடரி சிஸ்டம்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்

### கடன் தரப்படுத்தல் முகவர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட சந்தை இடையீட்டாளர்:

- விச் ரேடிங்ஸ் லங்கா லிமிட்டெட்
- ஐசிஆர்ஏ லங்கா லிமிட்டெட்

** அமானா எஸட் லிமிட்டட்டின் முதலீட்டாளர்களது தீர்ப்பனவினை இயலுமையாக்குவதற்காக பதிவீடு புதுப்பிக்கப்பட்டது. கம்பனியானது புதிய வாடிக்கையாளர்களையோ அல்லது முதலீடுகளையோ பெற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

# மேலதிகத் தகவல்கள்

| ஆண்டு | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|---|---|---|
| வருடாந்தப் புரள்வு (ரூ.மில்) பங்குகள் | 340,917 | 253,251 | 176,935 | 220,591 | 200,069 | 171,408 |
| உள்ளூர் (ரூ.மில்.) | 246,796 | 166,151 | 102,544 | 117,135 | 111,378 | 109,003 |
| வெளியூர் (ரூ.மில்) | 94,120 | 87,099 | 74,391 | 103,456 | 88,691 | 62,405 |
| சந்தை நாட்கள் (எண்ணிக்கை) | 241 | 239 | 240 | 241 | 240 | 241 |
| தினசரி சராசரிப் புரள்வு (ரூ.மில்.) பங்குகள் | 1,414 | 1,059.6 | 737.2 | 915.3 | 834 | 711 |
| வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகள் (எண். மில்.) | 16,722 | 9,414 | 7,196 | 8,468 | 6,001 | 9,855 |
| உள்ளூர் (எண்.மில்.) | 14,726 | 7,693 | 5,776 | 6,529 | 4,821 | 7,091 |
| வெளியூர் (எண்.மில்) | 1,995 | 1,721 | 1,420 | 1,939 | 1,180 | 2,764 |
| வர்த்தகங்கள் (எண்ணிக்கை) பங்குகள் | 1,982,709 | 1,506,790 | 1,056,849 | 981,977 | 885,657 | 1,197,205 |
| உள்ளூர் (எண்ணிக்கை) | 1,899,569 | 1,431,750 | 1,002,476 | 928,276 | 838,784 | 1,150,486 |
| வெளியூர் (எண்ணிக்கை) | 83,140 | 75,040 | 54,373 | 53,701 | 46,873 | 46,719 |
| புதிய பட்டியலிடல்கள் (எண்ணிக்கை) | 7 | 5 | 4 | 3 | 3 | 2 |
| பட்டியலிலிருந்து அகற்றப்பட்டவை (எண்ணிக்கை) | 3 | 3 | 2 | 2 | 2 | 10 |
| பட்டியலிடப்பட்ட கம்பனிகள் | 294 | 294 | 295 | 296 | 297 | 289 |
| வர்த்தகம் நடைபெற்ற கம்பனிகள் | 284 | 278 | 240 | 279 | 279 | 279 |
| சந்தை மூலதனவாக்கம் (ரூ.பில்.) | 3,104.9 | 2938.0 | 2,745.41 | 2,899.29 | 2,839.45 | 2,851.31 |
| சந்தை வி.உ.வி. வருட இறுதி (மடங்கு) | 19.7 | 18.0 | 12.37 | 10.60 | 9.65 | 10.83 |
| புரள்வு சந்தை மூலதனவாக்கத்திற்கு (%) | 11.0 | 8.4 | 6.2 | 7.6 | 7.0 | 6.01 |
| பங்கிலாப விளைவு வருட இறுதி (%) | 2.1 | 2.18 | 2.75 | 3.19 | 3.09 | 3.17 |
| விலை புத்தகப் பெறுமதி வருட இறுதி (மடங்கு) | 2.2 | 1.99 | 1.42 | 1.31 | 1.18 | 1.14 |
| சந்தை மூலதனவாக்கம் மொ.உ.உ. இன் % ஆக | 31 | 30 | 24.5 | 24.5 | 21.4 | 22 |
| | | | | | | |
| **விலைச் சுட்டிகள்** | | | | | | |
| அனைத்து பங்கு விலைச் சுட்டி (அ.ப.வி.சு.) | 7,299.0 | 6894.5 | 6,228.26 | 6,369.26 | 6,052.37 | 6,129.21 |
| வருடத்திற்கு வருட மாற்றம் % | 23.4 | (5.5) | (9.7) | 2.3 | (5.0) | 1.27 |
| எஸ் அன்ட பி ஸ்ரீலங்கா 20 | 4,089.1 | 3625.7 | 3,496.44 | 3,671.72 | 3,135.18 | 2,936.96 |
| வருடத்திற்கு வருட மாற்றம் % | 25.3 | (11.3) | (3.6) | 5.0 | (14.6) | (6.32) |
| | | | | | | |
| **மொத்த வருமானச் சுட்டிகள்** | | | | | | |
| அபவிசு இல் மொத்த வருமானச் சுட்டி(அபமொவசு) | 9,579.2 | 9079.9 | 8,232.66 | 8,457.09 | 8,066.97 | 8,203.82 |
| வருடத்திற்கு வருட மாற்றம் % | 26.3 | (5.2) | (9.3) | 2.7 | (4.6) | 1.70 |
| சுட்டி (எஸ் அன்ட் பி ஸ்ரீலங்கா 20 மொ.வ.சு) | 5,331.1 | 4861.5 | 4,843.17 | 5,259.85 | 4,686.71 | 4,603.57 |
| வருடத்திற்கு வருட மாற்றம் % | 29.0 | (8.8) | (0.4) | 8.6 | (10.9) | (1.77) |

| ஆண்டு | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|---|---|---|
| **தேசியமல்லாத நடவடிக்கைகள்** | | | | | | |
| வருடாந்தப் புரள்வு (ரூ.மில்) | 94,120 | 87,099 | 74,391 | 103,456 | 88,691 | 62,405 |
| கொள்வனவுகள் (ரூ.மில்.) | 104,689 | 84,414 | 74,583 | 112,285 | 77,067 | 56,537 |
| விற்பனைகள் (ரூ.மில்.) | 83,550 | 89,784 | 74,199 | 94,627 | 100,315 | 68,272 |
| தேறிய வெளிநாட்டுப் பாய்ச்சல் | 21,139 | (5,369.9) | 383.5 | 17,657.4 | (23,247.5) | (11,735) |
| வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகள் (எண். மில்.) | 1,995 | 1,721.50 | 1,420 | 1,939 | 1,180 | 2,764 |
| கொள்வனவுகள் (எண்ணிக்கை மில்.) | 2,381 | 1,730.72 | 1,572 | 2,062 | 1,060 | 3,896 |
| விற்பனைகள் (எண்ணிக்கை மில்.) | 1,610 | 1,712.27 | 1,267 | 1,817 | 1,299 | 1,631 |
| வர்த்தகங்கள் | 83,140 | 75,040 | 54,373 | 53,701 | 46,873 | 46,719 |
| கொள்வனவுகள் (எண்ணிக்கை) | 94,752 | 65,932 | 51,656 | 56,643 | 37,855 | 25,759 |
| விற்பனைகள் (எண்ணிக்கை) | 71,529 | 84,149 | 57,091 | 50,760 | 55,892 | 67,680 |
| | | | | | | |
| **கடன் சந்தை** | | | | | | |
| கம்பனிக் கடன்கள் | | | | | | |
| புரள்வு (ரூ. 000) | 7,139,730.4 | 4,714,012.7 | 2,932,154.0 | 3,592,905.5 | 4,540,599 | 5,677,080 |
| வர்த்தகங்களின் எண்ணிக்கை | 401 | 220 | 291 | 529 | 293 | 234 |
| வர்த்தகம் செய். தொ.க.எண்ணிக்கை (000) | 56,909 | 42,201 | 28,335 | 35,696 | 44,024 | 55,643 |
| | | | | | | |
| **அரசாங்கக் கடன்கள்** | | | | | | |
| புரள்வு (ரூ. 000) | | | - | | - | |
| வர்த்தகங்களின் எண்ணிக்கை | | | - | | - | |
| வர்த்தகம் செய். பிணை..எண்ணிக்கை (000) | | | - | | - | |
| | | | | | | |
| **நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகள்** | | | | | | |
| தேறிய சொத்தின் பெறுமதி (ரூ.மில்.) | 127,356 | 129,844 | 103,890 | 128,804 | 64.22 | 104.79 |
| அலகுடமையாளர்கள் (எண்ணிக்கை) | 32,619 | 38,140 | 41,154 | 41,037 | 42,093 | 46,481 |
| வழங்கப்பட்ட அலகுகள் (எண். 000) | 9,772 | 8,812 | 7,142 | 7,639 | 3,368 | 4,769 |
| பங்குகளில் முதலீடு (ரூ.மில்.) | 14,591 | 14,376 | 13,786 | 12,466 | 9,416 | 9,841 |
| தி.உ.ண்டியல்களில் முதலீடு (ரூ.மில்.) | 60,897 | 28,294 | 49,299 | 24,386 | 3,379 | 9,150 |
| | | | | | | |
| ஏனைய முதலீட்டுக்கருவிகளில் முதலீடுழுழு (ரூ.மில்.) | 52,202 | 87,272 | 40,553 | 91,732 | 50,601 | 84,542 |

மூலம்: கொ.ப.ப., நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளது முறைமைப்படுத்தல் சமர்ப்பிப்புகள்

**வணிகத் தாள்கள், நம்பிக்கைச் சான்றிதழ்கள், தொகுதிக்கடன்கள் மற்றும் வங்கி வைப்புகள்

# வருடத்தின் சிறப்பம்சங்கள்



உலக முதலீட்டு கிழமையின்போது நிதியியல் கல்வியறிவிற்காக மணி அடித்தல்



சான்றிதழ்கள் மற்றும் டிப்ளோமா விருது வழங்கல் வைபவம்




சட்டத்துறை மாணவர்களுக்கான செயலமர்வு



கண்டியில் சி.ந.மு. மன்றம்



கூட்டாண்மை ஆளுகை வட்டமேசை கலந்துரையாடல்



FITIS தொழில்நுட்ப சி.ந.மு. மன்றம்



யாழ்ப்பாணத்தில் சி.ந.மு. மன்றம்



பொலன்னறுவையில் முதலீட்டாளர் மன்றம்




மாத்தறையில் பிராந்தி முதலீட்டாளர் மன்றம்



மாத்தறையில் சி.ந.மு. மன்றம்



தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்திக் கருத்தரங்கு



யாழ்ப்பாணத்தில் முதலீட்டாளர் மன்றம்




யாழ்ப்பாணத்தில் தொழில்முனைவு ஸ்ரீலங்கா கண்காட்சி

# வருடத்தின் சிறப்பம்சங்கள்



இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் மதிப்பிற்குரிய டேவிட் ஹொலியுடனான சந்திப்பு



ஆசிரியர்களுக்கான கல்வி நிகழ்ச்சித்திட்டம்



எம்பிலிபிட்டியவில் பிராந்திய முதலீட்டாளர் மன்றம்




பொலன்னறுவையில் சி.ந.மு. மன்றம்



திஸ்ஸமஹாராமவில் முதலீட்டாளர் மன்றம்




இலங்கையில் முதலிடுங்கள் - சிங்கப்பூரில் முதலீட்டு மன்றம்



பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகளுடனான கலந்துரையாடல்



இலங்கையின் பட்டய நிதியியல் பகுப்பாய்வளர் அமைப்புடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல்



உயர்தர மாணவர்களுக்கான கருத்தரங்கு



கணக்காய்வாளர்கள் மற்றும் ஏனைய சந்தை பங்காளிகளுடனான வட்டமேசை கலந்துரையாடல்



சபரகமுவ பல்கலைக்கழக மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட கருத்தரங்கு



“முதலீட்டாளர் 2020” உயர்தர தொலைக்காட்சி புதிர் ஆரம்ப மட்ட பரீட்சைகள்




உலக முதலீட்டாளர் வாரத்தில் உ.வ.மை. இல் இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. இன் விற்பனைக் காட்சியரங்கு

# நிதியியல் அறிக்கைகள்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு
கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை | 70-72
நிதி நிலைமைக் கூற்று | 73
நிதிச் செயற்திறன் கூற்று | 74
ஒதுக்கங்களில் ஏற்பட்ட மாற்றங்களின் கூற்று | 75
காசுப் பாய்ச்சல் கூற்று | 76-77
கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதிக்
கூற்றுக்களுக்கான குறிப்புகளும் | 78-92

தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்
கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை | 93-94
நிதி நிலைமைக் கூற்று | 95
நிதிச் செயற்திறன் கூற்று | 96
தேறிய சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றங்களின் கூற்று | 97
காசுப் பாய்ச்சல் கூற்று | 98
கணக்கீட்டுக் கொள்கைகளும்
நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளும் | 99-100

# கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My No. BAF/H/SEC/1/19/3 | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 21 August 2020 |

தலைவர்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1. அபிப்பிராயம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ("ஆணைக்குழு") 2019 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, ஒதுக்கங்கள் மாற்று கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்புக்கள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களையும் உள்ளடக்கியதான 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

ஆணைக்குழுவின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இதனுடன் இணைந்த நிதிக் கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

நான் எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொண்டேன். இந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொறுத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 முகாமைத்துவத்தின் மற்றும் நிதிக் கூற்றுக்களின் ஆளுமைக்கு பொறுப்பாயுள்ளோரின் பொறுப்புகள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்ற நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளதுடன், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் முகாமைத்துவமானது, ஓர் நிறுவனத் தொடர்ச்சியாக செயலாற்றுவதற்கான ஆணைக்குழுவின் ஆற்றலை மதிப்பிடுவதற்கும், நிறுவனத் தொடர்ச்சி தொடர்பான பொருத்தமான விடயங்களை வெளிப்படுத்துவதற்கும், முகாமைத்துவம் ஆணைக்குழுவினை கலைப்பதற்கு அல்லது அதன் செயற்பாடுகளை நிறுத்துவதற்கான நோக்கத்தை கொண்டிருத்தாலன்றி அல்லது ஓர் யதார்த்தமான மாற்று வழியின்றி அவ்வாறு செயற்படவேண்டியிருந்தாலன்றி, நிறுவனத் தொடர்ச்சி அடிப்படையிலான கணக்கீட்டினை பயன்படுத்துவதற்கும் பொறுப்பாயுள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

ஆளுமையினை பொறுப்பேற்றோர் ஆணைக்குழுவின் நிதியியல் அறிக்கையிடல் செயல்முறையினை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பாளியாவர்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) பிரிவின் பிரகாரம், ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலாகால நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதனை இயலுமைக்குவதற்காக, அதன் அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி ஒழுங்கான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பராமரிக்குமாறு ஆணைக்குழு வேண்டப்படுகின்றது.

**1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

நிதிக் கூற்றுக்கள் முழுமையாக ஏதேனும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏதேனும் பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதா என்பது பற்றி சாதாரண உறுதிமொழியினை பெற்றுக்கொள்வதும், எனது அபிப்பிராயத்தினை உள்ளடக்கிய ஓர் கணக்காய்வு அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். சாதாரண உறுதிமொழி என்பது ஓர் உயர் மட்டத்திலான உறுதிமொழி என்பதுடன், ஆனால் இது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட ஓர் கணக்காய்வானது எந்நேரமும் ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை, அவ்வாறு ஒன்று காணப்படுமாயின், இனங்காணும் என்ற உறுதிமொழியல்ல. பிறழ் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறிலிருந்து எழலாம் என்பதுடன், அவை தனியாக அல்லது கூட்டாக, இந்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பயனாளிகளின் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக்கூடும் என்று சாதாரணமாக எதிர்பார்ப்பு காணப்படுமாயின் அவை கருதத்தக்கதாக கருதப்படும்.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வின் ஓர் பகுதியாக, நான் கணக்காய்வு முழுவதும் தொழில்முறை தீர்ப்பினை உபயோகித்தும் தொழில்முறை ஐயவாதத்தினையும் பராமரித்தேன், அத்துடன் நான்,

- நிதிக் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்படும் கருதத்தக்க பிறழ் கூற்றுக்களது இடர்நேர்கைகளை இனங்கண்டு மதிப்பிடுதல் மற்றும் அந்த இடர்நேர்கைகளுக்கு மறுமொழியளிக்கும் கணக்காய்வு செயற்பாடுகளை வடிவமைத்து செயற்படுத்தல் மற்றும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்குதற்கான அடிப்படைக்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் என்பதாகும். ஓர் தவறின் விளைவாக எழக்கூடிய இடர்நேர்கையிலும் பார்க்க மோசடியின் விளைவாக ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை இனங்காணாத இடர்நேர்கையானது அதிகமாகும். ஏனெனில், மோசடியானது கூட்டுச்சதி, போலி ஆவணம், வேண்டுமென்றே விடுபடல், பிறழ் கூற்றுக்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினை மேலாணை செய்தல் போன்றவற்றை உள்ளடக்கும்.

- ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதித்தன்மையில் ஓர் அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்கன்றி, சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு செயல்முறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்விற்கு பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளில் ஓர் புரிந்துணர்வினை பெற்றுக்கொள்ளல்.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருந்துதன்மை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட இது தொடர்பான வெளிப்படுத்தல்களை மதிப்பீடு செய்தல்

- முகாமைத்துவத்தின் நிறுவன தொடர்நிலை அடிப்படையிலான கணக்கீட்டுப் பயன்பாட்டின் பொருந்துதன்மை மற்றும் பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதற்கான ஆணைக்குழுவின் ஆற்றலில் கருதத்தக்களவு சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான கருதத்தக்களவு நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பவற்றின் அடிப்படையில் நிறைவுசெய்தல். ஓர் கருதத்தக்களவு நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் நிறைவுசெய்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் நான் கவனத்தை ஈர்க்க வேண்டியுள்ளது அல்லது அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதின்றி காணப்பட்டால் எனது அபிப்பிராயத்தினை திருத்தவேண்டியுள்ளது. எனது கணக்காய்வாளரது அறிக்கை திகதியிடப்பட்ட நாள் வரைக்குமான கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் எனது நிறைவுறுதல்கள் காணப்படும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் ஆணைக்குழு நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதனை நிறுத்த காரணமாயிருக்கலாம்.

# கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்களாக, நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த காட்சியளிப்பு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீடு செய்வதுடன், நிதிக் கூற்றுக்கள், அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளது நியாயமான காட்சியளிப்பினை அடையும் விதத்தில் பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதையும் மதிப்பீடு செய்கின்றது.

ஆளுமை தொடர்பாக பொறுப்பாளிகளுடன் ஏனைய விடயங்களுக்கிடையில், எனது கணக்காய்வின்போது உள்ளகக் கட்டுப்பாடுகளில் நான் கண்டுபிடித்த கருதத்தக்க குறைகள் உள்ளடங்களாக கருதத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புகள் குறித்து தொடர்புகொண்டேன்.

**2. ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டமானது பின்வரும் தேவைப்பாடுகளுக்காக குறிப்பிட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

- கணக்காய்விற்கு தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுள்ளேன் மற்றும் எனது பரிசீலனையிலிருந்து, 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவின் தேவைக்கேற்ப ஆணைக்குழுவானது முறையான கணக்கீட்டு பதிவுகளை வைத்துள்ளதான தோற்றத்தை வழங்குகின்றது.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iii) பிரிவின் தேவைக்கேற்ப சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்திற்கு ஒத்ததாக காணப்படுகின்றது.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iv) பிரிவின் தேவைக்கேற்ப காட்சிப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்குகின்றது.

செயலாற்றப்பட்ட செயல்முறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில், கருதத்தக்க விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது, எனது கவனத்திற்கு பின்வருவன எதுவும் வரவில்லை.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (டி) பிரிவின் தேவைக்கேற்ப வழக்கமான வணிக நிகழ்வுகளுக்கு அப்பால் ஆணைக்குழுவினது ஆளுமை அங்கத்தின் யாரேனும் அங்கத்தவர் ஆணைக்குழுவினால் செய்து கொள்ளப்பட்ட எவ்வித ஒப்பந்தத்திலும் ஏதேனும் நேரடியான அல்லது மறைமுகமான நலன்களை கொண்டிருந்தார் என குறிப்பிடுவதற்கு

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எவ்) பிரிவின் தேவைக்கேற்ப ஏதேனும் பிரயோகிக்கத்தக்க எழுத்துமூல சட்டம், ஆணைக்குழுவினது ஆளுமை அங்கத்தினால் வழங்கப்பட்ட பொதுவான மற்றும் விசேட பணிப்புரைகளுக்கு ஆணைக்குழு இணக்கப்பாடு காணவில்லை என குறிப்பிடுவதற்கு

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஜி) பிரிவின் தேவைக்கேற்ப ஆணைக்குழுவானது அதன் அதிகாரங்கள், செயலாற்றுகைகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றவில்லை என குறிப்பிடுவதற்கு

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எச்) பிரிவின் தேவைக்கேற்ப கொடுக்கப்பட்ட கால எல்லைக்குள் மற்றும் பிரயோகிக்கத்தக்க சட்டங்களுக்கு ஏற்றாற்போல் ஆணைக்குழுவின் வளங்கள் சிக்கனமாக, திறன்பட மற்றும் பயனுறுதிமிக்க விதத்தில் பெறப்படவில்லை மற்றும் பயன்டுத்தப்படவில்லை என குறிப்பிடுவதற்கு

**டபிள்யு. பி. சி. விக்கிரமரத்ன**
கணக்காய்வாளர் அதிபதி

# நிதி நிலைமைக் கூற்று

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

| 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறானது | குறிப்புகள் | 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | |
| ஆதனங்கள், பொறித்தொகுதி,உபகரணங்கள் | 1 | 87,921,497 | 62,478,273 |
| தீர்வை நிதியம் | 2 | 1,972,252,215 | 2,265,755,869 |
| இழப்பீட்டு நிதியம் | 3 | 381,455,159 | 410,500,829 |
| | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்புக்கள் | 4 | 1,480,653 | 1,324,161 |
| வருமதிகள் | 5 | 7,906,073 | 21,609,738 |
| தீர்வை நிதியம் | 2 | 817,511,467 | 505,188,942 |
| இழப்பீட்டு நிதியம் | 3 | 80,508,785 | 6,941,727 |
| வைப்புகள், முற்பணம், முற்கொடுப்பனவுகள் | 6 | 15,521,775 | 15,346,689 |
| காசும் காசுக்குச் சமனானவையும் | 7 | 168,713,076 | 29,287,171 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | 3,533,270,700 | 3,318,433,400 |
| | | | |
| **நிதியங்களும் பொறுப்புகளும்** | | | |
| **ஈடுபடுத்தப்பட்ட நிதியங்களும் ஒதுக்கங்களும்** | | | |
| திரண்ட நிதியம் | 8 | - | - |
| தீர்வை நிதியம் | 9 | 2,789,763,682 | 2,770,944,811 |
| இழப்பீட்டு நிதியம் | 10 | 461,963,945 | 417,442,556 |
| | | 3,251,727,627 | 3,188,387,367 |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | |
| கொடை-தீர்வை நிதியத்திலிருந்து மூலதனச் செலவுகளுக்கான மாற்றல்கள் | 11 | 81,571,796 | 56,128,573 |
| ஓய்வுபெறல் நலன் கடப்பாடு | 13 | 43,464,269 | 44,347,652 |
| | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| செலுத்தவேண்டிய வருமானவரி | | 33,316,205 | - |
| கடன் கொடுநர்களும் அட்டுறுக்களும் | 14 | 119,841,708 | 26,625,821 |
| பெற்ற முற்பணங்கள் | | 3,349,095 | 2,943,988 |
| **மொத்த நிதியங்களும் பொறுப்புக்களும்** | | 3,533,270,700 | 3,318,433,400 |

78 முதல் 92 வரையுள்ள பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும், குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் ஒன்றிணைந்த பாகமாகவுள்ளன.

இஇலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் இந்த நிதிக்கூற்றின் தயாரிப்பிற்கும் சமர்ப்பித்தலுக்கும் பொறுப்பானவர்களாவர்.

**இஇலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவிற்காகவும் அதன் சார்பிலும்**

**சிந்தக்க மெண்டிஸ்**
பணிப்பாளர் நாயகம்
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

**விராஜ் தயாரத்ன ஜ.ச.**
தலைவர்
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

**ஜி பி என் டிலானி**
உதவிப் பணிப்பாளர் நிதி
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

கொழும்பு.
27 ஜூலை 2020

# நிதிச் செயற்திறன் கூற்று

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

| 2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | குறிப்புகள் | 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | | 3,171,963 | 3,019,240 |
| நிர்வாகக் கட்டணங்கள் | | 1,531,065 | 2,556,086 |
| கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் | | 4,033,843 | 4,198,430 |
| வட்டி வருமானம் | | 3,728,019 | 268,284 |
| ஏனைய வருமானம் | | 2,015,176 | 236,753 |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களது விற்பனை மீதான இலாபம் / நட்டம் | | - | 32,425 |
| அரசாங்க மானியம் - நி.து.ந.தி. | 12 | 81,124,254 | - |
| மானியங்களின் அங்கீகாரம் | 11 | 16,513,523 | 17,585,330 |
| | | 112,117,843 | 27,896,548 |
| **செலவினம்** | | | |
| ஆளணிச் செலவுகள் | 15 | (233,214,148) | (231,236,983) |
| நிர்வாக, தாபனச் செலவுகள் | 16 | (167,180,480) | (153,976,071) |
| மூலதனச் சந்தை அபிவிருத்திச் செலவுகள் | 17 | (53,736,624) | (85,159,152) |
| நிதிச் செலவினங்கள் | 18 | (64,525) | (30,556) |
| **மொத்தச் செலவினம்** | | (454,195,777) | (470,402,762) |
| வருமானவரிச் செலவினங்கள் | 19 | (33,316,205) | - |
| **வருமானத்திலும் மேலான மிகை வருமானச் செலவினம்** | | (375,394,139) | (442,506,214) |
| **தொழிற்பாட்டுச் செலவுகளை சந்திப்பதற்கு தீர்வை நிதியத்திலிருந்து செய்யப்பட்ட மாற்றல்கள்** | | 375,394,139 | 442,506,214 |

78 முதல் 92 வரையுள்ள பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும், குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் ஒன்றிணைந்த பாகமாகவுள்ளன.

# ஒதுக்கங்களில் ஏற்பட்ட மாற்றங்களின் கூற்று

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

| 2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | தீர்வை நிதியம் ரூபா | இழப்பீட்டு நிதியம் ரூபா | திரண்ட நிதியம் ரூபா | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|
| **2018 ஜனவரி 1 இல் உள்ளவாறான மீதி** | 2,702,455,721 | 377,637,604 | - | 3,080,093,325 |
| இவ்வருடத்திற்கான வருமானத்திலும் மிகையான செலவினம் | - | - | (442,506,214) | (442,506,214) |
| கூட்டு: வருடத்தில் பெறப்பட்ட தீர்வை | 250,704,350 | - | - | 250,704,350 |
| வருடத்தில் பெறப்பட்ட வட்டி | 265,303,666 | 39,829,392 | - | 305,133,058 |
| | 3,218,463,737 | 417,466,996 | (442,506,214) | 3,193,424,519 |
| தீர்வை நிதியத்திலிருந்து தேறிய செயற்பாட்டு செலவினம் நோக்கிய மாற்றல்கள் | (447,460,218) | - | 442,506,214 | (4,954,004) |
| வங்கிக் கட்டணங்கள் | (58,708) | (24,440) | - | (83,148) |
| | (447,518,926) | (24,440) | 442,506,214 | (5,037,152) |
| **2018 டிசம்பர் 31இல் உள்ளவாறான திருத்திய மீதி** | 2,770,944,811 | 417,442,556 | - | 3,188,387,367 |
| **2019 ஜனவரி 1 இல் உள்ளவாறான மீதி** | 2,770,944,811 | 417,442,556 | - | 3,188,387,367 |
| இவ்வருடத்திற்கான வருமானத்திலும் மிகையான செலவினம் | - | - | (375,394,139) | (375,394,139) |
| கூட்டு: வருடத்தில் பெறப்பட்ட தீர்வை | 223,020,518 | - | - | 223,020,518 |
| வருடத்தில் பெறப்பட்ட வட்டி | 265,815,787 | 44,537,379 | - | 310,353,166 |
| | 3,259,781,116 | 461,979,935 | (375,394,139) | 3,346,366,912 |
| தீர்வை நிதியத்திலிருந்து தேறிய செயற்பாட்டு மற்றும் மூலதனச் செலவினங்கள் நோக்கிய மாற்றல்கள் | (417,350,885) | - | 375,394,139 | (41,956,746) |
| திரண்ட நிதியத்திற்கான நிதி மாற்றல்கள் | (52,616,373) | - | - | (52,616,373) |
| வங்கிக் கட்டணங்கள் | (50,176) | (15,990) | - | (66,166) |
| | (470,017,434) | (15,990) | 375,394,139 | (94,639,285) |
| **2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | 2,789,763,682 | 461,963,945 | - | 3,251,727,627 |

78 முதல் 92 வரையுள்ள பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும், குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் ஒன்றிணைந்த பாகமாகவுள்ளன.

# காசுப் பாய்ச்சல் கூற்று

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

| 2019 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | | |
| இ.பி.ப.ஆ. இன் தேறிய அதிகரிப்பு /(குறைவு) | | - | - |
| தீர்வை நிதியத்தின் தேறிய அதிகரிப்பு /(குறைவு) | | 18,818,871 | 68,489,090 |
| இழப்பீட்டு நிதியத்தின் தேறிய அதிகரிப்ப /(குறைவு) | | 44,521,389 | 39,804,952 |
| | | 63,340,260 | 108,294,042 |
| **சீராக்கல்கள்** | | | |
| பெறுமானத் தேய்வு | 1 | 16,513,523 | 17,585,330 |
| ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் விற்பனை மீதான இலாபம் / (நட்டம்) | | - | (32,425) |
| மானியங்களின் அங்கீகாரம் | 11 | (16,513,523) | (17,585,330) |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 13 | 5,558,515 | 13,045,173 |
| **தொழிற்படு மூலதன மாற்றத்துக்கு முன்னரான தேறிய மிகை** | | 5,558,515 | 13,012,748 |
| **தொழிற்படு மூலதனத்தில் மாற்றங்கள் - இ.பி.ப.ஆ.** | | | |
| இருப்புக்களின் (அதிகரிப்பு) / குறைவு | | (156,492) | 144,555 |
| பெறத்தக்கவைகளின் (அதிகரிப்பு) / குறைவு | | 13,703,665 | (18,842,437) |
| வைப்புகள், முற்பணம், முற்பணக் கொடுப்பனவுகளின் (அதிகரிப்பு) / குறைவு | | (175,087) | (7,820,889) |
| முற்பணப் பெறுகைகளின் அதிகரிப்பு / (குறைவு) | | 405,111 | (471,920) |
| கடன் கொடுநர், அட்டுறுகளின் அதிகரிப்பு / (குறைவு) | | 81,860,967 | 7,958,856 |
| செலுத்தவேண்டியவைகளின் அதிகரிப்பு / (குறைவு) | | 33,316,205 | - |
| | | 128,954,369 | (19,031,835) |
| **தொழிற்படு மூலதனத்தில் மாற்றங்கள் - தீர்வை நிதியம்** | | | |
| பணியாட்டொகுதி கடன்களின் (அதிகரிப்பு) / குறைவு | | 713,208 | 3,304,852 |
| பெறத்தக்க தீர்வைகளின் (அதிகரிப்பு) / குறைவு | | (1,822,794) | (174,610) |
| பெறத்தக்கவைகளின் - சம்பத் வங்கி (அதிகரிப்பு) / குறைவு | | 4,611 | 26,427 |
| பெறத்தக்கவைகளின் - இ.பி.ப.ஆ. (அதிகரிப்பு) / குறைவு | | (84,150,977) | 7,247,079 |
| திறைசேரி முறிகளிலிருந்து பெறத்தக்க வட்டியின் (அதிகரிப்பு) / குறைவு | | (31,291,094) | (961,180) |
| திறைசேரி உண்டியல்களிலிருந்து பெறத்தக்க வட்டியின் (அதிகரிப்பு) / குறைவு | | 1,904,008 | (1,904,008) |
| மீள்கொடுப்பனவு உடன்படிக்கைகளிலிருந்து பெறத்தக்க வட்டியின் (அதிகரிப்பு) / குறைவு | | (318,424) | 1,249,998 |
| குத்தகை வாடகை வைப்பின் (அதிகரிப்பு) / குறைவு | | (2,475,444) | (4,843,260) |
| செலுத்தவேண்டியவைகளின் அதிகரிப்பு / (குறைவு) | | (23,756,398) | 23,756,398 |
| | | (141,193,304) | 27,701,696 |
| **தொழிற்படு மூலதனத்தில் மாற்றங்கள் - இழப்பீட்டு நிதியம்** | | | |
| திறைசேரி முறிகளிலிருந்து பெறத்தக்க வட்டியின் (அதிகரிப்பு) / குறைவு | | (5,026,281) | (2,095,765) |
| மீள்கொடுப்பனவு உடன்படிக்கைகளிலிருந்து பெறத்தக்க வட்டியின் (அதிகரிப்பு) / குறைவு | | (71,939) | 165,295 |
| | | (5,098,220) | (1,930,470) |
| **தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து பிறப்பிக்கப்பட்ட காசு** | | 51,561,620 | 128,046,181 |
| இவ்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட பணிக்கொடை | | (6,441,900) | (1,119,434) |
| **தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு உள்/(வெளி) பாய்ச்சல்** | | 45,119,720 | 126,926,747 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | | |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல் - இ.பி.ப.ஆ.** | | | |
| ஆதனங்கள், பொறித்தொகுதி, உபகரணங்களின் கொள்வனவு | 1 | (30,601,826) | (4,954,004) |
| ஆதனங்கள், பொறித்தொகுதி, உபகரணங்களின் விற்பனை வருமானம் | | - | 33,493 |
| முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு உள்/(வெளி) பாயச்சல் | | (30,601,826) | (4,920,511) |

| 2019 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|---|
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல் - தீர்வை நிதியம்** | | | |
| அரச நிறுவனங்களின் தற்காலிக மேலதிக நிதியத்திலான முதலீடு | | (18,055,738) | (16,915,870) |
| திறைசேரி முறிகளிலான முதலீடு | | 295,456,866 | (67,495,152) |
| திறைசேரி உண்டியல்களிலான முதலீடு | | 134,892,100 | (134,892,100) |
| | | 412,293,228 | (219,303,122) |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல் - தீர்வை நிதியம்** | | | |
| திறைசேரி முறிகளிலான முதலீடு | | 29,045,670 | (64,423,057) |
| முதலீட்டுச் செயற்பாடுகனிலான தேறிய காசு உட்பாய்ச்சல்.'.(வெளிப்பாய்ச்சல்) | | 29,045,670 | (64,423,057) |
| முதலீட்டுச் செயற்பாடுகனிலான தேறிய காசு உட்பாய்ச்சல்/(வெளிப்பாய்ச்சல்) | | 410,737,072 | (288,646,690) |
| **நிதியளித்தற் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | | |
| **தீர்வை நிதியத்திலிருந்து மூலதன மாற்றல்கள்** | | | |
| நிதியளித்தற் செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு உள்/(வெளி) பாய்ச்சல் | 11 | 41,956,746 | 4,954,004 |
| முதலீட்டுச் செயற்பாடுகனிலான தேறிய காசு உட்பாய்ச்சல்/(வெளிப்பாய்ச்சல்) | | 41,956,746 | 4,954,004 |
| காசும் காசுக்குச் சமமானவற்றிலும் தேறிய அதிகரிப்பு (குறைவு) | | 497,813,538 | (156,765,939) |
| இக் காலப்பகுதியின் தொடக்கத்தில் காசும் காசுக்குச் சமமானவைகளும் (குறிப்பு - அ) | | 95,490,986 | 252,256,925 |
| **இக் காலப்பகுதியின் இறுதியில் காசும் காசுக்குச் சமமானவைகளும் (குறிப்பு - ஆ)** | | 593,304,524 | 95,490,986 |
| **குறிப்பு (அ)** | | | |
| **தொடக்கக் காலப்பகுதியில் காசும் காசுக்குச் சமமானவைகளும்** | | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடு - இ.பி.ப.ஆ. | | 40,000,000 | - |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடு - தீர்வை நிதியம் | | 57,420,000 | 187,245,617 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடு - இழப்பீட்டு நிதியம் | | 1,458,573 | - |
| வங்கியிலுள்ள காசு - இ.பி.ப.ஆ. | | (10,752,829) | 36,352,199 |
| வங்கியிலுள்ள காசு - தீர்வை நிதியம் | | 7,217,192 | 503,911 |
| வங்கியிலுள்ள காசு - இழப்பீட்டு நிதியம் | | 108,050 | 28,115,198 |
| கையிலுள்ள காசு - இ.பி.ப.ஆ. | | 40,000 | 40,000 |
| | | 95,490,986 | 252,256,925 |
| **குறிப்பு (ஆ)** | | | |
| **இக்காலப்பகுதியின் இறுதியில் காசும் காசுக்குச் சமமானவைகளும்** | | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடு - இ.பி.ப.ஆ. | | 167,595,926 | 40,000,000 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடு - தீர்வை நிதியம் | | 350,000,000 | 57,420,000 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடு - இழப்பீட்டு நிதியம் | | 69,852,733 | 1,458,573 |
| வங்கியிலுள்ள காசு - இ.பி.ப.ஆ. | | 1,077,150 | (10,752,829) |
| வங்கியிலுள்ள காசு - தீர்வை நிதியம் | | 4,555,987 | 7,217,192 |
| வங்கியிலுள்ள காசு - இழப்பீட்டு நிதியம் | | 182,728 | 108,050 |
| கையிலுள்ள காசு - இ.பி.ப.ஆ. | | 40,000 | 40,000 |
| | | 593,304,524 | 95,490,986 |

78 முதல் 92 வரையுள்ள பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும், குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் ஒன்றிணைந்த பாகமாகவுள்ளன.

# கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளும்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

## 1 பொதுவானவை

### 1.1 அறிக்கையிடும் நிறுவனம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவானது (இ.பி.ப.ஆ.) 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ், 1991 ஆம் ஆண்டின் 26ஆம் இலக்கச் சட்டம், 2003 ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கச் சட்டம், 2009 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்கச் சட்டம் ஆகியவற்றால் திருத்தியமைக்கப்பட்டது, உருவாக்கப்பட்ட இலாபமீட்டாத ஓர் சட்டபூர்வமான சபையாகும். இ.பி.ப.ஆ. இலங்கை சனநாயக சோசலிஷ குடியரசில் இடம்கொண்டுள்ளதுடன் அது கொழும்பு 1, எச்சிலன் சதுக்கம், உலக வர்த்தக மையம், கிழக்குக் கோபுரம் 28 ஆம் மற்றும் 29 ஆம் மாடிகளில் அமைந்துள்ளது.

### 1.2 தொழிற்பாட்டின் தன்மையும் பிரதான நடவடிக்கைகளும்

இ.பி.ப.ஆ. சட்டத்தின் 12 ஆம் பிரிவிற்கமைய, இ.பி.ப.ஆ. இன் குறிக்கோள்கள்,

(அ) ஒழுங்காகவும் மற்றும் நியாயமாகவும் பிணையங்கள் வழங்கக்கூடியதானதும் மற்றும் வர்த்தகம் செய்யக்கூடியதுமான ஓர் சந்தையினை உருவாக்கி பராமரித்தல்;

(ஆ) முதலீட்டாளர்களது நலனை பாதுகாத்தல்;

(இ) ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட பங்குத் தரகர் அல்லது உரிமமளிக்கப்பட்ட பங்கு வர்த்தகர் அவரது ஒப்பந்தக் கடப்பாடுகளை சந்திப்பதற்கு இயலாமையாகக் காணப்படுவதன் விளைவாக எழக்கூடிய நிதியியல் நட்டத்திலிருந்து முதலீட்டாளர்களைப் பாதுகாப்பதற்காக இழப்பீட்டு நிதியமொன்றை செயற்படுத்துதல்;

(ஈ) பிணையங்கள் சந்தையினை முறைமைப்படுத்தல் மற்றும் அத்தகைய சந்தையில் தொழில்சார் நியமங்கள் பேணப்படுவதனை உறுதிசெய்தல்.

மீளாய்வாண்டில் இ.பி.ப.ஆ. இன் குறிக்கோள்களின் தன்மையில் எவ்வித மாற்றங்களும் காணப்படவில்லை.

### 1.3 அமைவுறல் கூற்று

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவானது அதன் நிதிக்கூற்றுக்களை இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்டுள்ள இலங்கை அரசாங்கத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு (இ.அ.க.நி.) ஏற்ப தயாரித்துள்ளது. நிதிக்கூற்றுக்கள், நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயற்திறன் கூற்று, ஒதுக்கங்களில் ஏற்படும் மாற்றங்களிலான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் இவற்றுடன் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்க தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளையும் உள்ளடக்குகின்றது.

### 1.4 நிதிக்கூற்றுக்களுக்கான பொறுப்பு

ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் மற்றும் சமர்ப்பிப்பதற்கும் பொறுப்பாளியாவார்கள்.

### 1.5 நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் இ.பி.ப.ஆ. இன் தொடர்ச்சியாக தொடர்ந்து செல்லக்கூடிய ஆற்றலை மதிப்பீடு செய்தனர். ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் இ.பி.ப.ஆ. எதிர்வரும் காலங்களில் தனது செயற்பாட்டு வாழ்க்கையைத் தொடர்வதற்கு போதியளவு வளங்களைக் கொண்டுள்ளது என ஓர் நியாயமான எதிர்பார்ப்பினைக் கொண்டுள்ளார்கள். எதிர்காலம் பற்றிய கிடைக்கப்பெற்ற அனைத்து தகவல்களையும் கருத்திற்கொண்டு ஒழித்துக்கட்டலுக்கோ அல்லது செயற்பாட்டினை நிறுத்துவதற்கான தேவையொன்றை இ.பி.ப.ஆ. எதிர்பார்க்கவில்லை. இதற்கமைய நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது இ.பி.ப.ஆ. நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையினை பின்பற்றுவதனைத் தொடர்ந்ததுடன் கணக்கீட்டுக் கொள்கைகள் காலம்பூராவும் முறையாகப் பிரயோகிக்கப்பட்டன.

### 1.6 தயாரிப்பிற்கான அடிப்படை

ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாவில், கிட்டிய முழு ரூபாய்க்கு, சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள், நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாடுகள் தவிர்த்தலாக, அட்டுறு மற்றும் வரலாற்றுக் கிரய மரபொழுங்கின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன. நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாடுகளைப் பொறுத்தளவில் தேறிய பொறுப்பானது நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாடுகளின் நிகழ்காலப் பெறுமதியாகவும், அதனுடன் அங்கீகரிக்கப்படாத ஆயுள் எதிர்பார்ப்பு இலாபங்களை கூட்டியும், அதிலிருந்து அங்கீகரிக்கப்படாத முன்னைய சேவைக் கிரயத்தையும் அங்கீகரிக்கப்படாத ஆயுள் எதிர்பார்ப்பு நட்டத்தினை கழித்தும் கணிப்பிடப்படுகின்றது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது இ.பி.ப.ஆ. நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையினை பின்பற்றுவதனைத் தொடர்ந்ததுடன் கணக்கீட்டுக் கொள்கைகள் காலம்பூராவும் முறையாகப் பிரயோகிக்கப்பட்டன.

### 1.7 மதிப்பீடுகள் மற்றும் நியாயப்பாடுகளின் பயன்பாடு

நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பானது முகாமைத்துவம் பின்வருவனவற்றை மேற்கொள்ளவேண்டுமென வேண்டப்படுகின்றது. வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மற்றும் அதனுடனிணைந்த வெளிப்படுத்தல்களும் எதிர்பாரா பொறுப்புக்களின் வெளிப்படுத்தல்கள் என அறிக்கையிடப்படும் தொகையில் நியாயப்பாடுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பன தாக்கத்தினை ஏற்படுத்தலாம். இந்த மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பனவற்றின் நிச்சயமற்றதன்மையானது, எதிர்வரும் காலப்பகுதியில் பாதிக்கப்படும் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களது கொண்டுசெல்லப்படும் தொகையில் கணிசமானளவு செம்மையாக்கல்கள் தேவைப்படும் விளைவினை உருவாக்கலாம். மதிப்பீடுகளும் உள்ளார்ந்த அனுமானங்களும் தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றது. மதிப்பீடுகளுக்கான திருத்தியமைத்தல்கள் வருங்காலத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட தொகையில் மிகவும் கணிசமானளவு விளைவினைக் கொண்டுள்ளவற்றில்

பிரயோகிக்கப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளில் மேற்கொள்ளப்படும் நியாயப்பாடுகள் பற்றிய தகவலானது நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாடு குறிப்பினில் விபரிக்கப்பட்டுள்ளன. நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாட்டின் கிரயமானது ஆயுள் எதிர்பார்ப்பு கணிப்பீட்டினை பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது. ஆயுள் எதிர்பார்ப்பு கணிப்பீடானது கழிவு வீதங்கள், எதிர்கால வேதன அதிகரிப்புகள், இறப்பு வீதங்கள் போன்றவற்றைப் பற்றிய அனுமானங்கள் மேற்கொள்வதனை உள்ளடக்குகின்றன. இத்திட்டத்தின் நீண்டகால தன்மையின் காரணமாக, அத்தகைய மதிப்பீடுகள் கணிசமானளவு நிச்சயமற்றதன்மையினைக் கொண்டுள்ளன. ஆயுள் எதிர்பார்ப்பு கணிப்பீட்டில் பயன்படுத்தப்பட்ட அனுமானங்கள் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 13 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**1.8 செயல்பாட்டு மற்றும் காட்சியளிப்பு நாணயம்**

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன் இது இ.பி.ப.ஆ. இன் செயற்பாட்டு நாணயமாகும். மீளாய்வாண்டில் நிறுவனத்தில் காட்சிப்படுத்தல் மற்றும் செயற்பாட்டு நாணயத்தில் எவ்விதமான மாற்றங்களும் காணப்படவில்லை. அந்நிய செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் யாவும் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெற்ற சமயத்தில் காணப்பட்ட நாணயமாற்று விகிதத்தில் இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்டுள்ளன.

**1.9 முக்கியத்துவம் மற்றும் திரள்வு**

ஒத்த வகையான உருப்படியின் ஒவ்வொரு முக்கியத்துவ வகுப்பும் நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. ஒத்தமையாத தன்மை அல்லது செயற்பாட்டினை உடைய உருப்படிகள் அவை முக்கியமானவையாக இல்லாதவிடத்து மாத்திரமே தனித்தனியாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

**1.10 ஈடுசெய்தல்**

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் என்பன பின்வருவனவாறு தேவைப்பட்டாலன்றி அல்லது அனுமதிக்கப்பட்டாலன்றி ஈடுசெய்யப்படவில்லை. இ.அ.க.நி. அனுமதித்தால் அல்லது கொடுக்கல் வாங்கல் அல்லது ஏனைய நிகழ்வின் சாராம்சத்தினை ஈடுசெய்தல் பிரதிபலித்தால், பயனாளிகள் கொடுக்கல் வாங்கல்கள், ஏனைய நிகழ்வுகள் மற்றும் அவை ஏற்பட்ட நிலைமைகள் குறித்து புரிந்துகொள்ளுதல் மற்றும் இ.பி.ப.ஆ. இன் எதிர்கால காசுப்பாய்ச்சலை மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்கான ஆற்றலிலிருந்து விலகியிருந்தால்.

**1.11 ஒப்பிடப்படும் தகவல்கள்**

ஒப்பிடப்படும் எண்கள் நடைமுறை நிதியாண்டில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாற்றங்களுக்கு அமைவாக செம்மையாக்கப்பட்டுள்ளன.

**1.12 அறிக்கையிடப்படும் திகதியின் பின்னரான நிகழ்வுகள்**

அறிக்கையிடப்படும் தினத்தின் பின்னர் இடம் பெற்ற முக்கிய நிகழ்வுகள் அனைத்தும் கவனத்திற்கொள்ளப்பட்டு தேவையானவிடத்து நிதிக்கூற்றுக்களில் உகந்த செம்மையாக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**1.13 கணக்கீட்டுக் கொள்கைகளின் மாற்றங்கள்**

பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

## 2. சொத்துக்களும் பெறுமான மதிப்பீட்டின் ஆதாரங்களும்

**2.1 ஆதனங்களும் பொறித்தொகுதியும் உபகரணங்களும்**

**சொந்த ஆதனங்களும் பொறித்தொகுதியும் உபகரணங்களும் மற்றும் அருவச் சொத்துக்களும்**

ஆதனங்களும், பொறித்தொகுதியும், உபகரணங்களும் (ஆ.பொ.உ.) மற்றும் அருவச் சொத்துக்களும் அவற்றின் மீதான ஏதேனும் தற்செயலான செலவுகளும் கொள்விலையில் குறிப்பிடப்பட்டு அவற்றின் உபயோகமுள்ள ஆயுள்காலத்தில் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டும் உள்ளன. மானியமாகப் பெறப்பட்ட ஆதனங்கள் அவற்றின் நியாயமான பெறுமதியில் கணக்கிற்கொண்டு வரப்பட்டு அவற்றின் மீதான பெறுமானத் தேய்மானம் அந்தந்த ஒதுக்கக் கணக்கிற்கெதிராக செலவு வைக்கப்பட்டுள்ளது. பெறுமானத் தேய்மானம் நேர்கோட்டு அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளது.

மோட்டார் வாகனங்கள், காரியாலய உபகரணங்கள் மற்றும் மென்பொருள் உள்ளடங்கலான ஈடிபி உபகரணங்கள் மற்றும் பயிற்சி உபகரணங்கள் என்பன சொத்துக்களின் பொருளாதாரப் பயன்பாட்டுக் காலத்தினைக் கருத்திற்கொண்டு பின்வரும் சதவீதங்களில் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டன.

| | |
|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 10.00% |
| தளபாடங்களும் பொருத்திகளும் இணைப்புகளும். | 12.50% |
| அலுவலக உபகரணங்களும் ஈ.டி.பி. உபகரணங்களும் | 20.00% |
| பயிற்சி உபகரணங்கள் | 20.00% |

கொள்வனவு செய்யப்பட்ட சகல சொத்துக்களுக்கும் அவை பாவனைக்கு கிடைக்கும் தினத்திலிருந்து பெறுமானத் தேய்வு ஒதுக்கப்படுகின்றது. விற்பனை செய்யப்படும் ஆண்டில் பெறுமானத் தேய்வானது சொத்து தெரிந்துகொள்ளாத திகதி வரை ஒதுக்கப்படுகின்றது.

ஆ.பொ.உ. மற்றும் அருவச் சொத்துக்களில் பின்னர் ஏற்படும் செலவினங்கள் குறிப்பிட்ட சொத்துடன் பொதிந்துள்ளபோது அதனுடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நலன்கள் அதிகரித்தால் மாத்திரமே சொத்தாகக் கருதப்படுகின்றது. ஏனைய அனைத்து செலவினங்களும் ஆட்பட்ட செலவினமாகக் கருதப்படுகின்றன.

*கணினி வன்பொருளுடன் ஒருங்கிணையாத கணினி மென்பொருள் அருவச் சொத்துக்களாக காண்பிக்கப்பட்டு கிரயத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஆரம்ப அங்கீகரிப்பினை தொடர்ந்து இந்த அருவச் சொத்துக்கள் கிரயத்திலிருந்து ஏதேனும் திரண்ட பெறுமானக்குறைப்பினைக் கழித்து காண்பிக்கப்பட்டுள்ளன.

**2.2 முதலீடுகள்**

முதலீடுகள் உரிமமளிக்கப்பட்ட அரச வங்கிகளில் நிலையான வைப்பு மற்றும் குறுங்கால முதலீடுகளிலும், அரசாங்கத் திறைசேரி உண்டியல்கள் மற்றும் அரசாங்க திறைசேரி முறிகளில் மேற்கொள்ளப்பட்டு அவை

# கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளும்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

கொள்விலை மற்றும் அறிக்கையிடும் காலப்பகுதி வரைக்குமான அட்டுறு வட்டி அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**2.3 இருப்புக்கள்**

இருப்புக்கள் கொள்விலையில் அல்லது தேறிய தேறத்தக்க பெறுமதியில் ஆகக் குறைந்த பெறுமானத்தில் மதிப்பிடப்பட்டுள்ளன. இருப்புக்களது பெறுமதி முதல் உள் முதல் வெளியே (மு.உ.மு.வெ.) என்ற அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளன.

விரைவாக மாற்றமடையும் உலகச் சந்தை நிலவரங்களினால் மூலதனச் சந்தை தொடர்பான சட்டங்களும் விதிகளும் தொடர்ச்சியாக மாற்றமடைந்து வருவதனால் கொள்கையளவில் நூலக புத்தகங்களின் பெறுமதியானது பதிவழிப்புச் செய்யப்படுகின்றது.

**2.4 வருமதிகள்**

வருமதிகள் மதிப்பிடப்பட்ட தேறத்தக்க பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொறுப்புகளும் ஏற்பாடுகளும்

**3.1.1 வரையறுத்த பங்களிப்புத் திட்டங்கள் - ஊ.சே.நி. / ஊ.ந.பொ.நி.**

இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் சகல ஊழியர்களும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினதும் அங்கத்தவர்களாவார்கள். இ.பி.ப.ஆ. ஊழியர்களது மொத்த ஊதியத்தில், வாகன மற்றும் எரிபொருள் படிகள் தவிர்ந்த, முறையே 12% மற்றும் 3% த்தை செலுத்துகின்றது.

**3.1.2 தீர்மானிக்கப்பட்ட ஊழியர் நலன் கடப்பாடுகள் - பணிக்கொடை**

